உலக மொழிகளில் தமிழின் வேர்ச்சொற்கள்

ம.சோ. விக்டர்

உலக மொழிகளில் தமிழின் வேர்ச்சொற்கள்

ம. சோ. விக்டர்

யாத்திசைப் பதிப்பகம்

50, அண்ணா நகர்

அரியலூர் – 621 713

அலைபேசி: 98432 73914

உலக மொழிகளில் தமிழின் வேர்ச்சொற்கள்

Dr. Ma.So. Victor, M.A., Ph.D.,
Cell : 98432 73914

© ஆசிரியர்

முதல் பதிப்பு : 2012

பக்கம் : 168
படிகள் : 1200

பதிப்பு :
யாத்திசைப் பதிப்பகம்
50, அண்ணா நகர்
அரியலூர் - 621 713
அலைபேசி: 98432 73914

வடிவமைப்பு :
எஸ். தனசேகர்

விலை : 140. 00

அச்சிட்டோர்:
ஸ்ரீராகவேந்திரா லேசர் பிரிண்டர்ஸ்
15, தானப்ப தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.
தொலைபேசி : 044-42664695, 90031 81586

செம்மொழிச் சித்தர், முதுமுனைவர், செந்தமிழ் அந்தணர் இளங்குமரனாரின் சான்றுரை

வெற்றியர் திரு. விக்டர்

இரா. இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை,
அல்லூர் – 620 101.
திருச்சி மாவட்டம்.

தமிழ்த் திருவாளர் ம.சோ. விக்டர் அவர்கள் அரிய தமிழ்ப் பற்றாளர்; ஆழ்ந்த ஆய்வாளர், பாவாணர் கருத்து களில் பயின்ற தோய்வாளர்; அவர் கண்ட கொள்கைகளைப் பலப்பல நூல்களால் நிறுவி வரும் மொழி நல மீட்பாளர்.

தமிழன் தோன்றிய குமரிக் கண்டம்;

அவன் பேசிய மொழி தமிழ்;

அத்தமிழே உலக மொழிகளின் தாய்மொழி;

தமிழே ஆரியத்துக்கு மூலம்;

திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி ஆவது தமிழே;

என்னும் கொள்கைகளை உலகப் பேரறிவர் சான்றொடும் உள்ளார்ந்த ஆய்வொடும் நிறுவுவதே தமது வாழ்வாகக் கொண்டு, அசைக் கொணாச் சான்றுகளுடன் நூல்களைப் படைத்தவர் பாவாணர்.

திரு. ம.சோ. விக்டர் அவர்கள், தம் ஆழிய ஆய்வொடும், கால வளர்ச்சியாலும் தம் உள்ளொளியாலும் மேலும் மேலும் அக்கொள்கைகளை நிறுவ ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துவரும் தமிழ்த் தாயின் தவப்புதல்வர். அவர் தம் நூல்களை இயல்பான ஓட்டத்தில் தடையின்றிக் கற்கவும்

தெளிவுறவும் வாய்ப்பாம் வகையில், வனப்புற ஓர் ஒழுங்கில், நல்ல கட்டமைப்பில் அச்சிட்டு, உலகத் தமிழர்க்குக் கொடையாக வழங்க வல்ல யாத்திசைப் பதிப்பகமாம்.

திரு. ம.சோ. விக்டர் அவர்கள் பன்மொழிப் புலமையாளர்; நுனிப்புல் மேயாத நுண்ணிய கல்வியர். தொல்காப்பியச் செல்வம், சங்க நூல்வளம், திருக்குறள் தோய்வு, காப்பியக் கவின் யாவும் ஒருங்கே கைவரப் பெற்றவர். புலமையர் வழக்கோடு பொதுமக்கள் வழக்கையும் ஊன்றி அறிந்து, உரிய வகையில் போற்றும் ஆற்றலர். இயல்பான ஆற்றோட்ட நடையில் எழுதவும் வல்லவர். ஆதலால், தம் பெயரை நிறுவுவார் போல், "வெற்றி" மேல் வெற்றிப் படைப்புகளைச் செய்து வருகின்றார்.

"க" என்னும் எழுத்துப் பற்றி விளக்கி ஒரு நூல்,

"எல்-யா" என்னும் இருமை ஒரு சொல் பற்றி ஒரு நூல்,

உலகளாவிய தமிழ், உலக மொழிகளில் தமிழின் வேர்ச் சொற்கள், எபிறேய மொழியில் தமிழின் வேர், தமிழும் சமற்கிருதமும், தமிழும் செமிட்டிக் மொழியும், இந்திய மொழிகளின் தாய் தமிழே, பஃறுளி - யூப்ரடீசு, குமரிக்கண்டம், குமரிக்கண்டமும் ஆப்பிரிக்கக் கண்டமும், தமிழும் ஆரியமும், மேற்கிலும் தமிழ், வாழும் தமிழ், தமிழ் மணம், சேயோன், சேயன், தமிழரின் எண்ணியல், வானியலும் தமிழரும், சிந்துவெளி நாகரிகம், தமிழும் எபிறேயமும், பாபிலோனியர் தமிழ், தமிழ்நாட்டுக் கிறித்துவம், இசுலாம் தமிழர் சமயமே என அடுக்கடுக்காக ஆய்வு நூல்களைப் படைத்து வருபவர்.

பன்முகப் பார்வைப் படைப்பவராம் திரு. ம.சோ. விக்டர், நன்முகத் தோற்றத்தர்; நவில் தோறும் நயமாம் நூல்போல், பழகுந்தொறும் "தேனோடு பால் கலந்த" இனியர். தமிழ்த் தொண்டரை மதிப்பவர். தமிழ்த் தொண்டரொடு தாமும் தொண்டராய் ஊன்றி நிற்பவர். மேலும் மேலும் அவர் படைப்புகள் தமிழ் வளமாய்த் தொடருமாக! இன்பமே மல்குக.

இரா. இளங்குமரன்

ஆசிரியர் உரை

ஆரியர் தமிழகத்தில் புகுந்தகாலத்தைச் சரியாகக் கணக்கிட்டுக் கூற இயலாது. கி.மு. 500 ஆண்டுகளில் ஆரியர்கள் தமிழகத்துக்கு வந்திருக்கலாம். ஆனால் அக்காலத்தே அவர்கள் கொண்டு வந்த அவர்களது அரைகுறை ஆரியம், தமிழுக்குக் கெடுதல் எதனையும் விளைத்துவிடவில்லை. ஆரியர்களின் தென்னாட்டு வருகை, வயிற்றுப் பிழைப்புக்காகவும், சமணபுத்த சமயத்தாக்குதலிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளவுமே எனக் கொள்ளல்வேண்டும் அகத்தியனே முதன்முதலில் விந்திய மலையைக் கடந்து தென்னாட்டுக்கு வந்த ஆரியன் என்று சொல்லப்பட்டது. அகத்தியன் எப்போது தமிழகம் வந்தான் என்பதற்கான விளக்கங்களை ஒருவரும் கொடுக்கவில்லை. வட நாட்டுக்கும் தென்னாட்டுக்கும் இடையேயிருந்த விந்திய மலை பெரும் தடுப்பரணாக இருந்தது போலவும், அகத்திய னுக்கு முன்னதாக வடநாட்டினர் எவரும் தென்னாட்டைப் பார்த்ததில்லை என்பது போலவும் ஒரு மாயக் கருத்தை விதைத்துவிட்டனர்.

கி.மு. 10000 ஆண்டுகள் தொடங்கி, சிந்துவெளிக்கும் தமிழகத்துக்கும் இடையே காணப்பட்ட உறவுகள் பற்றி யெல்லாம் வரலாற்றில் மறைக்கப்பட்டன. தமிழ் வணிகர்கள் விந்திய மலையைப் பன்முறை கடந்து வடநாட்டில் வணிகம் செய்த வரலாறும், தமிழ்க் கணியர்கள் அம்மலையை ஒரு பொருட்டாக எண்ணாமல் வடநாடு சென்று தமிழ்ப் பள்ளி களை நடத்திய வரலாறும் மறைக்கப்பட்டுவிட்டன. சிந்து வெளி மக்களுக்குத் தேவைப்பட்ட பொன், ஒசூர் உள்ளிட்ட தமிழகத்தின் பகுதிகளாயிருந்த கோலாற்றினின்றும், மணிக் கற்கள் காங்கேயத்தினின்றும், செம்பு பாண்டிய நாட்டினின்றும், முத்துக்கள் கொற்கையினின்றும், உணவுக்குத் தேவைப்பட்ட நறுமணப் பொருட்கள் சேர நாட்டினின்றும் கொண்டு செல்லப்பட்டன.

கி.மு. 3000 ஆண்டுகளில் இந்தியாவெங்கும் தமிழே பேசப் பட்டது. பூம்புகாரில் பேசப்பட்ட தமிழே பஞ்சாப் பகுதி யிலும் பேசப்பட்டது. வழித் தொடர்புகள் சரியாக அமைந் திருந்ததால், மொழித் தொடர்பும் நன்றாகவேயிருந்தது. தமிழ் நாட்டு எல்லையைக் கடந்து சென்ற குடியேற்ற நாடாக சிந்து வெளி அமைந்திருந்ததால், தமிழ்மக்கள் அறிந்திராத புதிய சூழல்களும் சிந்து வெளியில் காணப்பட்டன. அச்சூழல்களை சிந்துவெளித் தமிழ்மக்கள் ஏற்றுக் கொண்டதையறிந்த தமிழகத்து மக்களும், அவர்தம் வழக்காறுகளையும் ஏற்றுப் போற்றினர். தமிழகம் அறிந்திராத பாலை நிலம், ஒற்றைக் கொம்பன் (Rheno) என்ற விலங்கு, பார்லி கோதுமை போன்ற தவசங்கள் இன்ன பிறவும் தமிழ்நாட்டுக்கு அறிமுகமாயின.

கி.மு. 500 ஆண்டுகளில் தென்னாட்டையடைந்த ஆரியர் களே, விந்திய மலையை முதன் முதலில் கடந்துவந்தவர்கள் என்ற பொய்யான செய்தியை வரலாற்றில் பதிவு செய்துள் ளனர். தமிழகம் வந்த ஆரியர்கள் தங்களுடன் அரைகுறையான சமற்கிருதத்தையே கொண்டுவந்தனர். கி.பி. 500 ஆண்டுகள் வரையில், சமற்கிருதம் என்ற மொழி, தமிழகத்தில் எந்தத் தாக்கங்களையும் ஏற்படுத்தி விடவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில சொற்கள் தமிழுடன் கலந்திருந்தாலும், அவையும் கூட தமிழ் மூலத்திலிருந்து பிரிந்த சொற்களே. கிறித்து பிரப்பாண்டுகளில் பிராமணக் குழுக்கள் தமிழகத்தி லிருந்தார்கள் என்ற செய்தி அறியக் கிடக்கின்றது. அவர்கள் சமயத்துறையில் எந்த மாற்றத்தையும் செய்துவிட வில்லை.

சங்க இலக்கியங்களில் காணப்படும் சமயம் பற்றிய தொன்மக் கதைகள் எல்லாம் தமிழர் சொல்லி வைத்தவைகளே. பொழுது போக்கிற்கான ஊடகங்கள் பரவலாக அறியப் படாத அக்காலத்தில், ஊருக்கு ஊர் கதை சொல்லும் கற்பனை யாளர்கள் மிகுந்திருந்தனர். தமிழர் கண்டு பிடித்த வானியல் உண்மைகளை, பிற்காலத்தில் கற்பனைக் கதைகளாக்கிச் சொல்லி வைத்தனர். அக்கதைகள் கேட்பதற்குச் சுவையாயிருந் ததினால், மக்கள் இக்கதைகளை விரும்பிக் கேட்டனர். வடக்கேயிருந்து வந்த அனைத்துச் செய்திகளையும் ஆரியச் செய்திகள் என்றே தமிழ் இலக்கியங்கள் பதிவு செய்தன. அவை

உண்மையில் ஆரியருடன் தொடர்புற்றவையல்ல. கனக விசயர் என்ற மன்னர்கள் வடநாட்டில் ஆண்டவர்களாக அறியப் பட்டவர்கள். அவர்கள் ஆரிய இனத்தைச் சார்ந்தவர்களுமல்லர். ஆனால் சிலப்பதிகாரம் அவர்களை ஆரிய மன்னர்கள் என்றே சுட்டுகிறது. துவாரகையை ஆண்ட கண்ணன் ஆரியன் அல்லன். அவன் தமிழ் ஆயர் குடியைச் சார்ந்தவனே என்று அறியக் கிடக்கின்றது. இராமன் என்பான், சோழர் மரபில் தோன்றிய வட இந்தியமன்னனே. இர்-இர-இரா போன்ற தமிழ் முன் னொட்டுச் சொல்லைத் தனது பெயராகக் கொண்ட இராமன், கரிய நிறங் கொண்ட தமிழ் மரபில் வந்தவனே.

இராமன், இராவணன், இராக்கதன், இரத்தினம், இராத்திரி, இரதி போன்ற வட சொற்கள் யாவும் கருமை, இருட்டு என்ற தமிழ் மூலச்சொற்களின் திரிபுப்பெயர்களே. இப்பெயர்களுடன் தொடர் புடையவர்களும் ஆரியர் அல்லர். பிற்காலத்தில் வந்த பிராமண உரையாசிரியர்கள், ஆரியர் என்று வடதிசை குறித்துச் சொல்லப்பட்ட அனைத்தும் பிராமணர்களுக்குரியதே என்று திசைதிருப்பி எழுதிவிட்டனர். இராமன் - இராவணன் என்ற பெயர்ப் பொருத்தம், இருவரும் ஒரு மரபைச் சார்ந்தவர்களே என்பதையுணர்த்தும். சீதைக்கு இராமன் சிற்றப்பன் என்ற பழமொழி வேடிக்கையாகச் சொல்லப்பட்டதன்று. சீதைக்கு இராவணன் தந்தைவழி உறவினன் என்ற செய்தியை, வங்காளத் தில் அறியப்பட்டுள்ள இராமாயணம் கூறுகிறது. இராமன் - சீதை இணைக்குப் பிறந்த இலவன் (லவ்-லவ என்று வடமொழி கூறுகிறது) என்பான், கறுப்பு நிறம் கொண்டிராமல் வெண்மை நிறமாயிருந்தான். அதனால்தான் சீதையின் பால் இராமன் ஐயுற்றான். இலவு என்பது வெண்மையைக் குறித்த தமிழ்ச் சொல்லே. காட்டில் வளர்ந்த இலவன் ஒரு நாள் காணாமற் போனதால், இலவனைப் போலொரு குழந்தையைப் படைக்க எண்ணிய முனிவன், மண்ணிலிருந்து ஒரு துரும்பை எடுத்துக் குழந்தையாக்கி அதற்குச் குசவன் என்று பெயரிட்டதாக இராமாயணம் கூறுகிறது. குய-குயவு என்பது மண்ணைக் குறித்த தமிழ்ச் சொல்லே. இலவன் - குயவன் என்ற தமிழ்ச் சொற்களே, லவ - குச என்று வட மொழியில் திரிந்துள்ளதை நோக்குக.

எந்தச் சூழலில் நோக்கினாலும் ஆரியம் தந்த கதைகளும், கற்பனைகளும் தமிழ் மரபை யொட்டியே காணப்படுவதால், ஆரியர் எதனையும் புதிதாகப் புகுத்திவிடவில்லை என்பதைப் பல்வேறு எடுத்துக் காட்டுகளால் தெளிவாக்கலாம். தமிழ்க் கதைகளையே ஆரியக் கதைகள் என மயங்கிய பிற்காலத் தமிழர்கள், உரையாசிரியர்கள் என்ற தமிழ்ப் பகைவர்களால், தவறான கண்ணோட்டங்களால் திசை மாறிப் போனார்கள். ஆரியமும் ஆரியக்கருத்துக்களும் கி.பி. எட்டாம் நூற் றாண்டுக்குப் பிறகே தமிழைப் பற்றின என்று கூறலாம். தமிழ் மன்னர்கள் பதவிகளையிழந்து அடிமைப்பட்டுப் போன காலத்திற்குப் பிறகே, தமிழகத்தில் ஆரியம் தலையெடுத்தது எனலாம். குறிப்பாக, ஆதிசங்கரரின் காலத்துக்குப் பிறகு, தமிழ்ச் சமயம், ஆரியச் சமயமாக்கப்பட்டது. அடுத்து வந்த இடைக்காலச் சோழர்கள், ஆரியப் பிராமணர்கள் தமிழகத்தில் நின்று நிலைத்து தங்கள் மேலாண்மையை வெளிப்படுத்த மேற் கொண்ட முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பையும் நல்கினர். இன்று தமிழகத்தில் காணப்படும் ஆரியத் தாக்கங்களுக்கு அடிப்படைக் காரணமாய் அமைந்தவர்கள் இடைக்காலச் சோழர்களே என்று குறிப்பிடுவது தவறாகாது. எண்ணற்றச் செல்வங்களையும், எல்லையற்ற நிலங்களையும், எதிர்ப்பில்லா மேலாண்மையையும் பிராமணர்களுக்கு அளித்தவர்கள் சோழர்களே. கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு, தமிழரின் நாகரிகம் பண்பாடு, வாழ்க்கை முறை அனைத்தும் ஆரியருக்கு அடிமைப்படுத்தப்பட்டன.

இதன்பிறகு, ஆரியர்கள் தாங்கள் விரும்பியபடியெல்லாம், தமிழ் இலக்கியங்களை மாற்றியும், புகுத்தியும், அழித்தும், புதிய பொருளுரைத்தும், செய்து கொண்டனர். இவ்வாறு ஆரியச் சார்புடையதாக மாற்றப்பட்ட வரலாறுகளை, பிற்காலத்தில் ஆய்வு செய்த தமிழறிஞர்கள், எல்லாம் ஆரியமே என்றும், ஆரியமின்றித் தமிழ் தனித்தியங்காது என்றும் கூறும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். கி.பி. 10ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழிலக் கியங்களைக் கொச்சைப்படுத்திய ஆரியப் பிராமணர்கள், தொல்காப்பியமும் தங்களது நூலே என்றும், தொல்காப்பியரும் ஆரியரே என்றும் கூறிவைத்தனர். தொல்காப்பியத்தில் நூற்றுக்

கணக்கான சமற்கிருதச் சொற்கள் உள்ளனவென்றும், அதனால், தொல்காப்பியம் ஆரியத்தைத் தழுவி எழுதப்பட்ட நூலே என்றும் வாதிட்டனர்.

தமிழறிஞர்கள் என்று சொல்லிக் கொண்டவர்கள், தமிழில் மெய்யான அறிவும் ஆழமும் கொண்டிருந்தால், அவை தமிழ்ச் சொற்களே என நிறுவியிருப்பர். ஆட்சியாளர்களுக்குச் சார்புடையவர்கள், தமிழறிஞர்களாக அடையாளங் காட்டப் பட்டதால், அத்தகையோர் கொடுத்த விளக்கங்கள் பரவலாக அறியப்பட்டு, உண்மையில் தமிழறிவு கொண்டோரின் விளக் கங்கள் ஏற்கப்படாமலும் எடுபடாமலும் போயின. எனவே கடந்தகாலத்தில் சொல்லப்பட்ட தவறான கொள்கைகளைப் பற்றி நிற்கவேண்டிய நிலை தற்போது இல்லை.

இந்தியாவின் தொன்மக்குடிகள் ஆரியரே என்றும், சமற்கிருதமே தமிழுக்கும் தாய் மொழி என்றும் கூறிவந்த வட நாட்டு வரலாற்றறிஞர்கள், தங்கள் கொள்கைகளை இன்று மாற்றிக் கொண்டுள்ளனர். தவறான கொள்கையைப் பற்றி நின்றது பற்றி வெட்கப்படுகின்றனர். அடுத்தடுத்து வெளிப் படும் வரலாற்று உண்மைகள், இந்திய வரலாற்றை வேறு பார்வையில் நோக்க வழி செய்துள்ளன. இந்நிலையில், கடந்த காலத்தில் தமிழைச் சிதைத்த ஆரியத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருப்பது தற்போதையச் சூழலில் தேவையில்லாதது எனக் கருதலாம். ஏனெனில் ஆரியப் பற்றாளர்கள் ஒய்ந்து போன நிலையில், தமிழுக்குப் புதிய பகைவர்கள் இன்று தோன்றியுள் ளனர். அவர்கள் வேறுயாருமல்லர், தமிழரே என்பது தெளிவு.

தமிழர்கள் என்றும் உணர்வுக்கு அடிமையானவர்கள் என்ற அடிப்படையைப் பயன்படுத்தி, தமிழையும் தமிழரையும் தம் ஆளுமைக்கு அடிமைப்படுத்தும் புதிய பகை இன்று தமிழகத்தில் தோன்றியுள்ளது. எண்ணற்ற சீர்திருத்தங்களை மேற்கொண்ட தந்தை பெரியார் அவர்களும் கூட, திராவிடம் என்ற மாயையில் சிக்கி, தமிழர்களின் முன்னேற்றத்துக்குப் பல நேரங்களில் தடையாய் இருந்தார் என்பது, செரிமானம் செய்யப் படமுடியாத செய்தியாயிருந்தாலும், உண்மை அதுவே எனலாம். திராவிடம் என்ற மாயையில், ஆரிய எதிர்ப்பை

மட்டுமே வெளிக்கொணர முடிந்ததேயன்றி, தமிழ் - தமிழர் வளர்ச்சி அதனால் தடைபட்டுப் போயிற்று. திராவிடம் என்ற சொல்லே வட சொல் என்பதை ஏற்கனவே எனது நூல்களில் விளக்கியுள்ளேன். தமிழனைத் தமிழ்ச் சொல்லால்தான் அடையாளங்காட்ட வேண்டுமேயன்றி, வடசொல்லால் காட்டுவதென்பது அடிப்படையிலேயே தவறானதாகும். திராவிடம் என்ற மாயக் கொள்கையை, கன்னடனும் தெலுங்கனும், மலையாளியும் ஏற்றுக் கொள்ளாத நிலையில், தமிழகத் தலைவர்கள் அதனை வலியுறுத்திச் சொல்லி வருவது, தமிழை வளர்ப்பதற்கன்று என்பதை உணர்தல் வேண்டும். மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது, தேசியம் என்ற பெயரால் தமிழ்நாட்டின் எல்லைகள் சுருக்கப்பட்டன. தமிழை என்றும் தமக்கும், தம் உயர்வுக்கும், தம் பதவிகளுக்கும் பயன்படுத்தும் தலைவர்கள் கையில் தமிழகம் சிக்கியுள்ளதால், தமிழர் வாழ்வு வளம்பெறப் போவதில்லை.

அழுகின்ற குழந்தைக்குப் பூச்சாண்டியைக் காட்டுவது போல், ஆரியத்தைக் காட்டியே தமிழரை அச்சுறுத்தி விட்டனர். தமிழர்கள் வாழும் மாநிலத்தை ஆங்கிலத்தில் சரியாக எழுதாமல், டமில் நடு என்றவாறு ஒலிக்கும் படி கொச்சைப் படுத்திவிட்டனர். Thamizh Naadu என்றோ, Thamizhagam என்றோ ஆங்கிலத்தில் எழுத முயற்சிகள் மேற் கொள்ளப்படவில்லை. தமிழ் மாநிலத் தலை நகரத்தைத் தெலுங்கன் ஒருவன் பெயரால் மாற்றியழைத்து, அதற்கு விழாக்களும் எடுத்துவிட்டனர். தமிழைச் செம்மொழியாக அறிவித்து, செம்மொழிக்கான அரசின் உதவிகள் எதுவும் கிடைக்காமல் செய்துவிட்டனர். தமிழினின்றும் பிரிந்து சென்ற மொழிகள் எல்லாம் தமக்குப் பாதுகாப்பையும் வளர்ச்சியையும் தேடிக் கொண்டுவிட்டன.

இனி வருங்காலத்தில், சமற்கிருதம் போன்ற மொழிகள் தமிழை ஒன்றும் செய்துவிடப் போவதில்லை. சமற்கிருதத்தின் பிடியினின்றும், பல உண்மையான தமிழ்ப் பற்றாளர்களும் அறிஞர்களும், தமிழை மீட்டெடுத்து விட்டனர். ஆய்வாளர்கள் நிலையில், தமிழே முதன்மொழி என்ற கொள்கையும், அதன் வழி உண்மைகளும் இன்று வெளிக்கொணரப்பட்டுவிட்டன. இவ்வுண்மைகளை மொழியியலார் நிலைகளில் பலரும்

ஏற்றுக் கொண்டுவிட்டனர். இவ்வுண்மைகள் தமிழ்மக்களுக்கு இன்னும் முழுமையாகச் சென்றடையவில்லை என்பது உண்மையானாலும், அடுத்த சில ஆண்டுகளில் இச்சூழல்கள் மாறும். அரசும் ஆளுமையும் செய்யாத அருஞ்செயல்களை, நிகழ்காலத் தமிழறிஞர் பலர் செய்து காட்டிவிட்டனர். எனவே, அரசியல் பிழைப்புக்கருதி, தமிழைப் பயன்படுத்தும் பதவி வணிர்கள் பற்றி இனி அச்சம் கொள்ளத் தேவையில்லை. காலம் கடந்தேனும் தமிழ் மொழி தனக்குரிய பெருமையைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

இன்றைய ஊடகங்களான செய்தித்தாள்கள், தொலைக் காட்சிகள் நாளும் நிகழ்த்தி வரும் தமிழ்க் கொலைகள் சொல்லி மாளாது, ஆங்கிலத்தின் மீது தமிழ்மக்கள் கொண்டுள்ள பற்று, வாழ்வியல் அடிப்படையிலானதேயன்றி, மொழிவளம் பற்றியதன்று. ஆங்கிலம் படித்தால் கணக்கற்ற வருவாய் பெற லாம் என்ற உணர்வை விலையாக்கி, ஆங்கிலப்பள்ளிகள் பெருமளவில் தோன்றியுள்ளன. செர்மனி, பிரான்சு, உருசியா போன்ற நாடுகளில் ஆங்கிலம் விருப்ப அடிப்படையிலேயே சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. தாய்மொழியைப் புறக் கணித்த கல்விக் கொள்கை உலகில் எந்நாட்டிலும் வெற்றி பெறவில்லை. தமிழகத்தில் தற்போது காணப்படும் தடுமாற்றம், எதிர்காலத்தில் சரியாகிவிடும் என்பதும் தெளிவு.

தமிழ்கற்போருக்கு வேலைவாய்ப்பில்லை என்ற அடிப் படையிலேயே தமிழைக்கற்கப் பலர் தயங்குகின்றனர். கணக்கு, அறிவியல், ஆங்கிலம், பொறியியல், மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கும் தமிழின் அடிப்படைச் செய்திகளை அறிவிக்கும் கல்விக் கொள்கை தமிழகத்தில் ஏற்படுத்தித் தர வேண்டும். தமிழ்ப் பாடம் அனைத்து நிலைகளிலும் சேர்க்கப் பட்டு, தேர்வுத் தகுதிகளில் ஒன்றாக விதிக்கப்பட வேண்டும். தமிழுக்காக, தமிழருக்காக, தமிழாட்சி செய்கின்ற அரசும் தலை மையும் விரைவில் வரும் எதிர் பார்ப்போம்.

தமிழாய்வில் பதினொன்றாவது நூலாக, உலகமொழிகளில் தமிழின் வேர்ச்சொற்கள் என்ற இந்நூல் வெளியாகின்றது. தமிழ் மக்கள் படித்துப் பயனுற வேண்டுமென்பதே எனது வேணவா.

இந்நூலை வடிவமைத்து அச்சிட்டு உதவிய ஸ்ரீராக வேந்திரா லேசர் பிரிண்டர்ஸ் நிறுவனத்துக்கு எனது நன்றி.

அரியலூர் — ம.சோ. விக்டர்

பொருளடக்கம்

1.	ஆரியர் யார்?	17
2.	"பெருமை"க் குறியீடுகள்	22
3.	தொல்காப்பியத்தில் சமற்கிருதச் சொற்களா?	25
4.	செல்லாய்வின் தந்தை - பாவாணர்	27
5.	மேலை ஆரியம்	30
6.	இத்தியர்களும், ஆரியர்களும் (Hittites and Aryans)	35
7.	குமரிக் கண்டத்துத் தமிழ்	42
8.	வேத காலம்	43
9.	மேலை மொழிகளில் தமிழ்	51
10.	உவமம்	57
11.	திசை	61
12.	பூதம்	66
13.	ஆசிரியர்	71
14.	உரு	74
15.	இமை	78
16.	அந்தம்	83
17.	காரணம் - காரியம்	87
18.	அமுதம்	90
19.	உலகம்	94
20.	ஆணை	99
21.	தூணி	103

22. இலக்கணம் - இலக்கியம் 106
23. காயம் 111
24. அமரர் 118
25. கபி 123
26. கரகம் 130
27. சின்னம் 135
28. சூதர் 139
29. நாடகம் 144
30. நிமித்திகன் 150
31. மாராயம் 154
நூற்பட்டியல் 166

ooo

1

ஆரியர் யார்?

ஆரியர் என்போர் யார்? அவர்கள் எந்த நாட்டினர்? இந்தியாவின் தொன்மைக் குடிகளா, அயல் நாட்டிலிருந்து குடிபெயர்ந்தவர்களா? அயல் நாட்டினராயின் அவர்கள் என்ன நோக்கத்திற்காக இந்தியாவுக்குள் நுழைந்தனர், அவர்களின் தாய்மொழி எது, அம்மொழி, உலகின் வேறு மொழிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதா? சமற்கிருதம் ஆரியர் மொழி யென்றால், அவர்கள் தொடக்கத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் பகுதிகளில் அம்மொழிபற்றிய குறிப்புகள் காணப்படாதது ஏன்?

மேற்கண்ட கேள்விகளுக்குப் பதில் பெறுவது கடினமானதொன்றாகும். ஒரு குமுகாயம் தனது எதிர்காலத் தலைமுறையினருக்குத் தம்மைப் பற்றிய குறிப்புகளைப் பதிவு செய்து வைத்திருப்பது வரலாறு எனப்படும். அவ்வாறான பதிவுகளில், அவர்களது வாழ்க்கை முறைமைகளும், பண்பாட்டு நாகரிகத் தன்மைகளும் வெளிப்படும். அவ்வாறு சிறப்புக்குரியதாக அமைந்திராத இனத்தார், தமது வரலாற்றைப் பதிவு செய்யாமல் விடுப்பதும் வியப்பைத் தராது. எனினும் அக்குமுகாயம் பற்றிய குறிப்புகளை ஆய்வு செய்யும் போது, பல உண்மைகளை வெளிக்கொணர இயலும்.

நான்கு வேதங்களையும், பதினெட்டு புராணங்களையும், இதிகாச இலக்கியங்களையும் சமற்கிருதம் என்ற தேவமொழியைக் கொண்டு உருவாக்கியதாகக் கூறப்படும் ஆரியர்கள், தங்களுடைய தொன்மைக் காலவரலாற்றைப் பிற்கால மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் கூறிச் செல்லாமல் விடுத்தனர் அல்லது மறைத்தனர் என்றே கருத வேண்டியுள்ளது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆரியர்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்த செய்திகளையும், பிற்காலத்தில் திட்ட மிட்டே அழித்துவிட்டனர். தங்களுடைய நாடோடி வாழ்க்கை பற்றிய செய்திகளையும், நாடு விட்டு நாடு பெயர்ந்த உண்மை களையும் மறைத்துவிட்டனர். இதன் வழியே, எதிர்காலத்தில் தங்கள் வரலாற்றை எப்படி வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளலாம் என்ற சூழலையும் உருவாக்கினர்.

இந்தியாவின் தொன்மைக் குடிகள் தாங்களே என்றும், திராவிடர்கள் என்று அவர்களால் அழைக்கப்பட்ட தமிழர்கள், நடுத்தரைப் பகுதிகளிலிருந்து இந்தியாவில், குடியேறியவர்கள் என்றும், திராவிடர்களின் நாடு மெசபத்தோமியாவே என்றும் வரலாற்றைத் திருத்தி எழுதும் முயற்சிகளிலும் இறங்கினர். தங்களைப் பற்றியும், தங்களது முன்னோர்கள் பற்றியும் துளிச் செய்தியும். வெளிவந்துவிடக் கூடாது என்பதிலும் கவன மாயிருந்தனர்.

இந்தியாவின் தொன்மைக் குடிகளான தமிழர்களை இராக்கதர்கள் என்றும், அசுரர்கள் என்றும், சூத்திரர்கள் என்றும், தீண்டத் தகாதவர்கள் என்றும் தங்களது புராணங் கள் வாயிலாக அறிவித்தனர். சமற்கிருதம் என்ற தங்களது மொழியே உலகின் முதல் மொழியென்றும், சமற்கிருதத்தி னின்றே தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகள் பலவும் பிறந்தன என்றும் கூறி வைத்தனர். உலகிற்கு சமயவியலையும், வானியலை யும், அறிவியலையும், கணக்கியலையும், ஓகக் கலை என்னும் உடலோம்பும் அறிவியலையும் அளித்தது தாங்களே என்றும் கூறிக் கொண்டனர். கல்வியைப் பெறவும், கற்பிக்கவும் தகுதி யுடையோர் ஆரியரே என்றும், சூத்திரர்களுக்குத் கல்வி என்பது கற்றுக் கொடுத்தாலும் வராது என்றும், கல்வியறிவு பெற சூத்திரர் தகுதியற்றவர் என்றும் கூறினர்.

இச்செய்திகள் எல்லாம் ஆரியர்களின் இலக்கியங்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றன. சூத்திரர், தங்களது வேதங் களையும் புராணங்களையும் படிக்கத் தடை விதிக்கப்பட்டனர். கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக ஆரியர்களின் வேத புராணங் களில் சொல்லப்பட்டு வந்த செய்திகளுக்கு அவர்களே விளக்கங் களையும் கொடுத்து வந்தனர். உண்மையில் ஆரியர்களின் வேத

புராணங்களில் என்ன செய்திகள் கூறப்பட்டிருந்தன என் பதைக் கூட, ஆரியரல்லாதார் அறிந்து கொள்வதற்கும் வாய்ப் பளிக்கப் படவில்லை.

கி.மு. 1000 ஆண்டுகளில், ஏற்றத்தாழ்வற்ற குமுகாயமாக இருந்த இந்திய நாட்டை, வர்ணாசிரமம் என்ற சாதிப் பிரிவினைகளைப் புகுத்தி, நாட்டைப் பிளவு படுத்தினர். நான்கு வகையான சாதிப் பிரிவினைகளை உருவாக்கியதின் வழியாக, தம்மைத் தேவ சாதியினர் எனக் கூறி, மற்ற பிரிவினரையும் நம்பவைத்து, தமது வாழ்க்கை முறைமைகளுக்குப் பாது காப்பைத் தேடிக் கொண்டனர். கி.மு. 3ஆம் நூற்றாண்டில் அலெக்சாந்தர் காலப் படை எடுப்பு தொடங்கி, ஆங்கிலேயர் நாட்டைப் பிடித்துக் கொண்ட கி.பி. 17ஆம் நூற்றாண்டு வரை யிலும், எண்ணற்ற அயல் நாட்டுப் படையெடுப்புகளுக்கும் அடிப்படையாய் அமைந்தது, ஆரியர் உருவாக்கிய சாதிப் பிரிவினையே என்பது வரலாற்றாய்வாளர்களின் கருத்தாகும்.

"The diverse and splintered nature of religious organisations was a strictly negative phenomenon that throughout India's history prevented it from uniting its forces to fight against foreign intervention. This was the reason why India was conquered by Muslims and later submitted to British Imperialism".

- Sergei Tokarev, History of Religion, p. 177.

பாலத்தீனத்தில் தோன்றிய கிறித்துவ சமயமும், அரேபியா வில் தோன்றிய இசுலாமியச் சமயமும் இந்தியாவில் பரவலாகப் பின்பற்றப்பட்டுவருகின்றன. இந்தியாவில் பிறந்த புத்த சமயம், தென்கிழக்கு ஆசிய நாடுகளிலெல்லாம் பரவி நிற்கின்றது. ஆனால் ஆரியர்கள் உருவாக்கிய பிராமண சமயம் மட்டும், இந்திய எல்லைகளைத் தாண்டி வெளிநாடுகளில் பரவாதது ஏன் என்ற கேள்வி எழுகின்றது. பிராமண சமயம், சாதி என்ற அடிப்படையில் பின்பற்றப்படுவது. கடவுள் பெயரைச் சொல்லி, கடவுளே வகுத்ததாகக் கூறி, இந்திய மக்களை நான்கு சாதி களாக ஆரியர்கள் பிரித்தனர். வெளிநாட்டில் பிராமண சமயத்தைப் புகுத்த நினைத்தால், அம்மக்களை எந்தச் சாதியின் கீழ் வைப்பது என்ற கேள்வி எழும். அப்படியே பிரித்தாலும், அப்பிரிவினையை அம்மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

சாதிப் பிரிவினையில்லாத சமயத்தில், பிராமணர்களின் மேலாண்மை இல்லாது போய்விடும். கடற்பயணம் மேற் கொண்டு வெளிநாடுசெல்லும் இந்தியர்கள், அங்கெல்லாம் சாதி அமைப்புகள் இல்லையே என்ற உண்மையை அறிந்து கொள்வார்கள்; தங்களது சூழ்ச்சி வெளிப்பட்டுவிடும்; இந்தியர்கள் சாதிப்பிரிவினையை எதிர்ப்பார்கள் என்ற அடிப்படை யில்தான், பிராமண சமயத்தைச் சார்ந்தவர்கள் கடற்பயணம் செல்லக்கூடாது என்று தடைவிதித்தனர். உண்மையில், பிராமணர்கள் கடலைக் கண்டு அஞ்சியதே இதற்கு அடிப் படையான காரணம் என்றும் சிலர் கருதுகின்றனர்.

ஆங்கிலேயர் இந்நாட்டை ஆண்ட போதும் அவர்களின் நம்பிக்கைக்குரியவர்களாய்த் தம்மைக் காட்டிக் கொண்டு, எல்லாவகையிலும் இன்புற்று வாழ்ந்திருந்தனர். பிற்காலத்தில் தேசிய உணர்வு மேலோங்கி, இந்திய விடுதலைக்கான போராட் டத்தைப் பேராயக் கழகத்தினர் மேற்கொண்ட போது, விடுதலை பெற்ற இந்தியாவிலும் தங்களுடைய ஆளுமையை நிலை நிறுத்த, விடுதலைப் போரிலும் பங்கு கொண்டனர்.

விடுதலை பெற்ற இந்தியாவில், அரசுத் துறையிலுள்ள அனைத்து ஆளுமை மையங்களையும் கையகப்படுத்திக் கொண்ட வரலாறு இன்று அறியக் கிடக்கின்றது. சமற்கிருதம் என்ற தங்களது மொழியே முதன்மொழியென்றும், தமிழ் அதனின்றும் கிளைத்த மொழியென்றும் சொல்லி, எல்லோரை யும் நம்பவைத்து, தமிழர்களையும் கூட அம்மாய வலையில் சிக்க வைத்துள்ளனர். மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பு எழுதப் பட்ட தனித்தமிழ் நூலான தொல்காப்பியத்தில் சமற்கிருதச் சொற்களும், ஆரிய வாழ்க்கை முறைகளும் கலந்துள்ளன என்ற பொய்யைக் கூறி தொல்காப்பியம் ஓராரிய நூலே என்றும் கூறி வைத்தனர்.

தொல்காப்பியர், அகத்தியரைப் போலவோர் ஆரியரே என்றும், அவர் ஐந்திர வியாகரணம் என்ற வடமொழி இலக்கண நூலைக் கற்று, அதற்கேற்றவாறு தமிழில் இலக்கண நூலை வகுத்தார் என்றும் சொல்லப்பட்டது. அகத்தியர் என்ற சொல்லே தமிழ்ச் சொல்லாயிருப்பதும், அகத்தியர் என்ற பெயரில் பலர் தமிழகத்தில் இருந்ததும், அகத்தியர் என்ற

பெயருக்குரியவர் தமிழரே என்பதும் தெளிவு. அகத்தியர் வட நாட்டிலிருந்து தென்னாட்டுக்கு வந்தவர் என்ற செய்தியில் கூட உண்மையிருக்கலாம். ஏனெனில் கி.மு. 2000 ஆண்டுகளில், காசுமீரம் முதல் குமரிமுனைவரை வாழ்ந்திருந்த மக்கள் அனைவரும் தமிழரே. தமிழ்மொழியே இந்தியாவெங்கும் பேசப் பட்டது, எழுதப்பட்டது, பதிவு செய்யப்படும் குறியீடுகளால் அறியப்பட்டது. அக்கால அளவில் சமற்கிருதமோ, தெலுங்கோ, வேறெந்த மொழியும் இந்தியாவில் அறியப்படவில்லை.

ஆரியருடைய இந்திய வருகைபற்றியும், அவர்தம் மொழியான சமற்கிருதம் தோன்றியது பற்றியும் நூலினுள்ளே கூறப் பட்டுள்ள செய்திகளைக் காண்க. தொல்காப்பியர் கி.மு.1000-750 ஆண்டுகளில் வாழ்ந்திருந்ததாகப் பாவாணர் கருதுகிறார். தொல்காப்பியர் கற்றதாகக் கூறப்படும் ஐந்திரம் என்ற சமற் கிருத நூல், அக்கால அளவில் வழக்கிலிருந்ததற்கானச் சான்று கள் ஏதுமில்லை. சிந்து வெளியின் அரப்பா நாகரிகம் முடிவுறத் தொடங்கிய காலத்தில் தான் ஆரியர்கள் இந்தியாவுக்குள் வருகை தந்தனர். சிந்து வெளியில் தொடக்கத்தில் வாழத் தொடங்கிய ஆரியர்கள், தங்களுடைய முன்னோர்களின் நாடோடி மொழியான ஆரியத்துடன், சிந்துவெளித் தமிழையும் கலந்து பேச முற்பட்டனர். இன்னும் சொல்லப் போனால், சிந்து வெளியில் வாழ்ந்திருந்த தமிழர், ஆரியரின் கொச்சை நாடோடி மொழியைச் சீர்திருத்தம் செய்து கொடுத்தனர் எனலாம். ஆடுமாடுகள் மேய்க்கும் தொழிலை மட்டுமே அறிந்திருந்த ஆரியருக்கு, வட இந்தியத் தமிழர்கள் அறிந்திருந்த வானியல், அறிவியல், கணக்கியல், மொழியியல் போன்ற பல்வேறு துறைகளைக் கண்டறிந்த போது வியப்புற்றனர், பொறாமையும் கொண்டனர். சிந்துவெளித்தமிழும் நாடோடி ஆரியமும் கலந்ததோர் மொழியைத் தமிழர்களே அவர்களுக்கு உருவாக்கிக் கொடுத்தனர். அம்மொழியைச் செம்மைப்படுத்தப்பட்ட மொழியென்று கூறி, அதற்குச் செம்மைக் குறுமொழி என்ற பெயரையும் சூட்டித் தந்தனர். சமற்கிரு என்ற சொல், செம்மைக் குறி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

○○○

2

"பெருமை"க் குறியீடுகள்

மொழியை மட்டும் உருவாக்கித் தந்த தமிழர், சமற்கிருத மொழிக்குச் குறியீடுகளைச் செம்மைப்படுத்தித் தரவில்லை. ஏனெனில், அக்காலத்தில் தமிழ்க் குறியீடுகளையே மாற்றி அமைக்கும் முயற்சியில் தமிழறிஞர்கள் ஈடுபட்டிருந்தனர். சிந்துவெளி எழுத்துக்கள், கி.மு. 12000 ஆண்டுகளில் அறியப் பட்டிருந்தன. கால மாற்றத்திற்கும், புதிய கண்டுபிடிப்புகளைப் பதிவு செய்யும் முறைகளுக்கும், பழையவரி வடிவங்கள் ஏற்றவைகளாயில்லையென்பதை யுணர்ந்த தமிழறிஞர்குழு, கி.மு. 1800 ஆண்டுகளில் புதிய வரிவடிவ முறையை அறிமுகம் செய்தனர். அம்முறை சிறப்பானதாகவும், பெருமைக்குரியதாக வும் அமைந்திருந்ததால், அம்முறைக்குப் "பெருமை" (Pride) என்றே பெயரும் சூட்டினர்.

கி.மு. 3000 ஆண்டுகளிலேயே, ஃபோனீசியர் என்ற நடுத்தரைக் கடல் நாட்டு வணிகர்குழு, சிந்துவெளியோடும் தமிழகத்தோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இவர்கள், கி.மு. 5000 ஆண்டுகளில், மெசபத்தோமியாவில் சுமேரியர் என்ற பெயரில் குடியேறிய சிந்துவெளித் தமிழர்களே என்பதற்கானச் சான்றுகள் இன்று கிடைக்கப் பெற்றுள்ளன. தமிழ் மரபில் வந்த ஃபோனீசியர்கள், தாய்த்தமிழகத்துடன் கொண்டிருந்த உறவின் அடிப்படையில், தமிழ் மொழியில் மாற்றம் செய்யப்பட்ட "பெருமை"க் குறியீடுகளைப் போன்று, அதன் அடிப்படையில், கி.மு. 1500 ஆண்டுகளில், மேலை மொழி களில், புதிய குறியீடுகளை அங்கே அறிமுகம் செய்தனர். அவை முற்றிலும் தமிழின் புதிய வரிவடிவங்களையொட்டியே மாற்றம்

செய்யப்பட்டன. இவ்விரு குறியீடுகளையும் ஆய்வு செய்த மேலை நாட்டு மொழியியல் ஆய்வாளர்களும், ஃபோனீசியர்களின் புதிய குறியீடு, அவர்கள் கண்டுபிடித்தவையல்ல வென்றும், வேறோர் மொழியின் குறியீடுகளையே, ஃபோனீசியர்கள் மேலை நாடுகளில் அறிமுகம் செய்துள்ளனர் என்றும் கருதுகின்றனர். (This Phoencian Script was borrowed from some other sources and it was not originally invented - Dictionary of the Bible).

தமிழர் அறிவித்த "பெருமை" க்குறியீடுகளுக்கும், ஃபோனீசியர்களின் குறியீடுகளுக்கும் உள்ள தொடர்பை இன்று மொழியியலார் மெய்ப்பித்துள்ளனர்.

இவ்வாறு தமிழறிஞர்கள் ஒன்று கூடி உருவாக்கிய புதிய "பெருமை"க் குறியீடுகள், பிற்கால வரலாற்றில் சிறப்பிடத்தைப் பெற்றன. அந்த அளவில், சமற்கிருதத்துக்கான குறியீடுகளை உருவாக்கித் தர, வட இந்தியத் தமிழர்கள் முயற்சி மேற்கொள்ளவில்லை. ஆனால், ஆரியர்களோ அந்தப் பெருமைக் குறியீடுகளைத் தாங்களே கண்டுபிடித்ததாகப் பிற்காலத்தில் பொய்யுரைத்து, அதற்குப் பிராமி என்ற திரிபுச் சொல்லைக் கொடுத்து, பிரம்மாவே பிராமிய முறையைக் கண்டுபிடித்த தாகக் கூறினர். பிரம்மா உருவாக்கித் தந்த பிராமி குறியீடுகளை, ஏன் சமற்கிருத மொழிக்குப் பயன்படுத்திக் கொள்ளாமல், பிற்காலத்தில் (கி.பி. 200) சமற்கிருதத்துக்குப் புதிய வரிவடிவங்களை அறிமுகம் செய்தனர் என்ற கேள்விக்கு அவர்களால் விடையளிக்க இயலவில்லை.

தொல்காப்பியர் காலத்தில் "பெருமை"க்குறியீடு பயன்பாட்டிற்கு வந்துவிட்ட நிலையில், சமற்கிருதத்துக்குக் குறியீடுகளே இல்லாத நிலையில், ஐந்திரம் என்ற வடமொழி இலக்கண நூல் எழுதப்பட்டதாகக் கூறுவது முரண்பாடான செய்தியல்லவா! நடைமுறையில் இல்லாத எழுத்துக்களைக் கொண்டு, ஐந்திரம் என்ற நூலை ஆரியர்கள் எழுதியதாகக் கூறுவதும், அதுவே உண்மையென்று தமிழர்களில் சிலர் வற்புறுத்துவதும், வரலாறும் மொழியியலும் ஆய்வு செய்யப்படாத காலத்தில் வேண்டுமானால் ஏற்கப்பட்டிருக்கலாம். ஆனால் இன்றைய ஆய்வுகள், அவைகளில் துளிகூட உண்மையில்லை என்பதை உணர்த்துகின்றன.

தொல்காப்பியர் வாழ்ந்திருந்த காலத்தில், வடமொழி என்ற சமற்கிருத மொழியே சரியாக அறியப்படாத நிலையில், சமற்கிருதச் சொற்களைத் தொல்காப்பியர் பயன்படுத்தினார் என்ற கூற்று நகைப்பிற்கிடமானதல்லவா. இன்னும் ஒருபடி மேலே சென்ற நம் தமிழறிஞர்கள் சிலர், தொல்காப்பியத்தில் காணப்படும் சமற்கிருதச் சொற்களை எழுத்து, சொல், பொருள் என்ற அதிகாரங்கள் வாரியாகப் பட்டியலிட்டுள்ளனர். தமிழறிஞர் வையாபுரிப் பிள்ளையவர்கள், இவ்வாறான பட்டியலொன்றையும் கொடுத்துள்ளார்.

○○○

3

தொல்காப்பியத்தில் சமற்கிருதச் சொற்களா ?

எழுத்ததிகாரம்:

1. உவமம், 2. காலம், 3. காரம், 4. காயம், 5. திசை, 6. பூதம், 7. பூதன், 8. மதி, 9. ஆசிரியர், 10. இமை, 11. உரு, 12. உருவு, 13. தூணி.

சொல்லதிகாரம்:

1. அந்தம், 2. ஆணை, 3. இலக்கணம், 4. உவமம், 5. கருமம், 6. களம், 7. காரணம், 8. திசை, 9. தெய்வம், 10. பூதம், 11. சுண்ணம், 12. வண்ணம்.

பொருளதிகாரம்.

1. அந்தம், 2. அந்தரம், 3. அம்போதரங்கம், 4. அமரர், 5. அமுதம், 6. அவி, 7. ஆரம், 8. உலகம், 9. உவமம், 10. உரு, 11. ஏது, 12. கபிலை, 13. கரகம், 14. கருமம், 15. கரணம், 16. காமம், 17. காயம், 18. காரணம், 19. காலம், 20. குணம், 21. குஞ்சரம், 22. சிந்தை, 23. சின்னம், 24. சூதர், 25. தா, 26. தாரம், 27. திசை, 28. தூது, 28. தெய்வம், 30. நாடகம், 31. நிமித்தம், 32. பதி, 33. பருவம், 34. பலி, 35. பூதம், 36. மங்கலம், 37. மண்டிலம், 38. மதி, 39. மந்திரம், 40. மாயம், 41. மானம், 42. முகம், 43. முரசு, 44. வருணன், 45. வள்ளி, 46. வாணிகம்.

பிராகிருத மொழி வழியே தமிழுக்கு வந்த சொற்கள்:

1. அரசன், 2. அரணம், 3. அவை, 4. ஆசான், 5. ஆசிரியர், 6. ஆணை, 7. இமை, 8. இலக்கணம், 9. உரு அல்லது உருவு,

10. ஊமம், 11. ஐயர், 12. கவரி, 13. சுண்ணம், 14. தாமதம், 15. தூணி, 16. தேயம், 17. நிச்சம், 18. பக்கம், 18. படிமை, 20. பண்ணத்தி, 21. பார்ப்பன், 22. பையுள், 23. மாராயம், 24. வண்ணம்.

Some of the words here enumerated are found in the Sanskrit lexicons; some of them resemble the form; and some of them express similar ideas. Prof. Vaiyapuri pillai seems to belong to the group which believe that Sanskrit is the mother of Indian languages and assumes all the words which are found in Tamil and Sanskrit to be Sanskritic, without making proper enquiry.

- Tholkappiyam, Dr. S. Illakkuvanar, pp. *379-382.)*

முதுபெரும் தமிழறிஞர் டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களது, தனது குறுந்தொகை மூலமும் உரையும் என்ற நூலில், அடியிற்கண்ட சொற்களைக் குறிப்பிட்டு, அவை வடசொற்கள் எனக் கூறுகிறார், ஆனாலும் அறுதியிட்டுக் கூறாமல், அவை தமிழ்ச் சொற்களே என்று கொள்வாரும் உளர் என்றும் கூறுகிறார்.

1. அகில், 2. அச்சிரம், 3. அமயம், 4. அமிழ்தம், 5. அரசன், 6. அவை, 7. ஆரியர், 8. இமயம், 9. உலகம், 10. ஏமம், 11. கடிகை, 12. கமண்டலம், 13. கலாவம், 14. காமம், 15. காலம், 16. குணன், 17. குவளை, 18. சகடம், 19. சூலி, 20. சேமம், 21. தண்டு, 22. தூது, 23. தூது, 24. தெய்வம், 25. நகர், 26. நீலம், 27. நேமி, 28. பக்கம், 29. பணிலம், 30. பருவம், 31. பலி, 32. பவழம், 33. பிச்சை, 34. மண்டிலம், 35. மணி, 36. மதம், 37. மதி, 38. மாலை, 39. முகம், 40. முத்து, 41. முரசு. 42. யாமம், 43. வாசம் என்பனவாகும்.

ooo

4

சொல்லாய்வின் தந்தை – பாவாணர்

கடந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்திருந்த தமிழறிஞர்கள் காலத்தில், மொழி ஆய்வுகள், சொல்லாய்வுகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை. கடந்த நூற்றாண்டுகளில் வழிவழியாகச் சொல்லப்பட்டுவந்த மரபையொட்டியே திரு. வையாபுரிப் பிள்ளை போன்றோர், இந்திய மொழிகளுக்குத் தாய்மொழி சமற்கிருதமே என்ற மயக்கத்திலிருந்தனர். மேலும் சிலர், ஆரியச் சமயத்தில் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாடுகளாலும், சமற்கிருதத்தை ஏற்றிப் போற்றும் நிலையில் இருந்தனர். தமிழே முதன் மொழி என்று சொல்லப்படுமானால், அது சமற்கிருதத்துக்கு இழுக்கு எனவும், காலம் காலமாகச் சொல்லப்பட்டு வந்த கருத்துகளுக்கு மாறுபாடாக அமையும் என்ற அச்சத்தின் காரணமாகவும், தாங்கள் மேற்கொண்டிருந்த ஆரிய சமயத்தின் பற்றினை யொட்டி, சமற்கிருதத்தை ஏற்றிப் போற்றினர்.

கிறித்துவுக்கு முன்பு வாழ்ந்திருந்த யூத மக்களிடையேயிருந்த ஒரு நம்பிக்கை பற்றிய செய்திகளை, தற்கால விவிலிய ஆய்வாளர்கள் விளக்குகின்றனர். யாகோவா என்ற யூதரின் கடவுள் (அக் கடவுள் தமிழ்க்கடவுளே), யார் என்பது பற்றியும், அச் சொல்லின் வேரும் மூலமும் யாது என்பது பற்றியும், யூதர்கள் ஆய்வு செய்யவே தடை விதித்திருந்தனர். கடவுளைப் பற்றிய ஒரு சொல்லை, ஆய்வு செய்வதுங் கூட, கடவுளை மதியாத செயலாகவே கருதினர். அது போன்றே, தேவமொழியெனப்பட்ட சமற்கிருதத்தை ஆய்வு செய்வதும், அதன் வரலாற்றைத் தோண்டி எடுப்பதுங் கூட சமய எதிர்ப்பாகக்

கருதப்பட்டதால், சமற்கிருதமே முதன் மொழி என்ற கொள்கையை விடாமல் பற்றியிருந்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும், தமிழே உலகின் முதன் மொழி என்பதற்கானச் சான்றுகள் வெளிவரத் தொடங்கிவிட்டன. மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் வெளியிட்ட சொல்லாய்வுக் கொள்கை, பழங்கால மயக்க உணர்வுகளை எல்லாம் புரட்டிப் போட்டு விட்டதெனலாம். பாவாணருங்கூட பல நேரங்களில் தனக்கு உண்மையெனப் பட்ட பல கருத்துக்களையும் ஆய்வுகளையும் சொல்லத் தயங்கினார் என்பதை அவருடைய நூல்கள் வாயிலாக அறியலாம். தமிழ் வரலாறு, தமிழர் வரலாறு என்ற அவருடைய இரு நூல்களும், கிறித்துவ சமயத்தில் சிலரால் ஏற்றுக் கொள்ள இயலாதவைகளாகவே இருந்தன. ஆழ்ந்த இறை நம்பிக்கைக் கொண்டிருந்த பாவாணர் மறைவுற்ற போது, அவரைப் புதைப்பதற்கான கல்லறை கூட தர மறுக்கப்பட்டது. சமயம் வேறு மொழி ஆய்வுகள் வேறு என்று எண்ணிப் பார்க்க இயலாதவர்கள் எல்லாச் சமயங்களிலும் இருந்தனர், இருக்கின்றனர் என்பதற்குப் பாவாணரின் மறைவு நிகழ்ச்சியே நல்ல எடுத்துக்காட்டாகும்.

யூதரின் கடவுளான யாகோவா என்பவர் தமிழ்க்கடவுளே என்று பாவாணர் அறிந்திருந்தார். ஆனாலும் சொல்ல அச்சப்பட்டார் என்பதை அவரது நூல்கள் வெளிப்படுத்துகின்றன. என்னுடைய “எபிரேயத்தின் தாய்மொழி தமிழே” என்ற நூலிற்காக அணிந்துரை வழங்கிய டாக்டர் கனக மறிய ஆரோக்கியம் என்னும் கத்தோலிக்கச் சமயத் துறவி, விவிலியத்தை ஆய்வு செய்து, உரோம் நகரில் முனைவர் பட்டம் பெற்ற பன்மொழி அறிஞராவார். அவர் தனது அணிந்துரையில், யூதர்களின் கடவுளான யாகோவா, தமிழ்க்கடவுளே என அறியப்படுவ தால், அது தமிழருக்கும் தமிழ்மொழிக்கும் பெருமைகள் சேர்க்கும் செய்தியே எனக் குறிப்பிடுகின்றார். எதையுமே ஆய்வுக்கண் கொண்டு நோக்கும் இக்காலத்தில், தமிழ் மொழி பற்றிய ஆய்வுகள், பல்வேறு வியத்தகு செய்திகளைத் தந்த வண்ணம் உள்ளன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள, வடசொற்கள் என அறியப்பட்ட சொற்கள் யாவும் தமிழ்ச் சொற்களே என்பதை, என்

னுடைய நூல்களில் விளக்கியுள்ளேன். தமிழே உலகின் முதன் மொழி யென்பதை தமிழ் மொழியின் மீதுள்ள பற்றின் காரண மாகவோ, சொல்லும் கருத்தை நிலை நிறுத்த வேண்டும் என்ற செயற்கையான உந்துதலின் காரணமாகவோ, நமது கருத்தை மற்றவர்களும் ஏற்றுக் கொள்வதற்கான நயமான வழிகளைப் பின்பற்றி அவற்றை உண்மையென மெய்ப்பிப்பதற்காகவோ சொல்ல வில்லை. பல்வேறு உலக வரலாறுகளையும், சமய வரலாறு களையும், மொழி வரலாறுகளையும் அறிந்த பிறகு, அதன் வழியில், தமிழே உலகின் முதன் மொழி என்று ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதை எனது உள்ளம் உணர்த்துகின்றது. ஒருவன் நூற்றுக்கு நூறு உண்மையென்று ஏற்றுக் கொள்ளாத எந்தக் கருத்தும், அவன் எடுத்து வைக்கும் சான்றுகளாலும் கூட அடிபட்டுப் போகும். தமிழே உலகின் முதன்மொழியென்றும், குமரிக்கண்டமே தமிழரின் தோற்ற நாடு என்றும் பாவாணர் உறுதியுடன் கூறினார்.

சமற்கிருதமே இந்தியாவின் முதன்மொழியென்றும், மூத்த மொழியென்றும், சமற்கிருதத்திலிருந்தே இந்திய மொழிகள் தோன்றினவென்றும் கூறப்படும் செய்திகளுக்கு, மொழி மற்றும் வரலாற்று அடிப்படையில் சான்றுகள் இல்லை என்பதைத் தற்கால ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. ஆரியரின் இந்திய வருகை, கி.மு. 2000 ஆண்டுகட்குப் பிற்பட்டதே என்பதை வரலாறு மெய்பித்துள்ளது. ஆரியச் சமயம் என்பதும், தமிழ்ச் சமயத்தின் நீட்சியே என்பதையும் ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. பிரம்மா என்ற ஆரியத் தெய்வமுங் கூட, பெருமாள் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

ooo

5

மேலை ஆரியம்

ஆரியர் என்ற இனத்தார், வடமுனைப் பகுதியில் வாழ்ந் திருந்தோர் என்றும், மைய ஆசியப்பகுதியில் குடியிருந்தவர் என்றும், வட ஐரோப்பாவின் குடிமக்கள் என்றும் பல்வேறு கருத்துகள் சொல்லப்படுகின்றன. பாலகங்காதர திலகர், வடபனிப் பகுதியிலிருந்து வந்தவர்களே என்று கூறுகிறார். ஆரியர் - ஆர்யா என்ற சொல்லும் கூடத் தமிழ்த் திரிபுச் சொல் லாகவே அறியப்படுகின்றது. உண்மையில் ஆரிய இனம் என்பது, கி.மு. 10000 ஆண்டுகளில் மெசபத்தோமியாவினின்றும் வடதிசை நோக்கிப் பிரிந்து சென்றவர்களே என்று அறியக் கிடக்கின்றது. இவ்வாறு பிரிந்து சென்ற இனத்தையே இந்திய - ஐரோப்பிய இனம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடு கின்றனர். இவர்கள், கிரேக்கம் செர்மனி உள்ளிட்ட பால்டிக் பகுதிகளில் சென்று குடியேறியவர்களே. இவர்களை மேலை ஆரியர் என்றும் கூறுகின்றனர்.

மேலை ஆரியம் என்ற மொழி பல்வேறு நாட்டு மொழி களின் இணைப்பே எனலாம். இவ்வினங்கள் பல்வேறு குழுக் களாக அறியப்படுகின்றன. (Hittite, Macedonia, Helladic, Remedello, Lake dwellers, Horgen, Almerian, Michelsberg, Bodrog Kereztur, Dune and Steppe, Kuban and Terek etc. etc. - The Men and Message of the Old Testament, Plate II) இத்தியர் (Hittities) என்ற இனத்தாரின் மொழி தமிழுடன் நெருங்கிய தொடர்புடையது. இவர்கள் வடமெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்தவராவர் (கி.மு. 2000). இவர்களில் ஒருபிரிவினர் மேலும் வடக்கு நோக்கிச் சென்று தூன் - ஸ்டெப்பி (Dune - Steppe) புல்வெளிப் பகுதி களில் வாழ்ந்திருந்தனர். இவர்களில் ஒரு குழுவினரே இந்தியா

வுக்கு வந்த ஆரியர் என்ற கருத்து ஒரு சிலரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இப்புல் வெளிப்பகுதி, கருங்கடலுக்கும் (Black sea), கசப்புக் கடலுக்கும் (Caspian sea) வட திசை யிலுள்ளதாகும்.

தமிழுக்கும் இத்தியர் மொழிக்கும் தொடர்புகள் காணப் படுவது போலவே, இத்தியர் மொழிக்கும், ஸ்டெப்பிப் புல்வெளியில் வாழ்ந்திருந்த மக்களின் மொழிக்கும் தொடர் புள்ளதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். எனவே, தமிழ் - இத்தியமொழி - ஸ்டெப்பி மொழி ஆகியவற்றிற்கான தொடர் புகள் அறியப்பட்டுள்ளன. ஸ்டெப்பிப் பகுதியில் வாழ்ந்திருந்து இந்தியாவுக்கு வந்தவரே ஆரியர் என்று கருதப்படுவதால், இத்தியரும் (Hittities) ஆரிய இனத்தாரே எனச் சிலர் கருது கின்றனர். இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியரின் நாடோடி மொழியிலேயே தமிழ்ச் சொற்கள் காணப்பட்டன.

எடுத்துக்காட்டாக, பணி (Pani) என்ற சொல் இரிக்கு வேதத்தில் காணப்படுகின்றது. இது வணிகர்களைக் குறித்த சொல்லாக டாக்டர் எஸ்.ஆர். இராவ் கருதுகிறார். இச்சொல் வடமெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்த இத்தியர்மொழி யிலும் காணப்படுவதாகவும் இராவ் கூறுகிறார். இதன் வழியில் இவ்விரு இனங்களும் ஓரினமே என்பது இராவ் அவர்களின் கருத்தாகும். பணி என்ற ஆரியச் சொல், சிந்துவெளியிலும் காணப்படுவதாக எஸ்.ஆர். இராவ் குறிப்பிட்டு, இத்தியர் - ஆரியர் - சிந்துவெளி மக்கள் ஆகியோர் ஓரினமே என்பதை மெய்ப்பிக்க முயல்கிறார். பணி என்பது வணிகர்களைக் குறித்த தமிழ்ச் சொல்லே என்பதை இராவ் அறிந்திருக்கவில்லை. பணி என்பதை வட ஆரியச் சொல்லென மயங்கிய தமிழறிஞர்களில் சிலர், பணிகர் என்ற சொல்லே, வணிகர் என்று திரிந்ததாகக் கூறினர். அது உண்மையே. வடமொழியில் உள்ள பகரம் தமிழில் வகரமாகச் சொல்லப்பட்டதைக் கருத்தில் கொண்டு, பணி - வணி என்றானது.

பணி என்பது தமிழ்ச் சொல்லே யென்பதைத் தமிழர்களே அறியாமல், பணியைத் தமிழ்ப் படுத்தி வணியாக்கினர். பண் - பண்ணுதல் - பண்ணியம் - பண்ணியர் போன்ற தமிழ்ச் சொற்கள் வணிகத்தோடு தொடர்பு கொண்டவை என்பதை,

கொடுப்போர் கடைதொறும் பண்ணியம் பரந்தெழ

என்ற மணிமேகலையின் செய்தி (7:124) வெளிப்படுத்துகின்றது.

பணி என்ற சொல், சிந்துவெளியிலும் தமிழகத்திலும் அறியப்பட்ட சொல்லாகும். தமிழகத்தோடும் சிந்து வெளியோடும் வணிகம் செய்துவந்த ஃபோனீசியர் என்பார், தமிழ் வணிகர்களே என்பதைப் பல்வேறு சான்றுகளால் நிறுவ இயலும். பணி - பணியர் எனப்பட்ட அவ்வணிகர்கள், பணீசியர் என்று கிரேக்கர்களால் அழைக்கப்பட்டனர். பணீசிய என்ற சொல்தான், பொணீசிய (Phoenicia) என்று பிற்காலத்தில் திரிபுபட்டது. பொணீசிய என்ற சொல்லுக்குக் கிரேக்கர்கள், வணிகர்கள் என்ற பொருளையே தந்தனர்.

மணிமேகலையை எழுதிய சாத்தனின் தந்தை ஒரு வணிகன் என்பதால், சாத்தனார் வணிகத் தொழில் பற்றி நன்கு அறிந்திருந்தார் எனலாம். சாத்தனார் பயன்படுத்திய பண்ணியம் என்ற தமிழ்ச் சொல், உலக மொழிகளிலெல்லாம் பரவிக் கிடப்பதைக் காணலாம். இன்றும் குசராத்தில் வாழும் வணிகர்களை, பணியா என்று அழைப்பதை ஒப்பிட்டு நோக்குக.

செட்டி ஏன்பது, தமிழ் வணிகர்களில் தலை சிறந்தவொருவருக்கு அளிக்கப்பட்ட விருதின் பெயராகும். பிற்காலத்தில் வணிகர் அனைவரும் செட்டி என்றே தங்களை அழைத்துக் கொள்வதில் பெருமை கொண்டனர். தொலைவிலுள்ள நாடுகளுடன் வாணிகம் செய்து வந்ததால் சேய்திசைக்குச் செல்வோர் என அறியப்பட்டனர். அட்டி என்பது அடுக்கிவைக்கப்பட்ட மூடைகளைக் குறிக்கும் சொல்லாகும். சேய்+அட்டி = தொலைவிலுள்ள இடங்களுக்கு மூடைகளை எடுத்துச் செல்பவன். சேய்அட்டி - செட்டி எனச் சுருங்கியது. செட்டி என்பதே, சேட்டு என்று வடமாநிலங்களில் திரிபுபட்டுள்ளது. எட்டி என்ற சொல்லே, செட்டி எனத் திரிந்ததாகவும் கூறுவர். எட்டி என்பதும் ஒரு விருது என்றே அறியப்படுகின்றது. மேலும் விளக்கத்தினை மாராயம் என்ற தலைப்பில் காண்க.

தூன் - ஸ்டெப்பிப் புல்வெளிப் பகுதிகளில் வாழ்ந்திருந்த ஆரியர், கி.மு. 5000 ஆண்டுகளில், மெசபத்தோமியாவினின்றும் வட பகுதிகளுக்குக் குடிபெயர்ந்திருக்க வேண்டும். அக்கால

அளவுகளில் தான் சுமேரியர் எனப்பட்ட சிந்துவெளித் தமிழரில் ஒரு பிரிவினர் மெசபத்தோமியாவின் மீது படையெடுத்தனர். பாரசீக வளைகுடாவழியே, கடல்வழியாக நுழைந்த சுமேரியர், மெசபத்தோமியாவின் தென்பகுதியான பாபிலோனைப் போரிட்டு வென்றனர். அக்காலத்தில் பாபிலோன் மற்றும் மெசபத்தோமியாவில் வாழ்ந்திருந்தோரும் கி.மு. 10000 ஆண்டு களில் அங்குக் குடிபெயர்ந்த தமிழரே எனலாம். பாபிலோனில் தமிழர் குடியேற்றம் என்பது, குமரிக் கண்ட அழிவு நிகழ்ச்சி யுடன் தொடர்புடையதாகக் கருத பல்வேறு காரணங்கள் உள்ளன. ஐயாயிரம் ஆண்டுகளாக, அங்கு வாழ்ந்திருந்த தமிழரின் தொடர்புகள், தாய்த்தமிழகத்துடன் துண்டிக்கப்பட் டிருந்ததால், பாபிலோனியத் தமிழ் பல்வேறு மொழிகளாகப் பிரிவுபட்டன. இவ்வாறு தமிழ் மொழி, பல மொழிகளாகக் கிளைத்த செய்தியை விவிலியம் விளக்குகின்றது. தொடக்கத் தில் தமிழ்மொழியையே பேசி வந்த தமிழர் இனம், காலப் போக்கில் பன்மொழிகள் பேசும் பல இனங்களாகக் கிளைத்தது. அவ்வினங்களில் சில வட பகுதிகளில் சென்று குடியேறினர். கிரேக்க நாட்டில் குடியேறியவர்கள் இக்கால அளவுகளில் சென்றவர்களே.

சுமேரியர் படையெடுப்பு, மெசபத்தோமியாவின் தென் பகுதியைத் துடைத்துப் போட்டது. இப்படையெடுப்பால் அதிர்ந்து போன மக்கள், மெசபத்தோமியாவின் வடபகுதியில் குடியேறினர். அவர்களே இத்தியர்கள் என்று அழைக்கப்பட்ட னர். இன்னொரு பிரிவினர் ஸ்டெப்பிப் புல்வெளிகளில் குடி யேறினர். அவர்களே இந்திய வரலாற்றில் ஆரியர்கள் என்று அழைக்கப் படுபவர்களாவர். தொல்தமிழ் பன்மொழிகளாகக் கிளைத்தவற்றில் இத்திய, கிரேக்க், ஆரிய மொழியிலும் அடங்கும். தமிழின் வேரும் மூலமும் இம்மொழிகளில் காணப் படுவது, முன்னர் அவர் முன்னோர் தமிழராயிருந்தது பற்றியே எனக் கருதலாம். இதன் வழியில், ஆரியரின் முன்னோரும், பாபிலோனியத் தமிழ் மரபில் தோன்றியவரே என்ற கருத்தில் ஆழம் உண்டு. இந்தியாவுக்கு வந்த ஆரியரின் நாடோடிக் கொச்சை மொழியிலேயே, தமிழ் மொழியின் தாக்கங்கள் இருந்தன என்பது, ஆரியரின் முன்னோர், பாபிலோனியருடன் கொண்டிருந்த உறவின் அடிப்படையிலானவை என்பது தெளிவு.

சுமேரியரின் படை எடுப்புக்குப் பிறகு, ஏறக்குறைய (4000 - 2000 கி.மு) ஈராயிரம் ஆண்டுகள், சுமேரியரோ அவருடன் தொடர்பு கொண்டவரோ பாபிலோனை ஆண்டனர். இவர்கள் காலமே, பாபிலோனிய நாகரிகத்தின் சிறப்பான காலமாகக் கருதப்படுகின்றது. உலகின் முதல் நாகரிகத்தையும் அறிமுகம் செய்தவர்கள் சுமேரியரே என்ற செய்தியும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டது. ஆனால், சுமேரியர் தமிழரே என்பதையும், சுமேரியர் தமது முன்னோரின் நாகரிகத்தையே பாபிலோனில் பரப்பினர் என்பதையும் அக்கால வரலாற்றாசிரியர்கள் அறிய வில்லை. சுமேரியரின் ஊர்நகர நாகரிகம், சிந்துவெளி மற்றும் பூம்புகார் நகர நாகரிகத்தின் தொடர்ச்சியே எனவும் ஆய்வாளர் கள் அறிந்திருக்கவில்லை.

சுமேரியர் காலத்தில் வடபகுதிக்குச் சென்ற ஆரிய இனம், எக்காரணம் கொண்டு தெற்கேயும் கிழக்கேயும் குடிபெயர்ந் தனர் என அறிய இயலவில்லை. மெசபத்தோமியாவின் வட பகுதியில் வாழ்ந்திருந்த ஆரியரில் ஒரு பிரிவினரான இத்தியர் எனப்பட்டோர், சுமேரியரின் நாகரிகத் தாக்கங்களால் உந்தப்பட்டு, வடக்கே சென்ற ஆரியர்களைப் போலின்றி, பல்துறைகளிலும் முன்னேறினர். சிறந்த ஆட்சியாளர்களாக வும், இலக்கியங்களைப் படைத்தவர்களாகவும் வரலாற்றில் இத்தியர்கள் அறியப்பட்டுள்ளனர். இவர்களை இந்திய - ஐரோப்பிய இனத்தில் சேர்ப்பது பற்றி, கருத்து வேறுபாடுகளும் உள்ளன.

○○○

6

இத்தியர்களும் ஆரியர்களும் (Hitties and Aryans)

இத்தியர்களுக்கும் ஆரியர்களுக்கும் இடைக்காலத்தில் எவ்வகையான தொடர்பும் இல்லையென்றும், தொன்மைக் காலத்திலேயே இவ்விரு இனங்களும் பிரிந்துவிட்டன என்ற செய்தியும் வரலாற்றில் காணப்படுகின்றது. விவிலியம் கூறும் செய்திகளின்படி, நோவா என்ற வெள்ள நிகழ்வால் அறியப் பட்டவன், முதன்முதலாக, கிழக்குத் திசையினின்றும் வந்து, தனது மனைவி மக்களுடன் பாபிலோன் பகுதியிலுள்ள தைகிரீசு ஆற்றங்கரையில் குடியேறினான் என்று அறியக் கிடக்கின்றது. நாவாய் என்ற தமிழ்ச் சொல்லைப் பெயராகக் கொண்ட நோவா, குமரிக் கண்ட அழிவின் போது, தப்பிப்பிழைத்துச் சென்று, பாபிலோனில் குடியேறியவன் என அறியலாம். நோவா தமிழனே என்பதற்கானச் சான்றுகள் விவிலியத்திலேயே காணப்படுகின்றன. நோவின் மூன்று மக்களுள் கடைமகனான யா-பெத் (Ya-pet) என்பானின் மரபினர் கிரேக்க நாட்டிலும், மெசபத்தோமியாவின் வடபகுதியிலும் குடியேறினர் என்றும், அவர்களே வரலாற்றில் இந்திய - ஐரோப்பியர்களாக அறியப் பட்டவர்கள் என்றும் விவிலியம் கூறுகிறது. யா-பெத் என்ப தும் கூட, தமிழ்ச் சொல்லாகவே அறியப்பட்டுள்ளது. அவனது மகன் யாவன் (yavan) என்பானின் மரபினர் கிரேக்கத்தில் வாழத்தலைப்பட்டனர். யாவன் மரபினரே யாவனர் எனப் பட்டனர். அவர்களை யவனர் என்று தமிழ் இலக்கியங்கள் தவறான சொல்லால் சுட்டுகின்றன. எபிறேய மொழியில் யாவன் என்ற சொல், யா என்ற எழுத்து நெடிலாகவே கூறப்பட்

டுள்ளது. இந்த யாவனின் மரபில் தோன்றிய மக்கள், மேலும் வடதிசை நோக்கிச் சென்றனர் என்றும், அவர்களில் ஒரு பிரிவினரே ஆரியர் என்றும் விவிலிய ஆய்வாளர்கள் கருது கின்றனர். யாவன் என்பானது தமிழ் மரபில் தோன்றியவரே ஆரியர் என்றும், கிரேக்க மொழிக்கும் ஆரிய மொழிக்கும் உள்ள தொடர்புகள் இதனை மெய்ப்பிப்பதாகவும் வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எனவே ஆரியரின் முன்னோர் தமிழ் மரபில் தோன்றியவரே என்பது தெளிவாகின்றது.

நோவாவின் இரண்டாவது மகனான அம் (Ham) என்பானின் மகன்களாக, ஈத் (Heth), கனான், போன்றோர் அறியப் படுகின்றனர். ஈத் என்பானை, கெதா (Ketha) என்ற எகிப்திய ஆவணங்களும், அட்டி (Hatti) என்று அசீரிய ஆவணங்களும், ஈத் என விவிலியமும் குறிப்பிடுகின்றன. கி.மு. 10000 ஆண்டு களில், ஈத் என்பானின் தோன்றல்கள், வட மெசபத்தோமியா வில் குடியேறியதாகவும், அவர்களே இத்தியர்கள் (Hittities) என அழைக்கப்பட்டார்கள் என்றும் விவிலிய விளக்கங்கள் கூறு கின்றன. இவர்கள் கனானியரின் பங்காளிகள் என அறியப் படும் செய்தியால், பாபிலோனியருடனும் இனமொழி வழி உறவு கொண்டவராவர். ஏனெனில், பாபிலோனியர் நோவாவின் முதல் மகன் வழி (Semites) மக்களாவர்.

நோவாவின் முதல் மகனான செம் (shem) என்பான் வழி யினர் பாபிலோனியர் என்றும், இடைமகனான அம் (Ham) என்பான் வழியினர் கனானியர் மற்றும் எகிப்திய - அராபியர் என்றும், மூன்றாம் மகனான யா - பெத் (yapet) மற்றும் அவன் மகன் யாவன் (Yavan) வழியினர் இந்திய - ஐரோப்பிய ஆரியர் என்றும், நாடுகள் பற்றிய பட்டியலில் (Table of nations) குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த அடிப்படையிலேயே மேலை நாட்டு மொழியியல் ஆய்வாளர்களும் மொழிகளை வகுத்துப் பிரித்துள்ளனர்.

அபிறகாம் என்ற யூத இனத்தின் தந்தை, சுமேரியர் வழி வந்தவனாகக் கருதப்படுகிறான். யூத - சுமேரிய இனங்களுக் கிடையேயான மொழி மற்றும் இனத் தொடர்புகள் வரலாற்றில் விளக்கப்பட்டுள்ளன. அபிறகாம் வாழ்ந்திருந்த கி.மு. 1900 ஆண்டுகளில், இத்தியர் இனத்தின் ஒரு பிரிவினர், கனானிய

நாட்டில் குடியேறியதாகவும், அவ்வினத்தின் ஒரு பெண்ணை, அபிறகாம் என்பானின் பெயரன் ஈசா (Esau) என்பவன் மணந்து கொண்டதாகவும் விவிலியம் (ஆதியாகமம் 26:34, 27:46; 36:2) கூறுகிறது. இத்தியர் எனப்படுபவர் இந்தோ ஐரோப்பிய ஆரிய ரல்லர் என்ற செய்தி விவிலியத்தின் வழியே விளக்கப்பட்டாலும், சில ஆய்வாளர்கள் இவர்கள் வாழ்ந்திருந்த வட பகுதியைக் கருத்தில் கொண்டு, இவர்களை வடஆரிய இனத்தில் சேர்க்க முயன்றுள்ளனர்.

டாக்டர் எஸ்.ஆர். இராவ் போன்றவர்கள், சமற்கிருத மொழி, மேற்கண்ட இத்தியர்கள் பேசிய மொழியுடன் தொடர்பு கொண்டுள்ளது எனக் கூறி, இத்தியர்களும் ஆரிய மரபினரே எனக் கருதுகிறார். மேலை நாடுகளில் பேசப்பட்ட எகிப்தியம், கனானியம், எபிறேயம், ஃபோனீசியம், அரபு, அக்காடியம், இத்தியம், கிரேக்கம், மேலை ஆரியம் போன்ற மொழிகளுக் கிடையே பொதுவான தொடர்புகள் உண்டென்பதை மொழி யியலார் ஏற்றுக் கொண்டுள்ளனர். இம் மொழிகள் ஏதோ வொரு பொதுவான மொழியினின்றும் கிளைத்தவைகளே என்பதையும் ஏற்றுக் கொள்கின்றனர். அப்பொது மொழி எது வென்பதை அவர்களால் கூற இயலவில்லை.

எபிரேயம், ஃபோனீசியம் போன்ற மொழிகள், மேற்கண்ட மொழிகளோடு ஒற்றுமைப்படுவதைக் கருத்தில் கொண்டு, இவைகளையும் செமிட்டிக் மொழியினத்தில் இணைத்துள் ளனர். உண்மையில் எபிரேயம் (Hebrew) மற்றும் போனீசியம் (Phoenician) ஆகிய மொழிகள் சுமேரிய மொழியின் கிளை மொழிகளே என்பதற்கானச் சான்றுகளே பெருமளவில் உள்ளன. செமிட்டிக் என்பது,

கி.மு. 10000 ஆண்டுகளில் பாபிலோனில் பேசப்பட்டு, பின்னர் அதனின்றும் கிளைத்த மொழிகளே என்றும், சுமேரியம் என்பது, கி.மு. 5000 ஆண்டுகளில் பாபிலோனில் பேசப்பட்ட சிந்துவெளித் தமிழ்மொழியே என்றும் கருதலாம்.

கீழை ஆரியம் : சமற்கிருதம் என்பது மேலை ஆரியமொழி யும், சிந்துவெளித் தமிழும் கலந்த புதிய மொழியாகும்.

மேற்கண்ட மொழிகள் அனைத்திலுமே தமிழ்மொழியின் வேர்ச்சொற்கள் விரவிக்கிடக்கின்றன. மேற்கண்ட மொழிகளில்,

சமற்கிருதமும், இன்றைய தென்னக மொழிகளும் காலத்தால் மிகவும் பிற்பட்டவைகள் ஆகும். (கி.மு. 2000க்குப் பிறகு தோன்றியவை)

முன்னை பாபிலோனிய மொழி தமிழென்றும், பின்னை பாபிலோனிய மொழி செமிட்டிக் மொழியின் ஒரு பிரிவென்றும் கொள்ள வேண்டும். பின்னை பாபிலோனிய மொழியும் சுமேரிய மொழியும் கலந்ததே அக்காடியம் (Akkadian) என்ற புதிய மொழியாகும். அக்காடிய மொழி, சுமேரியர் ஆண்ட காலத்தே பரவலாகப் பேசப்பட்ட மொழியாகும். எபிரேயம் என்ற மொழியை செமிட்டிக் இனத்துடன் இணைத்துக் கூறியுள் ளனர். எபிரேயமொழி செமிட்டிக் மொழிகளோடு ஒற்றுமைப் பட்டுள்ளதை மறுக்க இயலாது. எனினும் எபிரேய மொழி பேசிய மக்கள், பாபிலோனியப் பகுதிக்குப் புதியவரவாகவே அறியப்படுவதாலும், மொழி இன அடிப்படைகளில் சுமேரிய ருடன் தொடர்பு கொள்வதாலும், எபிரேயம் சுமேரிய மொழி யின் கிளை மொழியே எனக் கொள்ளுதலும் தவறாகாது என லாம். எபிரேயம் என்ற மொழியின் சிற்சில மாற்றங்களுடன் பேசப்பட்ட மொழியே அறமாயிக் (Aramaic) என்பதாகும். எபிரேயம் - அறமயிக் ஆகிய மொழிகளிடையே பெருமள விலான வேறுபாடுகள் இல்லை. ஏறக்குறைய, யாழ்ப்பாணத் தமிழும் தமிழகத்துத் தமிழ் போன்ற நிலையையே அவை கொண்டிருந்தன. அறமாயிக் என்பதும் தமிழ்ச் சொல்லே. அறம் (Aram) என்பான், நோவாவின் ஒருபெயரன் ஆவான். அவன் வழிவந்த மக்கள் வாழ்ந்திருந்த பகுதி, யூப்ர்டீஸ் - தைகிரிஸ் ஆறுகளுக்கு இடைப்பட்ட சமவெளிப் பகுதியாகும். அப்பகுதி பரந்து விரிந்து காணப்பட்டதையொட்டி படன் அறம் என்ற தமிழ்ச் சொல்லாலேயே அழைக்கப்பட்டது. Padan Aram என்றவாறு சொல்லப்பட்ட அப்பகுதி மக்கள் பேசிய மொழி, அறமொழி எனப்பட்டது. வாய் என்ற தமிழ்ச் சொல்லுக்கு மொழி என்ற பொருளும் உண்டு. நா (tongue) என்றுங் கூடச் சொல்லப்பட்டது. அறம் வாய் என்ற தமிழ்ச் சொல்லே, அறமாய் - அறமாயிக் (Aramaic) என்று திரிந்தது என்க.

மேற்கண்ட மொழிகளில் வட மெசபத்தோமிய மக்கள் பேசிய இத்திய மொழிக்கும் சமற்கிருதத்துக்கும் உள்ள தொடர்பை எஸ்.ஆர். இராவ் சுட்டிக்காட்டியது பற்றி

ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொல்ல வேண்டு மெனில், இந்தியா பாரசீகம், நடுத்தரைக் கடலையொட்டியிருந்த அனைத்து நாடுகளிலும் தமிழ் மொழியோ, தமிழினின்றும் கிளைத்த மொழிகளோதான் கி.மு. 5000 ஆண்டுகளில் பேசப் பட்டன என்பது தெளிவு. இவ்வாறு, ஸ்டெப்பி புல்வெளிப் பகுதியில் வாழ்ந்திருந்த மேலை ஆரிய இனத்தின் மொழியும் தமிழ் மொழியின் கிளை மொழியாகவே இருந்தது. ஆரியரின் இந்திய வருகைக்குப் பின் அம்மொழி, சிந்து வெளித் தமிழால் மேலும் செம்மைப் படுத்தப்பட்டு, சமற்கிருதம் என்று சொல்லப்பட்டது. சமற்கிருதம் என்பது செம்மைப்படுத்தப் பட்ட மொழி (Refined language) என்பது பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளதை நினைவில் கொள்க. சமற்கிருத மொழி யின் தோற்றமும் வரலாறும் இவ்வாறு இருக்க, சமற்கிருதமே இந்தியாவின் மூத்த முதன்மொழியென்றும், சமற்கிருதத் தினின்றே தமிழ் தோன்றியது என்றும், எந்த அடிப்படையில் கூறுகின்றனர் என்பதை, கூறுபவர்களாலேயே விளக்கம் கூற இயலாது என்பதும் தெளிவு.

சமற்கிருதம், கி.மு. 2000 ஆண்டுகட்குப் பிறகு தோன்றிய மொழியே என்பதும், அதற்கு முன்பாக ஆரியர் பேசி வந்த மொழி மேலை ஆரியத்தின் ஒரு பிரிவே என்பதும் வரலாற்று அடிப்படையில் மெய்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், சமற்கிருதம் கி.மு. 30000 ஆண்டுகட்கு முன்பே தோன்றியதாகச் சிலர் கூறுவது, எந்த அடிப்படைச் சான்றும் தர இயலாத கற்பனைக் கருத்தாகும். மாக்ஸ் முல்லர் என்ற செர்மானிய சமற்கிருத ஆய்வாளர், முதலில் சமற்கிருதம் தோன்றியது கி.மு. 1000 ஆண்டுகளில் எனக் கூறினார். பின்னர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை, ஐந்தாண்டுகளுக்குப் பிறகு சமற்கிருதத்தின் அகவை, கி.மு. 3000 ஆண்டுகட்கு முற்பட்டது என்று மாற்றிச் சொன்னார். கி.மு. 3000 ஆண்டுகளில், இந்தியாவில் தமிழைத் தவிர வேறு மொழிகள் பேசப்பட்டதாக வரலாறு இல்லை. தமிழ்தான் இந்தியாவெங்கும் பேசப்பட்டது என்பதற்கானச் சான்றுகள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன. சிந்துவெளி நாகரிகம் நிகழ்வுற்ற காலம், கி.மு. 7500 ஆண்டுகட்கு முற்பட்டது என, இந்திய அரசு அறிவித்துள்ளதை நோக்குக. நமது கருத்துப்படி, சிந்துவெளி நாகரிகம் கி.மு. 12000 ஆண்டுகள்

தொடங்கி, கி.மு. 1800 ஆண்டுகள் வரை தொடர்ந்திருந்தது என்று கொள்ளலாம். இந்தியாவெங்கும் காணப்படும் கல்வெட்டுகள், பானை ஓடுகள், காசுகள் போன்றவைகளில் சமற்கிருதம் தொடர்பான எச்செய்தியும் காணப்படவில்லையென்பதும், அவைகள் யாவும் தமிழ் - தமிழர் பற்றிய செய்திகளையே கொண்டிருக்கின்றனவென்பதும், அறியப்பட்டுள்ள நிலையில், சமற்கிருதத்தினின்றே தமிழ் தோன்றியதே என்ற கொள்கை, அடிபட்டும் போய்விட்டது என்பதை, சமற்கிருதப் பற்றாளர்களே இன்று ஏற்றுக் கொண்டுள்ளனர்.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வருகை தந்ததது	:	கி.மு. 2000 ஆண்டுகளில்.
சமற்கிருதம் என்ற மொழி உருவாக்கப்பட்டது	:	கி.மு. 1500-1000 ஆண்டுகளில்.
வேத காலம் எனப்பட்டது	:	கி.மு. 1500 - ஆண்டுகளில்.
இராமாயணம் நிகழ்வுற்றதாகக் கருதப்பட்டது	:	கி.மு. 1500 ஆண்டுகட்குப் பிறகே.
மகாபாரம் நிகழ்வுற்றதாகக் கருதப்பட்டது	:	கி.மு. 1000 - 750 ஆண்டுகளில்.
வேதங்கள் தொகுக்கப்பட்டது	:	கி.மு. 500 ஆண்டுகளில்.
சமற்கிருதத்துக்குப் புதிய வரி வடிவங்கள் உருவாக்கப்பட்டது	:	கி.பி. 200 ஆண்டுகளில்.
வேதங்கள், புராணங்கள், இதிகாச இலக்கியங்கள் எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட்டது	:	கி.பி. 200 ஆண்டுகளுக்குப் பிறகே.
ஆரியரின் தென்னாட்டு வருகை	:	கி.மு. 500 ஆண்டுகளில்.
ஆரியம் தமிழைத் தன்வயமாக்கியது	:	கி.பி. 500-1500 ஆண்டுகளில்.

சமற்கிருதமே முதன்மொழி எனக் கூறப்பட்டது	:	கி.பி.1500 ஆண்டுகளுக்குப் பிறகே.
மணிப்பிரவாள நடை தோன்றியது	:	கி.பி.1000 ஆண்டுகளில்.
தெலுங்கு மொழி தோன்றியது	:	கி.மு.500 ஆண்டுகளில்
கன்னட மொழி தோன்றியது	:	கி.பி.500 ஆண்டுகளில்
மலையாள மொழி தோன்றியது	:	கி.பி.1000 ஆண்டுகளில்.

○○○

7. குமரிக் கண்டத்துத் தமிழ் (கி.மு.12000)

சிந்துவெளித் தமிழ் (கி.மு.10000) → சுமேரியம் - பார்த்தீயம் (பார்சீ)

தமிழகத்துத் தமிழ் (கி.மு.10000) → தென்னக மொழிகள் அனைத்தும்.

பாபிலோனியத் தமிழ் (கி.மு.10000) → நோவாவின் மரபினர் பேசிய மொழி (கி.மு.10000)

எபிரேயம் - ஃபோனீசியம் - அக்காடியம்.
எபிரேயம் : யூதர்களின் மொழி.
ஃபோனீசியம் : ஃபோனீசியர் மொழி
அக்காடியம் : ஊர்நகரத்துப் பாபிலோனியமொழி

நோவாவின் மரபினர் பேசிய மொழி (கி.மு.10000)

செமிட்டிக் மொழி (முதல் மகன்வழி) → பாபிலோனியம், கல்தேய மொழி

கனானிய மொழி (இரண்டாம் மகன்வழி) → அரபு, எகிப்தியம், எத்தியோப்பியம்

இந்தோ - ஐரோப்பிய மொழி* (மூன்றாம் மகன் வழி) → கிரேக்கம், மேலை ஆரியம் முதலியன.

---

* இந்திய ஐரோப்பிய மொழியினம் என்பது மேலை ஆரியம், கீழை ஆரியம் என்று பிரிக்கப்பட்டுள்ளன. மேலை ஆரிய மொழிகளாவன: கிரேக்கம், இலத்தீன், செர்மானியம் உள்ளிட்ட இன்றைய ஐரோப்பிய மொழிகள்.

8

வேத காலம்

இந்திய வரலாற்றுப் புத்தகங்களில் (5ஆம் வகுப்பு முதல்), ஆரியர் என்ற முரட்டுக் கூட்டத்தார் இந்தியாவின் வட மேற்குப் பகுதியான பஞ்சாப் எல்லையில், புயற்காற்றைப் போல் நுழைந்து, அங்கு ஆண்டுக் கொண்டிருந்த திராவிட மன்னர்களைப் போரில் புறங்கண்டு, சிந்துவெளிப் பகுதியைப் பிடித்துக் கொண்டனர் என்றும், உயிருக்கு அஞ்சிய திராவிட மன்னர்கள், தென்னாட்டிற்கு ஓடிவந்து விட்டனர் என்றும் சொல்லப்பட்டிருந்தது. இதே செய்தியை அடிப்படையாகக் கொண்டு, மேலை நாட்டவரும், ஆரியர்களின் படையெழுச்சி என்று தலைப்பிட்டு எழுதலாயினர். இது நிகழ்வுற்றது கி.மு. 1500 ஆண்டுகளில் என்று மேலை நாட்டவரே கூறுகின்றனர். ஆரியரின் இந்திய வருகைக்குப் பிறகே, இந்திய வரலாறு தொடங்குவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

ஆரியர்களின் வாழ்க்கை முறைமைகளை விளக்கும் வேதங்களும், புராணங்களும், இதிகாசங்களும் இன்னபிற நூல் களும், ஆரியர்கள் எந்தவொரு போரிலும் ஈடுபட்டதாகத் தெரிவிக்கவில்லை. ஆரியர்களின் வருகையின் போது அவர் களின் எண்ணிக்கை எந்த அளவில் இருந்தது என்பதற்கானச் சான்றுகள் ஒன்றுகூட இல்லை. ஒரு குழுவினரே இந்தியா வுக்குள் நுழைந்தனர் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அக்குழுவில் ஓரிலக்கம் பேர் இருந்தனர் என்று கற்பனை செய்து கொள்வதும் கூட இயலாதவொன்றாகவே தெரிகின்றது. ஓரிலக்கம் பேரும், அவர்களுக்குரிய கால் நடைகளும், தட்டு முட்டுப் பொருட்களும் என்ற அளவில் கற்பனையாகச்

சிந்தித்தால் கூட, அக்கால அளவுகளில் ஒருசேர இவ்வாறு குடிபெயர்தல் என்பது நடக்கவியலாத நிகழ்வாகும். எனவே, ஆரியர்கள் சிறு சிறு குழுக்களாகப் பல்வேறு கால அளவு களில் இந்தியாவுக்குள் நுழைந்தனர் என்பதே ஏற்றுக் கொள்ளத் தக்கச் செய்தியாகும்.

இரிக்கு வேதம் கூறும் செய்திகளின்படி, சிந்துவெளியில் ஆற்றல்மிக்க, போர்த்திறமை கொண்ட மன்னர்கள் ஆண்டு வந்ததாக அறியலாம். கி.மு. 12000 ஆண்டுகள் தொடங்கி, உலகின் நாகரிகக் கொட்டிலாக விளங்கிய சிந்து வெளியின் மன்னர் களை, ஆரியர்கள் போரில் வென்றதாக இரிக்குவேதம் கூற வில்லை. வந்தாரங்குடிகளாக வந்துற்ற ஆரியர்கள், சிந்துவெளி மக்களையும் மன்னர்களையும் நத்தியே வாழ்ந்திருந்த செய்தி களை இரிக்கு வேதம் கூறுகிறது. திராவிட மன்னர்களை ஆரியர்கள் வென்றெனர் என்ற செய்தி இந்திய வரலாற்றில் திணிக்கப்பட்ட மோசடியான செய்தியாகும். இச் செய்தியைத் திட்டமிட்டே, ஆரியச் சார்பாளர்கள், பள்ளிகளிலும், பாட நூல்களிலும் திணித்து, திராவிடர்கள் கோழைகள் என்றும், ஆரியர்கள் ஆற்றல் மிக்கவர்கள் என்றும் பொய்யான தோற்றத்தை இளநெஞ்சங்களில் திணித்துவிட்டனர்.

வேதங்கள் எழுதப்பட்ட காலமே வேதகாலம் என்று சொல்லப்பட்டது. வேதங்கள் எழுதப்பட்டன என்பது கூடத் தவறானதாகும்; சொல்லப்பட்டன என்பதே சரியான சிந்தனை யுமாகும். வேதம் சொல்லப்பட்ட போது, சமற்கிருத மொழிக்கு வரிவடிவங்கள் இல்லை. எனவே, வாய்மொழியாகவே வேதச் செய்திகள், அடுத்த தலைமுறையினருக்கு மாற்றம் செய்யப் பட்டன எனக் கருதலாம். வேதகாலம் என்று ஒருகாலம் இருந்ததேயில்லையென்று, பாவாணர் கூறுகிறார். ஆரியர்கள் பல்கிப் பெருகிய இக்காலத்தில் கூட, நாட்டுப்புறங்களில் ஊருக்கு ஓரிரு குடிகளே உள்ள நிலையில், மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பு, அவர்களின் எண்ணிக்கை. எந்த அளவில் இருந்திருக்கும் என உணரலாம். வேதகாலம் என்று ஆரியச் சார்பாளர் கூறும் காலமே, கி.மு. 1500 ஆண்டுகள்தான் என அறியலாம். வேதகாலம், கி.மு. 50000-30000 ஆண்டுகளில் இருந்ததாகக் கூறுவது கொடுமையான பொய்யாகும்.

வேதங்கள் சொல்லப்பட்ட காலம், இன்னும் கூடப் பின்னோக்கிச் சென்றிருக்க வாய்ப்புண்டு. ஏனெனில், கி.மு. 1500 ஆண்டுகளில், சமற்கிருதம் என்ற மொழி உருவானதற்கானச் சான்றுகள் இல்லை. மக்களாலும் அது அறியப்படவில்லை. அக்காலத்தில் தமிழ்க் கணியர்கள் நடத்தி வந்த ஐந்திரப் பள்ளிகள் (Schools of grammer, thoughts, science, language etc). வட இந்தியாவெங்கும் இருந்ததாக, பல்வேறு அறிஞர்களும் கருதுகின்றனர். இப்பள்ளிகளில் ஆரியரும் பயிற்சி பெற்றனர் எனலாம். இக்காலங்களில், ஆரியர்கள் இந்திய மக்களிடம் பெற்ற பட்டறிவின் வெளிப்பாடுகளே வேதங்கள் எனப்பட்டன. வேதம் என்பதற்கு அறிவு (Knowledge) என்பதே பொருளாகும்.

இந்தியத் தமிழ் மக்களுடன் ஆரியர் கலந்த போது ஏற்பட்ட வாழ்க்கை முறை மாறுதல்கள், ஏற்றத் தாழ்வுகள், வேட்கைகள் வெறுப்புகள் ஆகியவை அடங்கிய வாழ்க்கைப் பட்டறி வையே வேதங்களாகச் சொல்லி வைத்தனர். இவ்வேதங்களை ஆரியர்களே உருவாக்கினர் என்பது கூடத் தவறான செய்தி யாகவே தெரிகின்றது. வேதங்களைச் சொன்னதாக பதினேழு ஆசிரியர்களை, இரிக்கு வேதம் அடையாளம் காட்டுகிறது. இவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ்ப் பெயர்களையே கொண்டுள்ளனர் என்பதை அறியலாம்.

ஆரியரிடையே காணப்பட்ட பத்து கோத்திரங்கள் (பிரிவு கள்) பற்றிய செய்தி இரிக்கு வேதத்திலேயே காணப்படுகின்றது.

முதலாவது கோத்திரம்	=	கண்ணுவன்,
இரண்டாவது கோத்திரம்	=	அங்கிரன்,
மூன்றாவது கோத்திரம்	=	அகத்தியன்,
நான்காவது கோத்திரம்	=	சுநகன்,
ஐந்தாவது கோத்திரம்	=	விசுவா மித்திரன்,
ஆறாவது கோத்திரம்	=	அத்திரி
ஏழாவது கோத்திரம்	=	வசிட்டன்
எட்டாவது கோத்திரம்	=	காயவன் (காசிபன்)
ஒன்பதாவது கோத்திரம்	=	பதர்யாசுவன்
பத்தாவது கோத்திரம்	=	சமதக்கினி

இந்த பத்து கோத்திரங்கள்தான் ஆரியர்களின் மக்கள் தொகையே எனலாம். முதல் கோத்திரமே, தமிழ்ப் பெயரைச் கொண்டுள்ளதை நோக்குக. கணியன் என்ற தமிழ்ச் சொல்லே, கண்ணுவன் என்று சொல்லப்பட்டுள்ளது. மேற்கண்ட கோத்திரத் தாரின் வழி வந்தவர்களும் இரிக்கு வேதப் பாடல்களை இயற்றியுள்ளனர்.

எடுத்துக்காட்டாக விசுவாமித்திரன் வம்சத்து மதுச்சந்தன், மதுச்சந்தனின் மகன் சேதா, கண்ணுவன் மகன் மேதாதிதி, கோரன் மகன் கண்ணுவன், அங்கிரசன் மகன் செவ்வியன், கோதமன் மகன் நோதசன் என்றவாறு விரியும்.

(சிவத்தியாநா நந்த மஹர்ஷி, ரிக்வேத ஸம்ஹிதை, சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, 1937).

வேதங்களில் சொல்லப்பட்டுள்ள செய்திகளின் படி, ஆரியர்கள் பேராசைக்காரர்களாக இருந்தனர் என்பதை அறிய முடிகின்றது. சிந்து வெளியில் வாழ்ந்திருந்த பல தமிழ் மன்னர் களின் பெயர்கள் இரிக்கு வேதத்தில் சொல்லப்பட்டுள்ளன. அவர்களது செல்வச் செழிப்பும் போர்த்திறமைகளும், ஆளு மைப் பண்புகளும், வேளாண்மைப் பொறியியல் அறிவும், உலைத்தளங்களும், ஆலைகளும், இன்னோரென்ன செய்திகள் இரிக்கு வேதத்தில் காணப்படுகின்றன.

பெண்கள் கறுப்பாயிருந்தாலும் பேரழகிகளாக உள்ளனர் என்றும், அவர்கள் அணிந்துள்ள பொன்னகைகள், அவர்களின் அழகுக்கு அழகு செய்கின்றனவென்றும், அப்பெண்களை அடைய வழியொன்றும் தெரியவில்லையென்றும், அப்பெண் களை நினைக்கும் போது இரவில் தூக்கம் வருவதில்லையென் றும், வெட்கத்தை விட்டு ஆரியர்கள் புலம்பும் காட்சிகள் இரிக்கு வேதத்தில் காணப்படுகின்றன.

விரித்திரன் என்ற சிந்துவெளி மன்னன், தங்களை மதிப்ப தில்லையென்றும், தங்கள் கால் நடைகளையெல்லாம் கவர்ந்து சென்றுவிடுகிறான் என்றும், அவைகளைக் குகைகளில் அடைத்து வைத்திருக்கிறான் என்றும், அவைகளை மீட்டுத் தருமாறு இந்திரனிடம் கெஞ்சும் காட்சிகளும் இரிக்கு வேதத்தில் காணப் படுகின்றன.

ஆற்றின் குறுக்கே பெரிய அணையைக் கட்டி, நீரைத் தேக்கி அதனை வேளாண்மைக்குப் பயன்படுத்தும் விரித்திரனின் ஆளுமைத் திறத்தால், குடிமக்கள் துன்பமின்றி வாழ்வதாகவும், அவ்வணைகளைத் தனது மனைவியின் மேலாகப் பற்றியிருப் பதாகவும், அவ்வணைகளை உடைத்துவிட்டால், விரித்திரனின் இறுமாப்பு ஒழிந்துவிடும் என்றும், விரித்திரனை எப்படியாவது கொன்று போடும் படி இந்திரனைக் கேட்டுக்கொள்ளும் காட்சி களும் இரிக்கு வேதத்தில் காணப்படுகின்றன.

சிந்துவெளிப் பேரரசில் பல மன்னர்கள் ஆண்டு வந்த செய்திகளும் அம்மன்னர்களுக்கிடையே உட்பகையை ஆரியர் தோற்றுவித்து, வஞ்சகமாக ஒவ்வொருவரையும் கொல்ல எண்ணியது பற்றிய செய்திகளும் வேதத்தில் காணப்படுகின்றன. இந்திரன் - விருத்திரன் போர் கூட இவ்வாறு தூண்டிவிடப் பட்டதே. இந்திரன் என்பான் ஒரு தமிழ் மன்னனே என்றும், அவனைத் தம் கைக்குள் போட்டுக் கொண்ட ஆரியர்களின் சூழ்ச்சிகளே இரிக்கு வேதத்தில் விலாவாரியாகச் சொல்லப் பட்டுள்ளதென்றும் பாவாணர் கருதுகிறார். இரிக்கு வேதம் என்பது, எல்லோரும் எண்ணிக் கொண்டிருந்தது போல், அது கிடைத்தற்கரிய நூல் அல்லவென்றும், அது சிந்து வெளி மக்களைப் பற்றிய செய்திகளை விளக்கும் இலக்கியச் சான்றுகள் நிறைந்ததே என்றும், உயர்வான மெய்யியல் கருத்துக்களோ மக்களின் வாழ்க்கையை நெறிமுறைப்படுத்தும் செய்திகளோ இரிக்கு வேதத்தில் காணப்படவில்லையென்றும், இரிக்கு வேதம் என வியந்தவர்களுக்கு, இதுதான் இரிக்கு வேதமா என்று எண்ணத் தோன்றுகிறது என்றும் குருவிக்கரம்பை வேலு குறிப்பிடுகின்றார்.

கம்பன், அயோத்தி நாட்டைச் சோழ நாடாகக் காட்டுவது போன்று, இரிக்கு வேதத்தில் காணப்படும் பல செய்திகள், தமிழ் நாட்டுச் சூழல்களை நினைவு படுத்துவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மூடி மறைக்கப்பட்ட உண்மைகள், இரிக்கு வேதத்தில் சொல்லப்பட்டுள்ளதாக ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கி, உலக வேத நூல்களில் உயர்வான வேதம் என்று காட்டப்பட்டது எவ்வளவு பொய்யான செய்தி என்பதையும் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

இரிக்கு வேதத்தில் பல சொற்கள் தமிழ்ச் சொற்களாகவே அறியப்பட்டுள்ளன. குருவிக் கரம்பை வேலு மிக நீண்ட பட்டியலொன்றையே கொடுத்துள்ளார். சமற்கிருதத்திலிருந்தே தமிழ் பிறந்ததாகக் கூறுபவர்கள், இரிக்கு வேதத்தில் எவ்வாறு தமிழ்ச் சொற்கள் இடம் பெற்றன என்பதை இதுவரையிலும் விளக்கவில்லை. இரிக்கு வேதத்தில் நாற்பது விழுக்காட்டுக்கும் மேலான தமிழ்ச் சொற்கள் உள்ளனவென்று பாவாணர் கருதுகிறார். எனவே, சமற்கிருதமே இந்திய மொழிகளுக்கு மூலமானதென்றும், சமற்கிருதத்திலிருந்தே தமிழ் தோன்றியதென்றும், சமற்கிருதச் சொற்களின்றித் தமிழ் தனித்தியங்க வியலாது என்றும், தொல் காப்பியத்திலேயே நூற்றுக்கணக்கானத் தமிழ்ச் சொற்கள் உள்ளனவென்றும் கூறப்பட்ட செய்திகள் யாவும், மலைமலையான பொய்ச் செய்திகளே என்றும் அறியலாம்.

வேதங்கள் நான்கெனக் கூறப்படுவதையும் பாவாணர் மறுக்கிறார். தமிழர் வாழ்வியலில், நான்கு நிலங்களுக்குமான கடவுளர், வணக்க முறைகள், வாழ்க்கை நெறிகள் கூறப்பட்டிருந்தன. அந்நான்கு நிலங்களின் அடிப்படையிலான நெறிகளே நான் மறைகள் எனப்பட்டன. தமிழில் நான்கு நெறிகள் உள்ளதைக் கண்ட ஆரியர், ஒரே வேதமான ஆரிய வேதத்தை, நான்கு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டனர் என்றும் பாவாணர் குறிப்பிடுகின்றார். தமிழில் கூறப்படும் நான்மறைகள் என்பது தமிழ்நெறிமுறைகளேயன்றி, ஆரிய வேதங்களன்று என்பதும் பாவாணர் கருத்தாகும்.

இந்தியச் சமயவரலாறு, ஆரியர்கள் காலத்திலிருந்து தான் தொடங்கியது போன்ற மாயத் தோற்றத்தை வரலாற்றாய் வாளர்கள் உருவாக்கிவிட்டனர். வேத, பிராமண, இந்து என்ற மூன்றடுக்குக் காலங்களை ஆய்வாளர்கள் அறிவித்தனர். இதுவும் கூட கற்பனையான காலமே எனலாம்.

(More abundant information about religion in India comes from the relics of Aryan tribes that invaded Northwest India around the middle of the second millennium B.C. The Hisory of religion in India from that time to the present is usually divided into three periods : Vedic, Brahmanic and Hindu.

- Sergei Tokarev, History of Religion, pp. *161-62)*

ஈரானிய புல்வெளிப் பகுதியினின்றும் இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியர், அப்போது சிந்து வெளியில் வாழ்ந்திருந்த மக்களுடன் ஒப்பிடத்தக்க அளவுக்கு நாகரிக வளர்ச்சி பெற்றிருக்கவில்லையென்றும், மொகஞ்சதாரோ நாகரிகத்துக்கும் தாழ்வான வாழ்க்கைத் தரம் கொண்டிருந்த நாடோடிக் கும்பலாகவே அவர்கள் விளங்கினர் என்றும் ஆய்வாளர்கள் தெளிவுபடுத்துகின்றனர்.

(The Aryans who came to India from the Iranian highlands were not culturally related to the native population, the creators of Mohenjo - daro civilization. Their cultural level was lower and they were semi - nomadic. - History of religion, p. *162)*

கி.மு. 1500 ஆண்டுகளில் இந்தியாவுக்கு வந்த ஆரிய இனம், இந்தியர்களைவிட எவ்வகையிலும் உயர்ந்த நிலையில் அறியப்படாத அவ்வினம், இந்திய மொழிகளுக்குத் தாயாக சமற்கிருத மொழியைக் கொண்டிருந்தது என்பது வரலாற்று மோசடியல்லவா! ஆரியர்களே இந்தியர்களுக்கு அறிவியலையும் வானியலையும் கற்றுத்தந்தனர் என்பதும் நகைப்பிற் கிடமான செய்தியல்லவா!

ஆரியரின் தென்னாட்டு வருகை, கி.பி. 500 ஆண்டுகட்குப் பிறகே நிகழ்வுற்றிருக்க வேண்டும். ஆரியரின் தமிழக வருகைக்கு முன்பே எழுதப்பட்ட தொல்காப்பியம், ஆரியர் என்ற சொல்லையோ, சமற்கிருதம் என்ற சொல்லையோ பயன்படுத்தவே யில்லை. பொருளதிகாரத்தில் காணப்படும் (1570 முதல் 1574 வரையிலான) 12 வரிகள் இடைச் செறுகலாகத் திணிக்கப் பட்டவையே என்று வெள்ளை வாரணனார் கூறுவதை நோக்குக. இவ்விடைச் செறுகல்களும் கூட, ஆரியன் என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. அந்தணர் என்ற சொல், அழகான தமிழ்ச் சொல்லே என அறிதல் வேண்டும்.

அந்தண்மையென்பது, தங்களைப் பல்வேறு வகையில் தாழ்த்திக் கொண்டிருக்கும் பற்றற்ற துறவிகளுக்குரிய சொல் லாகும். தண்மை = தாழ்ச்சி, பணிவு.

இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்று

அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே

– தொல்காப்பியம், பொருள். 880.

இயற்சொல்	:	வழக்கிலுள்ள தமிழ்மக்கள் பேசும் சொற்கள் (Common words).
திரிசொல்	:	ஒரு சொல்லுக்குப் பல்பொருள் தரும் சொற்கள் (Learned words).
திசைச் சொல்	:	வட்டாரச் சொற்கள் (Provincial words).
வடசொல்	:	தமிழகத்துக்கு வடக்கே வழங்கப்பட்ட சொற்கள் (Corrupted Tamil words beyond Vada Venkatam).

கி.மு. 1000 ஆண்டுகளில், வேங்கட மலைக்கு வடக்கே பேசப்பட்டது திரிபுபட்ட தமிழ் மொழியே எனலாம். அதனை சமற்கிருதம் என்று கூற இயலாது. எடுத்துக்காட்டாக, உலட்டி என்ற தமிழ்ச் சொல், மதுவைக் குறித்தது. உல் - உல - உலா வென நீளும் அச்சொல், மதுவுண்டதால் அலையும் தன்மையை விளக்குகிறது.

இச்சொல், வடபகுதியில் லொட்டி என அழைக்கப் பட்டது. லொ என்ற எழுத்தில் தமிழ்ச் சொற்கள் தொடங்க இயலாத நிலையில், உலொட்டி என்றே அச்சொல்லைப் பயன்படுத்தலாம் என்பதே தொல்காப்பியரின் கூற்றாகும்.

உலட்டி என்ற சொல், உலொட்டி என்றும் சொல்லப் படலாம் என்பதே அக்கருத்தாகும். பரவு என்பது, பரவர்கள் தங்கள் மரக்கலங்களை நிறுத்துமிடம் என்று அறியப்படும். இச்சொல் ரேவு என்று வடசொல்லாயிற்று. இதனைத் தமிழில் இரேவு என்றனர். இவ்வாறு தமிழினின்றும் திரிந்த வடசொற் களை, அச்சொற்களின் ஒலிப்பிலேயே தமிழ்ப்படுத்தி எழுதும் முறையைத்தான் தொல்காப்பியர் கூறினார் என்க.

தொல்காப்பியத்திற்கு உரையெழுதியவர்கள், கி.பி. 10ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர்களே என்பதால், வடசொல் என் பதை சமற்கிருதச் சொல் என்று தவறாகக் கருதினர் எனலாம்.

○○○

9

மேலை மொழிகளில் தமிழ்

உலக மொழிகளை ஆய்வு செய்தால், கிறித்து பிறப்பாண்டு களில் பேசப்பட்ட மொழிகளில், இங்கிலாந்து முதல் இந்தோனேசியா வரையிலும் உள்ள நாடுகளில் பேசப்பட்ட நூற்றுக் கணக்கான மொழிகளில், தமிழின் வேர்ச் சொற்கள் விரவிக் கிடப்பதைக் காணமுடியும். குமரிக் கண்டத்தில் தோன்றிய தமிழ்மொழி, வெள்ளத்தில் இலக்கக்கணக்கான தமிழ் மக்களை இழந்தது போலவே, இலக்கங்கள் அளவில் தனது சொற்களையும் இழந்து நின்றது. வெள்ளத்தினின்றும் தப்பிப் பிழைத்தவர்கள் அனைவரும் தமிழாய்ந்த மக்களா யிருந்திருக்க வாய்ப்பில்லாததால், அவர்களில் பலர் வழங்கி விட்டுச் சென்ற தமிழ்ச் சொற்களே நிலைத்தன. நிலைத்த பல சொற்களும், அடுத்தடுத்த தலை முறைகளில் அழிந்து போயின.

வெள்ள காலத்திற்குப் பிறகு, தமிழை மேலை நாடுகளுக்கு எடுத்துச் சென்ற தமிழர்கள், எஞ்சியிருந்த தமிழர்களுடன் தொடர்புகொள்ள வாய்ப்பில்லாமற் போனதாலும், புதுப் புதுச் சூழல்கள், அங்கு புதிய சொற்கள் தோன்றவும் நிலைக்கவும் வாய்ப்புக்களாயின. அப்புதிய சொற்களும் கூட, தமிழ் வேரி னின்றும் தோன்றியவைகளாகவே அறியப்படுகின்றன. கி.மு. 4000 ஆண்டுகளில் பேசப்பட்ட சிந்துவெளித் தமிழ் மொழியின் சொற்கள் பல, கடந்த நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டு, அவை அரைகுறையாகவே படிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள மொழிகள், பலநூறு மொழிகளாகக் கிளைத்துவிட்ட நிலையில், பழமையான மொழிகளில் எபிறேயம் என்ற மொழி மட்டுமே

இன்று பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் உள்ளது. இம்மொழியும் விவிலியம் என்ற சமய நூல் வழியில் தப்பிப் பிழைத்துள்ளது. அது சமய நூலாக இருந்தது பற்றியே, பல நூற்றாண்டுகளாகப் பேணிக் காக்கப்பட்டுவந்துள்ளது. தற்போதுள்ள எபிறேய விவிலிய நூல்களின் மூல நூல்கள் பல, கி.மு. 300 ஆண்டுகளில் அழிக்கப்பட்டன. விவிலியச் செய்திகள் அடங்கிய பல நூல்கள், பலரிடம் பாப்பிரஸ் கட்டுக்களாக இருந்த அளவில், எகிப்தில் யூத அறிஞர்கள் ஒன்று கூடி, விவிலி யத்தைத் தொகுத்தனர். அவ்வாறு தொகுக்கப்பட்ட காலத்தில் யூத சமயத்தின் கொள்கைக்கு மாறுபாடாயிருந்த பல தாள் கட்டுக்களில் அடங்கியிருந்த செய்திகள் அழிக்கப் பட்டன.

எஞ்சியிருந்த எபிறேய இலக்கியங்கள் யாவும் எகிப்தில் உள்ள மன்னரின் நூலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட் டிருந்தன. கிறித்துவ சமயம் தோன்றிய முதல் மூன்று நூற்றாண்டு களில், கிறித்துவ சமயத்தின் பால் பற்றுகொண்டதாகக் காட்டிக் கொண்ட சில கும்பல், யூதர் எதிர்ப்பு என்ற போர்வையில் ஏராளமான எபிரேய நூல்களை அழித்துப் போட்டனர். நூல் நிலைய பொறுப்பாளரையும் தீயில் பொசுக்கினர்.

இன்று கைக்குக் கிடைத்துள்ள எபிறேய மொழி விவிலியத்தில், ஏராளமான தமிழ்ச் சொற்கள் புதைந்து கிடப் பதைக் காணமுடிகின்றது. மேலும் பல சொற்களை, அவை தமிழ்ச் சொற்களா என இனம் காண இயலவில்லை. தமிழில் அறியப்பட்டு பதிவு செய்யப்படாத பல தமிழ்ச் சொற்கள், விவிலிய நூலில் காணப்படுகின்றன. கி.மு. 5000 ஆண்டுகளில் வழக்கிலிருந்த தமிழ்ச் சொற்கள், எபிறேய மொழியில் காணப் படுகின்றன. அக்கால அளவுகளில் வழக்கிலிருந்த தமிழ்ச் சொற்கள் இன்று அறியப்படாத நிலையில், அச்சொற்களை அடையாளங்காண இயலவில்லை. எபிறேய மொழியையும், விவிலியச் சொற்களையும் ஆய்வு செய்த மொழியியலார், பல ஆயிரக்கணக்கான எபிறேயச் சொற்களுக்கான மூலம் மற்றும் (Origin and root) வேர்ச் சொற்கள், எபிறேய மொழியில் காணப் படவில்லை என்று கூறுகின்றனர். மேலும் பல சொற்களுக் கான பொருள் தெரியவில்லை என்றும் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறு வேரும், மூலமும், பொருளும் தெரியாமல் கைவிடப்பட்ட பல நூறு எபிறேயச் சொற்கள், தமிழ்ச் சொற்

களாக உள்ளதைக் காண முடிகின்றது. இதுவரையில், ஈராயிரம் எபிறேயச் சொற்கள் அளவில், ஆய்வுகள் மேற்கொண்ட போது, அவைகள் தமிழ்ச் சொற்களாகவே உள்ளன என்பதைக் கண்டறிய முடிந்தது (ஆசிரியரின் எபிரேயத்தின் தாய்மொழி தமிழே என்ற நூலைக் காண்க). இன்னும் முனைப்புடன் இப்பணியை மேற் கொண்டால், எபிறேய மொழியில் புதைந்து கிடக்கும் ஆயிரக் கணக்கான தமிழ்ச் சொற்களைத் தோண்டி எடுக்க இயலும்.

எடுத்துக்காட்டாக, இயேசு என்ற எபிறேயச் சொல்லைக் காணலாம். இயேசு என்று தமிழ்ப்படுத்தப்பட்ட அச்சொல்லின் எபிறேயச் சொல், ஈசுஆ (Yeesua) என்பதே. இச்சொல்லுக்கு மொழியியலார் தரும் விளக்கம், அது தமிழ்ச் சொல்லின் திரிபுச் சொல்லே என்பதை உணர்த்துகின்றது. கொடையாளர், மீட்பர், உதவி செய்பவர் என்ற பொருளில் அச்சொல் விளக்கப் படுகின்றது. இப்பெயர் இயேசு வாழ்ந்த காலத்தில் பலருக்கும் சூட்டப் பெற்ற பெயராக இருந்தது.

ஈ என்ற தமிழ் வேர்ச் சொல்லினின்றும் நீளும் பல சொற்களில், ஈகை ஈஞ்சு, ஈட்டு, ஈர், ஈன் போன்ற சொற்கள் விரியும்.

ஈ என்ற ஓரெழுத்துச் சொல்லுக்கு, கொடு என்பதே பொருளாகும்.

ஈ - ஈதல் = கொடுத்தல். இல்லாதவர்களுக்கு இருப் பவர்கள் கொடுத்தலே ஈதல் எனப்படும்.

ஈ - ஈகை = கொடுக்கும் தன்மை. ஈயும் (கொடுக்கும்) கை என்றும் பொருள் கொள்ளலாம். கைகள், பிறருக்கு உதவுங் கைகளாக இருக்க வேண்டும் என்ற பொருளில், ஈகை என்ற சொல், தமிழில் அறியப்பட்டது. இச் சொல்லின் ஆழத்தை நோக்குக.

ஈதல் என்ற தமிழ்ச் சொல்லே, ஈத் (Ed) என்று அரபு மொழியில் திரிந்து, அது கொடுத்தலையே குறித்தது. இசுலாமி யர்கள் கொண்டாடும் ஈகைத் திருநாளை ஈத் பெருநாள் என அழைப்பதை நோக்குக.

ஈ = கொடு, கொடுத்தல், பேச்சு வழக்கில் ஈசுதல் என்றும் சொல்லப்படும்.

ஈசு = கொடு, கொடுத்தல்.

அனைத்தையும் கொடுப்பவன் இறைவனே எனப்படுவதால், அவன் ஈசன் எனப்பட்டான்.

ஈசன் என்பது சரியான, அழகான தமிழ்ச் சொல்லே.

ஈசனை - ஈஸ்வ, ஈஸ்வர் என்று வடமொழியில் திரித்துக் கொண்டனர். அதனையே மூலச் சொல் எனக் கருதிய நம்மவர்கள், ஈசுவரன் என்பது வடசொல்லே என மயங்கினர்.

ஈ - ஈசு - ஈசன் என்று தமிழில் சொல்லப்பட்டதைப் போல, ஈசுவ - ஈசுவா என்று எபிரேய மொழியில் சொல்லப்பட்டது.

Jesus : A name in Hebrew and Aramaic - Yeesua, a late form of Hb. Joshua. The name Yeesua was very common in New Testament times. The meaning of the name is salvation. Yeesua is said Iesus in Greek. Iesus turns as Jesus in English.

- Dictionary of the Bible, p. *432*.

ஈசு அல்லது ஈசன் - தமிழ்.

ஈஸ்வ அல்லது ஈஸ்வர் - சமற்கிருதம்.

ஈசா அல்லது யோசுவா- எபிரேயம். ஈசா - அரபுமொழி.

ஈசுஸ் - கிரேக்கம்.

ஜீசஸ் - ஆங்கிலம்.

ஜீசஸ் என்ற ஆங்கிலச் சொல்லையே, இயேசு என்று தமிழில் ஒலித்தனர். ஈசன் என்ற அழகான தமிழ்ப் பெயரிருக்க, இயேசு என்ற பெயருக்கான மூலச் சொல்லாகவுமிருக்க, இயேசு என்ற பொருளற்ற சொல்லால் அழைப்பது தவறானது என்பதையும் அறிதல் வேண்டும். இயேசு என்ற பெயரை ஈசன் என்ற தமிழ்ச் சொல்லால் குறிப்பதும் அழைப்பதும் பொருத்தமானதாகும், சிறப்பானதுமாகும், தமிழ் மூலப் பொருளைக் கொண்டதுமாகும்.

சிலர் இயேசுவை, ஏசு என்று எழுதுகின்றனர்.

ஏசு என்ற தமிழ்ச் சொல்லுக்கு, குற்றம் - தவறு - இகழ்ச்சி என்பதே பொருளாகும்.

ஏசுதல் = இகழ்தல் (To abuse, to reproach).

விவிலியத்தில் காணப்படும் பல சொற்களை, தமிழ்ச் சொற்களே என அறியாத நம் ஊர் கிறித்துவர்கள், ஆங்கில மொழி பெயர்ப்புப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தி, அப்பெயர் களின் பொருளையே மாற்றி விட்டனர்.

இயேசுவின் தாயும் தமிழ்ப் பெயரைக் கொண்டவளே.

அக்காலத்து யூதப் பெண்டிர் மறியம் என்ற பெயரைப் பரவலாகச் சூட்டிக் கொண்டனர்.

இச் சொல் அரபு மொழியில் மிறியம் எனத் திரிந்தது.

மறியம் என்ற எபிரேயச் சொல்லுக்கு அழகிய ஆட்டுக் குட்டி என்பதே பொருளாகும்.

மறி = ஆடு, குறிப்பாகப் பெண் ஆடு.

அம் = அழகிய. அம்மறி என்ற தமிழ்ச் சொல், மறிஅம் என்று மாறியுள்ளது.

அம்மறி = அழகிய பெண் ஆடு.

செம்மறி = செந்நிறமான ஆடு, செம்மறியாடு.

யூதர் வழக்கப்படி, இறைவனுக்குப் பிடித்தமான காணிக்கைப் பொருள் ஆட்டுக்குட்டியே. ஆட்டுக்குட்டி, கள்ளங் கவடமற்றது என்பதால், குற்றமற்றவர்களைக் குறிக்க, எபிரேய மொழியில் ஆட்டுக் குட்டியையே உவமையாகக் கூறினர்.

மறி என்ற தமிழ்ச் சொல், மறி என்றே எபிரேய மொழி யிலும் சொல்லப்பட்டுள்ளது.

மறியா (Maria) என்று கிரேக்க மொழியிலும், இலத்தீன் மொழியிலும் சொல்லப்பட்டு, மேரி (Mary) என்று ஆங்கிலத்தில் திரிந்தது.

மேரி என்ற ஆங்கிலச் சொல்லைத் தமிழ்ப்படுத்தியவர்கள், மரி - மரியன்னை - மரியம்மா - மரியாள் என்றவாறு எழுது கின்றனர்.

மரி : இறந்து போ அல்லது செத்துப் போ.

மரியன்னை : இறந்து போன அன்னை. மரியம்மா = செத்துப் போன அம்மா.

மரியாள் = எப்போதும் சாகாதவள்.

அழகிய மூலத்தமிழ்ப் பொருள் எவ்வாறு பாழடிக்கப் பட்டுள்ளது என்பதை நோக்குக. வாழப் பிறந்த பெண்ணை, இறந்து போ என்ற பொருளில் யாராவது பெயர் வைப்பார் களா? தமிழ்க் கிறித்துவர்கள் சிந்திக்கட்டும்.

மரி என்ற சொல்லை, மறி என்று எழுதுவதே பொருத்த மானதும் சிறப்பானதுமாகும். ஏனெனில் எபிறேய மொழியில் சொல்லப்பட்டுள்ளதே தமிழ்ச் சொல்தான் என்பதை அறிக.

மரி - மறி எனவும்,

மரியன்னை - மறியன்னை எனவும்,

மரியம்மா - மறியம்மா எனவும்

மரியாள் - மறியாள் எனவும் எழுதுவதே சிறப்பானது.

மறியம்மா - மாரியம்மா ஆகிய சொற்களுக்கு இடையே வேறுபாடு உண்டு என்பதால், மறியம்மாவும் மாரியம்மாவும் ஒன்றே எனக் கூறுவதும் தவறானதாகும். ஆறாயிரம் ஆண்டு கட்கு முன்பு பேசப்பட்ட எபிறேய மொழியே, தமிழ் மூலத்தைக் கொண்டிருக்கும் போது, மூவாயிரத்து ஐநூறு ஆண்டுகட்குப் பிறகு தோன்றிய சமற்கிருத மொழியினின்றே தமிழ் மொழி தோன்றியதாகக் கூறப்படும் செய்தி, வரலாற்றில் வலிந்து கூறப்பட்ட பொய்யான, சான்றுகளற்ற, தமிழைக் கொச்சைப் படுத்தும் செய்தியாகும் என்பதை உணர்தல் வேண்டும்.

எபிறேய மொழி, கி.மு. 4000 ஆண்டுகளில் உருப்பெற் றிருக்க வேண்டும் என்பது மொழியியலார் கருத்தாகும்.

எபிறேய என்ற சொல்லே, தமிழ் மூலத்தினின்றும் உருவான சொல் என்பதால், அம்மொழியைப் பேசியவர்கள் தமிழர்களே என மெய்ப்பிக்கலாம்.

ooo

10

உவமம்

உவமம், தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் காணப்படு கின்றது. இது உபம (upama) என்ற வடசொல்லின் திரிபு என்றும், உபம - உவம என்று தமிழ்ப்படுத்தப்பட்டதாகவும் கூறுகின்றனர்.

உவமம் : ஒன்றுக் கொன்று தொடர்புபடுத்தி, இரண்டும் ஒன்று போலுள்ளன என விளக்குதல். (comparison, simile).

உவம உருவு ; அல்லது உவமையுருபு : ஒப்பிட்டுக் கூறுதல், வானத்தைப் போல, வெள்ளத்தனைய (அனைய) என்ற சொற் களால் விளக்குதல்

உவமை விளக்கணி : ஒன்றைப் பலவற்றோடு ஒப்பிடுதல்.

ஆலைப்போல் வேலைப்போல், அனைவருக்கும் உதவுபவன்.

உவமம் என்ற சொல், உவம என்று வடமொழியில் வழங்கப்பட்டதைப் போல, உபமான (upamana) என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதனைத் தமிழில் உபமானம் என்றனர்.

உபம - உபமான : இரண்டும் ஒரு பொருளைக் குறித்தவையே (comparison).

இவை, உபமான் சங்கிர - உபமான் பிரமாண என்றும் வடமொழியில் விரித்துக் கூறப்படும்.

உபமேய (upameya) என்ற சொல்லும் காணப்படுகின்றது. எ.கா. இரும்புக்கரம்.

உவமை : (upama) இருபத்து நான்கு வகையாகவுள்ளன. (உவமை அலங்காரம்). இவ் வகையில் மிகவும் எளிமையானது,

புரியக் கூடியது உவமையாகக் கருதப்படும். மதிமுகம், தாமரைக் கண்ணன், தடந்தோள், வேங்கை மார்பு.

உவமைத் தொகை : குறியீடுகளைக் கொண்டு ஒப்பிடுதல். மேற்சொல்லப்பட்டவை.

உவமைத் திணை : உயரிய பொருளை உவமையால் விளக்குதல். உடலும் உயிரும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவை. இயக்கம் தோன்றும் இதனையே தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்களுக்கு ஏற்றி, உயிர்+மெய் = உயிர் மெய் என சொல்லப்பட்டுள்ளதை நோக்குக.

உவமையாகு பெயர் : உவமையாகச் சொல்லப்பட்டதைக் குறித்தும், உண்மையானதை மறைத்தும் கூறுதல். தேனாள் வந்தாள், தென்றலாள் தழுவினாள். தேனும் தென்றலும் பெண்ணைக் குறித்துச் சொல்லப்பட்டவையாகும்.

உவமிப்பு, உவமிக்க என்றவாறும் உவமை என்ற சொல் விரியும்.

ஒள் என்ற தமிழ் மூலச் சொல்லுக்கு நல்ல (good), அழகான, அறிவார்ந்த, ஒளியுள்ள, விளக்கமான என்றவாறு பொருள் விரியும்.

ஒள் எனும் சொல்லே ஒளியென விரிந்தது. ஒளிர், ஒளிர்வு, ஒளிறல் போன்றும் நீண்டது.

ஒளியார்முன் ஒள்ளியராதல் வெளியார் முன்
வான்சுதை வண்ணங் கொளல் - திருக்குறள், 714.

ஒள்ளியோன் : அறிவுடையோன், ஒளிதருவோன், வெள்ளி (கோள்).

ஒள் + பு = ஒட்பு - ஒப்பு = ஏற்றுக் கொள்ளுதல், ஒப்புக் கொள்ளுதல்.

ஒள் + க = ஒள்க - ஒக்க = ஒன்றுபோலுள்ளதைக் காட்டுதல் (to resemble).

ஒள் + மை = ஒண்மை = நன்மை, ஒளி, அழகு, அறிவு, மிகுதி என விரியும்.

ஒப்பு எனும் சொல், தகுதி - இசைவு - ஒன்றுபடுத்தக் கூடியது - ஒப்புமை எனவும் நீளும்.

ஒப்பு ஒப்புமை = ஒன்றைப் போலவே மற்றொன்றும் இருத்தல். (Exact resemblance, similarity)

ஒப்புமை என்ற தமிழ்ச் சொல்லே, உபம (upama) என்று வடமொழியில் திரிந்தது.

ஒவ்வு என்ற தமிழ்ச் சொல்லுக்கு, ஒத்துப் போதல், ஒன்றோ டொன்று பொருந்துதல் என்ற பொருள் விரியும் உண்டு.

ஒவ்வுற = பொருத்தமுறுதல் (to agree with, to be like).

ஒவ்வுதல், இன்றும் வழக்கிலுள்ள சொல்லாகும்.

ஒவ்வு - எதிர்ச்சொல் ஒவ்வா. ஒவ்வாமை = பொருந்தமை, ஒத்துப் போகாத தன்மை.

ஒள் + வு = ஒவ்வு. ஒவ்வாமை என்ற சொல்வழக்கு, இன்று மருத்துவத் துறையில் பயன்படுத்தப்படுவதை நோக்குக.

Allergy என்ற பக்க விளைவை (Side effect), ஒவ்வாமை என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். Allergy என்ற ஆங்கிலச் சொல், Allo (அல்லோ) என்ற கிரேக்கச் சொல்லின் திரிபாகும். அல்லோ என்ற கிரேக்கச் சொல், அல்ல - அல்லாத என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்க.

ஒவ்வு என்ற தமிழ்ச் சொல்லும், ஒள் என்ற சொல்லின் நீட்சியே,

ஒள்வ என்ற சொல், உவ என்றும் விரிந்தது.

ஒள் என்பது நன்மை, ஒளி, அழகு, அறிவு, மிகுதி என்று அறியப்படுவதால், இவைகளை ஒருவன் விரும்புவதும், விரும்பியதைப் பெற்ற பின் மகிழ்வதும் இயற்கையானது.

உவ : விரும்புதல், மகிழ்தல்.

ஒவ்வு - ஒவ்வா என எதிர்மறைச் சொல்லானது போல், உவ - உவட்டு என்றும் சொல்லப்பட்டது.

உவட்டு = விரும்பப் படாத, மகிழ்விக்காத, ஒத்துப் போகாத என விரியும்.

உவட்டு = வெறுப்பு, வெறுப்பினால் வெளியேற்றம். உவட்டு - உமட்டு என்றும் சொல்லப்படும். உமட்டு = வாந்தியெடுத்தல் அல்லது குமட்டுதல்.

உவத்தல் உயர்வானதால், உயரம் (height) என்ற பொருளிலும் அறியப்படும்.

உவ - உவணம் = உயரம், கழுகு, பருந்து, காற்றாடி என விரியும்.

உவ - உவணை = விண்ணுலகம், மோட்சம், உயரத்திலுள்ளது.

உவ - உவா = ஒளி, வெண்மை. உவாநாள் (full moon day), உயர்வுநாள் வெள்ளுவா = வெண்மைக் கதிர்களைப் பொழியும் நிலா.

உவ - உவமம் - உவமை = உயர்வான இருபொருளை ஒப்பிட்டுக் கூறுதல்.

உவா : தகுதியான, மேலான, ஆண்மைத் தன்மையுள்ள ஆண். உவன் என்றும் சொல்லப்படும். உவன் = குளங்காளை. உவள் என்பது பெண்ணில் இளமையானவள் என்பதும் பொருளாகும். இவ்விரு சொற்களையும் யுவ (uva) என்ற வடமொழிச் சொல்லால் அறியலாம். யுவ - உவ என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

உவமை என்ற தமிழ்ச் சொல், வகர - பகர மாற்றத் திரிவின்படி, வடமொழியில் உபம (upama) எனத் திரிந்தது.

ஒப்பு, ஒக்க, ஒண்மை, ஒவ்வு, உவ போன்ற தமிழ்ச் சொற்கள் யாவும், ஒள் என்ற மூலச் சொல்லின் விரிவுகளே எனலாம். எனவே உவமம் என்று தொல்காப்பியம் கூறும் சொல், தமிழ் வேரையும் மூலத்தையும் கொண்ட தமிழ்ச் சொல்லே என்பது தெளிவு.

ooo

11

திசை

திஸ், திஸா (Disa) என்ற வடசொல்லினின்றே திசை என்ற தமிழ்ச் சொல் திரிந்ததாகக் கூறினர். திசை, தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. கோள்களையும் விண்மீன்களையும் குறித்துக்காட்டும் இடங்களே திசைகளாக முதலில் அறியப்பட்டன. திசைகள் நான்கெனவும், பிறகு எட்டெனவும், பிற்காலத்தில் பத்தெனவும் சுட்டப்படுகின்றன. திசை எனும் சொல், திக்கு என்ற சொல்லாலும் அறியப்படுகின்றது. திக் (Dik) என்பது வடசொல் என்றும், அதன் தமிழ்த் திரிபே திக்கு என்று சொல்லப்படுவதாகவும் கூறினர். அது உண்மையென்றால், வானியலையும், கடற்செலையும் இவ்வுலகுக்கு அளித்த தமிழன், திசை என்ற சொல் அறியப்படாமல், அவற்றை எவ்வாறு உணர்த்தினான். திக்கும் திசையும் வடசொற்கள் என்றால், அதற்கான தமிழ்ச் சொல் யாது? திசை (Direction) என்ற பொருளைத் தரும் சொல் தமிழில் இல்லை என வடமொழியாளர்கள் கூறுவது, பொருந்தாத வொன்று மட்டுமின்றிப் பொய்யானதொன்று எனவும் கொள்ளல் வேண்டும்.

வானியல் அறிவுக்கு அடிப்படையானதே திசையாகும். திசையைக் காட்டியே விண்மீன்களை விளக்க இயலும். தொடக்கத்தில் விண் மீன்களையும், அவைகளின் இருப்பிடங்களையும் காட்டியே திசைகள் சொல்லப்பட்டன. எடுத்துக் காட்டாக, துருவ மீன் உள்ள (வட) திசை, துருவத்திசை எனப்பட்டது. ஒவ்வொரு மீன் கூட்டங்களின் இருப்பிடங்களே திசைகளாக அறியப்பட்டன. தீ என்ற சொல்லுக்கு விண்மீன்

என்ற பொருளுமுண்டு. தீ என்பது விண்மீனை விளக்கும் சொல்லே என்ற சதுரகராதி கூறுகிறது. அல்தீயோன் என்ற தமிழ்ச் சொல், ஒரு விண்மீனைக் குறித்தது. தென்திசையிலுள்ள தென்பாம்பு - Hydra என்ற மீனுக்கு அருகில் அல்தீயோன் விண்மீன் உள்ளது. அல் = இரவு; தீயோன் = விண்மீன். இவ்விண்மீன் கூட்டம் அகல் விளக்கைப் போன்று (cup) காட்சியளிப்பதாக, பாபிலோனியர் கருதினர்.

இதனை விளக்கத் தகழி என்று தமிழில் கூறலாம். அல் + அத்தீயன் என்ற சொற்களே, அல்+அடின் என்றும், அலாடின் (Aladdin) என்றும் திரிந்தன. அலாவுதின் என்று தமிழில் சொல்லப் படுகின்றது.

சேய் என்ற சொல்லுக்குத் தொலைவு என்றவாறு பொருள் உணரப்படும். தீ + சேய் என்பது, தொலைவிலுள்ள விண்மீன் எனப்படும். அவ்விண்மீன் இருக்குமிடம், தீசேய் எனப் பட்டது. அதுவே திசையெனப் பிற்காலத்தில் சொல்லப்பட்டது. திசை, Disa என்று வடமொழியில் திரிந்தது. தீ + தீ என்ற இரட்டிப்புச் சொல், திதி என்று வடமொழியில் திரிந்ததை ஒப்பு நோக்குக. திதிக்கு எதிர்ச்சொல் அதிதி.

திசை என்ற தமிழ்ச் சொல், கோள்களும் விண்மீன்களும் நிலைபெற்றுள்ள இடங்களைக் காட்டியதால், அக்குறிப்பிட்ட விண்மீனோ கோளோ, மாந்தனுடன் தொடர்புள்ளதாக்கப் பட்டு, அக்கோளிருக்கும் இடத்தையே திசை (திசா) என்று வடமொழியில் உரைத்தனர். இதனைத் தசா என்றும் அழைத் தனர்.

திசை என்ற சொல்லுக்கான வேர்ச் சொல் வடமொழியில் இல்லையென்பதை உணர்தல் வேண்டும். திசையானது முதலில் நான்கென அறியப்பட்டது.

மேற்றிசை : மேல் திசையென அறியப்பட்ட மேற்கு, குமரிக்கண்டத்தின் புவியியல் கரணியங்களால் சொல்லப் பட்டது. குமரிக்கண்டம், ஒரு பக்கம் உயர்த்தும், மறுபக்கம் தாழ்ந்தும் அமைந்திருந்தது. அதன் தொடர்ச்சியான தென் னிந்தியாவும் அவ்வாறே அமைந்துள்ளதை நோக்குக.

மேடான திசை மேல்திசையானது. அதுவே மேல் + கு, மேற்கு எனப்பட்டது.

கீழான திசை கிழக்குத் திசையானது. கீழ் - கிழக்கு எனப் பட்டது.

தென்திசை : தென்கு, தெற்கு - எனப்பட்டது.

தேம் திசை - தேந்திசை - தெந்திசை - தென்திசையானது.

தேம் = இனிமையான, சுவையுள்ள அல்லது வளங்கள் நிறைந்த திசை.

தேம் + காய் = தேங்காய். தென்திசையில் செழித்து வளர்ந்த மரங்கள் தென்னை எனப்பட்டன. தெற்கு என்ற சொல்லுக்கு வேர்ச்சொல் தேம் என்பதே. தென்திசை தொடக்கத்தில் யா+திசை = யாத்திசை என்றே சொல்லப்பட்டது. யா என்ப தற்கு நீரென்றும் (water), நீரினால் இருண்டு போன (மூழ்கிப் போன) திசை யாத்திசை யென்றும் சொல்லப்பட்டன. யா என்ற சொல் தெற்கைக் குறித்ததுபற்றிய விளக்கங்கள் தமிழில் இல்லையென்றாலும், தமிழ் மொழியினின்று கிளைத்த, கிரேக்க - எபிறேய - பாபிலோனிய மொழிகளில், யா என்ற சொல்லுக்கு, தென்திசை என்ற பொருளே கூறப்பட்டுள்ளது. (மேலும் விளக்கங்களுக்கு ஆசிரியரின் உலகளாவிய தமிழ் என்ற நூலைக் காண்க.)

வடதிசை : குமரிக் கண்டத்தின் வடக்குப் பகுதி விரிந்து பரந்திருந்தது. வடுத்தல் என்பதற்கு விரிதல், நீளுதல் என்பதே பொருளாகும்.

தமிழகத்தின் வடபகுதி வடுத்திருந்ததால், அது வடுநாடு அல்லது வடுகநாடு எனப்பட்டது. வடுகர் = வட பகுதியைச் சார்ந்த ஆந்திர மக்கள்.

திசை பிற்காலத்தில் எட்டானது. நான்கு திசைகளுக்கு நடுவேயுள்ளதையும் திசைகளாகக் குறித்தனர். வானமும் நிலத்தடிப்பகுதியும் என மேலும் இரண்டை இணைத்துத் திசைகள் பத்தென அறிவித்தனர். இவை ஒவ்வொரு உடுவுக்கும் அல்லது விலங்கிற்கும் உரியதாகச் சொல்லப்பட்டன. திசை என்பதைத் தசை அல்லது தசா (Dasa) என்ற சொல்லால் ஆரியர் திரித்துக் கொண்டு, அதற்குக் காலம் அல்லது நிலைமை (state or condition) என்றவாறு பொருள் உரைத்தனர். ஒரு குறிப்பிட்ட திசையிலுள்ள கோள் அல்லது விண்மீன்,

ஒருவனுக்கு நல்லது - அல்லது செய்விக்கும் கால அளவை, நிலைமையைத் தசா என்றனர். திசை என்ற தமிழ்ச் சொல்லே, தசா என்ற வடசொல்லிற்கு மூலச் சொல்லாகும். உடுதசா, தசாபுத்தி, சரம தசா, யோகதசா என்றவாறு விரியும்.

திசை பத்தையும் தசை என்ற சொல்லால் ஆரியர் அழைத்ததால், எண் பத்துக்கும் தசாததசம் (Dasam) என்ற சொல்லைப் பயன்படுத்தினர்.

தசை (Flesh) என்ற தமிழ்ச் சொல்லுக்கும், தசா என்ற வடசொல்லுக்கும் தொடர்பில்லை. திசை என்பதே, தசம், தசா வென வடமொழியில் திரிந்தது.

தசை என்ற தமிழ்ச்சொல், தை + செய் என்ற சொற்களால் தோன்றியது. எலும்புகளின் மேலே தைக்கப்பட்டு, உடலாகச் செய்யப்பட்டதே தைசெய் எனப்படுவதாகும்;

தைசெய் எனும் சொல்லே, தசெய் - தசை என்று மருவிற்று.

தைத்துச் செய்பவன், தைச்செய் - தைச் செய்யன் - தைச்சன் - தச்சன் ஆனதை நோக்குக.

தசை என்ற சொல், சதை என்றும் சொல்லப்பட்டது. யாழ்ப்பாணத்து மக்கள் சதையென்றே சொல்லும் வழக்கைக் கொண்டுள்ளனர். சதை பிற்காலத் தமிழ்ச் சொல்லாகும். பழத்தின் கதுப்பு (Pulp), ஆட்டின் இறைச்சி போன்றவைகள் சதை எனப்பட்டன.

தசை என்பதும் திசை யென்பதும் வெவ்வேறு வேர்ச் சொற்களால் உருவான தமிழ்ச் சொற்களாகும். ஆனால் வடமொழியாளர், தசை, திசை என்பதை ஒரு மூலச் சொல்லி னின்று தோன்றியவை போன்றே கருதினர்.

தசம் என்ற பத்து தமிழ் மூலத்தினின்று தோன்றிய சொல் லாயினும், தமிழில் அச் சொல் பயன்படுத்தப்படவில்லை. மாறாக, பத்து என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டது.

பத்து = கலங்களில் ஒட்டியிருக்கும் உணவுப் பொருள்.

பத்து = ஒன்றை அப்பியிருக்கும் சாந்துப் பொருள்.

பத்து = எண் பத்து.

மேற்கண்ட பத்து என்ற சொல், பற்று என்ற சொல்லின் மாற்றமே. பற்று - பத்தானது.

பற்று = பிடிப்பு, ஒட்டு, சேர் என்றவாறு பொருள் விரியும்.

ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்களைப் பற்றி யிருக்கும் எண், பற்று அல்லது பத்து எனப்படும்.

பத்தைப் போன்றதொரு எடுத்துக்காட்டுச் சொல், எபிறேய மொழியிலும் காணப்படுகின்றது. ஒன்று முதல் ஆறு நாட்களை, சாத்தும் நாள், அதாவது ஏழாவது நாள், சாத்து நாள் என்றே சொல்லப்படுகின்றது. சாத்து நாள், சாத்தும் நாள் (closing day or shutting day) என்ற சொல், சாப்த் என்ற எபிரேயச் சொல்லால் விளக்கப்பட்டுள்ளது. சாப்த் என்ற எபிரேயச் சொல்லுக்கு, மூடு - சாத்து (to cease, to close, to shut) என்பதே பொருளாகும். சனிக்கிழமையை சாப்த் நாள் என்றே அழைக் கின்றனர்.

திசை என்பது தமிழ்ச் சொல்லே என்றும், இச்சொல்லுக் கான மூலச் சொற்கள் தமிழிலேயே உள்ளன என்றும், திசா என்ற வடசொல், திசை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபுச் சொல்தான் என்றும் அறிதல் வேண்டும். திசா என்பதை மூலச் சொல்லெனத் தவறாகக் கருதியவர்கள், திசை என்பது வடசொல்லே என மயங்கினர். திசை தமிழ்ச் சொல்லே.

ooo

12

பூதம்

பூ என்ற தமிழ்ச்சொல், பொதுவாக மலரையும், சிறப்பாக உலகம், அழகு, பொலிவு என்றும் விரியும். பூ என்பது பெயர்ச் சொல்லாகவும், வினைச் சொல்லாகவும் வரும் ஓரெழுத்துச் சொல்லாகும். பூ என்ற ஒலி, வாயினின்றும் காற்றை வெளி யேற்றும் ஒலியாகும். அது நெடில் ஆனது. வாயினின்று தள்ளப் பட்ட காற்று, நீண்டு பின் விரிந்தது. ஒன்று, ஒரு புள்ளியினின்று விரிவடைவதற்குப் பூ என்றே பொருளாயிற்று.

பூ = மொக்கிலிருந்து விரிவடையும் மலர்.

பூ = ஒரு பொருளிலிருந்து வெளியேறும் அழகு மற்றும் பொலிவு.

பூ = ஒரு நெருப்புத் துண்டத்தினின்றும் பரந்து விரியும் பொரி. பொறியென எழுதுவது தவறானதாகும். தீப்பொரி - தீப்பொறியன்று. சில அகரமுதலிகள் பொறியென்றே குறிப்பிடு கின்றன. ஒன்றைச் சூடுபடுத்துவதே பொரி எனப்படும்.

பூ = வானத்திலிருந்து விழும் விண்கற்களால் ஏற்படும் ஒளி.

பூ = முதிர்ச்சி, முழுமை. பெண்மைக்கான தகுதியைப் பெறும் நிகழ்வு.

பூ = பிறப்பு. பிறப்புக்கு மூலமான உலகம்.

பூத்தல் என்பது விரிதல் என்ற பொருளில், விரிந்து பரந்ததும், பிறப்புகளுக்கெல்லாம் மூலமானதுமான இவ்வுலகம் பூ எனப்பட்டது.

பூவுலகு = உருண்டு திரண்டு உருவத்தில் பெரிதாகக் காட்சியளிக்கும் உலகம்.

விண்மீன்களையும், கோளையும் கூட பூவென அழைப்பது இலக்கிய மரபு.

எ. கா. இரவில் பூத்திருக்கும் வானம்.

பூ என்று உதட்டைக் குறுக்கி ஒலிப்பது வலிந்தும், ஊ என ஒலிப்பது மெலிந்தும் செய்யப்படும்.

ஊ என்ற சொல்லும் விரிதல், பெருத்தல் என்ற பொருளையே தரும்.

ஊ என்ற வேர்ச் சொல்லுக்கு உணவு என்பதே பொருளாகும். உணவு, ஒருவனுடைய உடலை பெருக்கவும், வளர்ச்சியடையச் செய்யவும் கரணியாமாகின்றது. ஊ என்ற சொல்லோடு வளர்ச்சி, பெருக்கம், விரிவு, பெருமை, நீட்சி போன்ற பொருளைத் தரும் சொற்கள் தொடர்புடையன.

ஊசி : நீண்ட இழை வாங்கி.

ஊஞ்சல் : நீண்ட கயிற்றுடன் இணைக்கப்பட்ட அசைந்தாடும் பலகை.

ஊடு : நீண்ட நடுவழி.

ஊட்டு : உடலைப் பெருக்க வைக்க உண்பித்தல்.

ஊட்ட என்ற கன்னடச்சொல், ஊட்டு - ஊட்டம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. ஊட்டம் என்பது உணவைக் குறித்த சொல்லே. உணவருந்தும் இடத்தை ஊட்ட இல்லம் என்பது தமிழ் மரபே. ஊட்ட+இல் என்னும் சொற்களே Hotel என்று ஆங்கிலத்தில் திரிந்துள்ளதை நோக்குக. Hostel என்பதும், இதன் நீட்சியே. Hostel எனும் சொல், பிரெஞ்சு மொழியில் உணவு இல்லத்தைக் குறித்ததே.

ஊண் : உணவு, உடல் வளர்ச்சிக் கானது.

ஊது : காற்றை வாயினால் தொலைவில் தள்ளு.

ஊதல் : விரிந்து பரந்துள்ள காற்று. எங்கும் கேட்க ஒலியெழுப்பும் கருவி.

ஊத்தை : தேவைக்கும் மேலாக வளர்ந்துள்ள தசை. பருத்திருக்கும் மீன்பிடிக்கும் கருவி.

ஊதியம் : தேவைக்கும், தேவைக்கும் மேலாகவும் கிடைக்கும் வருவாய். பெருகிய பயன்.

ஊமல் : பெரிய உருண்டை வடிவிலான பனம் பழம்.

ஊமை : பொருளற்ற ஒலியை எழுப்புபவன்.

ஊர் : விரிந்து செல்லும் குடியிருப்பு, நகரம், நாடு.

ஊற்று : ஊறி வரும் நீருற்று.

ஊன்றி : நீண்ட பாம்பு.

எபிறேய மொழியில், ஊது (யூது - யூதி - yudi) என்ற சொல் காணப்படுகின்றது. இச்சொல்லுக்கு, பெருக்கம் - வளர்ச்சி - உயர்வு என்றவாறு தமிழ்ப் பொருளே காணப்படுகின்றது. இது ஒரு மரபைக் குறித்த சொல்லாகும். ஊது என்ற மூலச் சொல்லைக் கொண்டு, ஊதா (yuda) என்று அம்மரபு அழைக்கப்பட்டது.

yuda என்ற எபிறேயச் சொல்லை மூலமாகக் கொண்டே, வளர்ச்சியைக் குறித்த ஆங்கிலச் சொல்லான youth என்பது திரிந்தது. இச்சொல், ஊது என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே என்க.

பூ என்ற சொல், பெரியவொன்றைக் குறித்தது.

ஊது என்ற சொல், அப்பெரியவொன்றும் மேலும் பெரிதாவதைக் குறித்தது.

பூ + ஊது = பூவூது. மிகப்பெரிய ஒன்று.

பூவூதன் = தடித்த உடலுடன் காணப்பட்ட பெரிய உருவத்தைக் கொண்டவன்.

பூவூதன் - பூதன் எனப்பட்டது. பூதன் உயர்திணை.

மேலுலகினின்று வரும் பெரும் உருவங்கள் பூதம் எனப்பட்டன. பூதம் - அஃறிணை. பூதன், பூதம் என்ற தமிழ்ச் சொற்கள், பூத (Bootha) என்று வடமொழியில் திரிந்தது. பூத என்ற வடசொல்லினின்றே பூதன் என்ற தமிழ்ச் சொல் பிறந்ததாகக்

குறிப்பிடுவது தவறானது. உயிரினங்களின் உடலைப் போல, இவ்வுடல்களைத் தந்த இவ்வுலகமும் பெரும் உடலாக (Body) உருவகம் செய்யப்பட்டது. பூ = உலகம். மெய் = உடல். பூமெய் = உடலாகிய உலகம். பூமெய் என்ற தமிழ்ச் சொல்லே, பூமி என்று வடமொழியில் திரிந்தது. இவ்வுலகில் உள்ளதெல்லாம் மெய்யானதே என்றும் பொருள் கொள்ளலாம்.

மை என்று முடியும் தமிழ்ச் சொற்களில் பல, மெய் என்ற மூலச் சொல்லினின்றும் மருவியவைகளே.

இரு+மெய் = இருமெய் - எருமை. (கரிய உடலைக் கொண்டது) எருது+மெய் = எருமை எனவும் கூறுவர்.

உள்+ மெய் = உண்மெய் - உண்மை (உள்ளத்தில் நல்லதை நினைப்பது)

மெய்+மெய் = மெய்ம்மெய் = மெய்மை (உடலால் நல்லதை உணர்வது)

வாய்+மெய் = வாய்மெய் = வாய்மை (வாயால் நல்லதைச் சொல்வது)

நிலம், நீர், காற்று, தீ, வானம் ஆகியவை விரிந்து பரந்து எங்கும் காணப்பட்டதால், அவை பூதம் எனப்பட்டன. அவை ஐந்து பூதங்களாயின.

பூதம் என்ற சொல், அளவில் பெரிய என்ற தமிழ்ப் பொருளால் அறிய வேண்டும்.

பூத உடல் = செத்துப் போனதால், உப்பிப் போயிருக்கும் உடல்.

பூத என்ற சொல் இறந்து போனவர்களோடு தொடர்பு படுத்தப்பட்டதால், இறந்த காலத்தையும் பூத காலம் என்றனர்.

காலம் தமிழ்ச் சொல் அல்லவென்றும், அது காலா என்ற வடமொழிச் சொல்லின் திரிபே என்றும் கூறப்பட்டதும் தவறானதாகும். காலம் தமிழ்ச் சொல்லே.

பூதக்கண்ணாடி, பூதக்கால், பூத நாடி, பூதவாக்கு, போன் றவையும் தமிழ்ச் சொற்களே.

பூதம் என்ற தமிழ்ச் சொல்லை, ஆரியர்கள் பயன்படுத்தியது ஒரேயொரு கண்ணோட்டத்தில் தான் என்பதை அறியலாம். அதாவது,

பெரியதும், பேயைப் போன்றதும், தீமை செய்யும் ஆவியானதும், மந்திர மாயங்கள் செய்பவர்களின் ஏவலாட்கள் போன்றதும், இடுகாட்டில் வாழ்வனவென்றும் பல்வேறு உருவங்களை அளித்தனர்.

உண்மையில் பூத என்ற தமிழ்ச் சொல்லுக்குப் பல்வேறு பொருளுண்டு என்பதை அறிக.

ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு - தொல்காப்பியம், எழுத்து. 348.

ஆதன், பூதன் என்னும் பெயர்களுடன் தந்தை என்ற சொல் புணரும் போது, ஆதன் + தந்தை = ஆந்தை எனவும், பூதன் + தந்தை = பூந்தை எனவும், பெயரொற்றான தகரம், அகரம் வருமொழியில் நின்றதோடு கெடும் எனவும் தொல்காப்பியர் கூறுகிறார். பூதன் என்று சொல்லப்பட்டது வடமொழிச் சொல்லே என்பது சிலரது கூற்றாகும். ஆதன், பூதன் ஆகியவை, தொல்தமிழ்ச் சொற்களே என அறியலாம்.

○○○

13

ஆசிரியர்

ஆசிரியர் என்ற சொல், தமிழ்ச்சொல் இல்லையென்பது சிலரின் கருத்தாகும். ஆச்சார்ய என்ற வடமொழிச் சொல்லி னின்றே ஆசிரியர் என்று தமிழில் திரிந்ததாகவும் கூறுவர். ஆசு என்பதற்கு குறை அல்லது குற்றம் என்றும், இரிதல் என்பதற்கு நீக்குதல் என்றும், ஆசுஇரியர் - ஆசிரியர் - குற்றங்களை நீக்கு பவர் என்றும் பொருள் கொண்டனர். ஆய் என்ற தமிழ்ச் சொல் லுக்கு, எதையும் முற்றிலுமாக ஓர்ந்து அறிந்து கொள்ளுதல் என்ற பொருளுண்டு. ஆய் - ஆய்ச்சன் = ஆய்ந்து தெளிந்த அறிவாளன். ஆய்ச்சன் என்பதே, ஆய்ச்சான் - ஆசான் எனவும் சொல்லப்பட்டது. ஆய்ச்சான் என்ற சொல்லே, ஆச்சாரியன் என்று வடமொழியில் திரிந்திருக்க வேண்டும். ஆச்சாரியன் = அனைத்தையும் கற்றவன். அனைத்துத் தொழில் நுட்பங் களையும் கற்றவன் ஆச்சாரி - ஆசாரி எனப்பட்டான். ஆசான் அறிவுடையோனாய் மதிக்கப்பட்டதால், அவன் கூறிய வாழ்த்து, ஆசி எனப்பட்டது.

ஆசிரியன் : குரு. அறிவைக் குருக்க வைப்பவன் (குருத்தல் - growth).

குரு என்ற தமிழ்ச் சொல்லே, Grow என்றும் திரிபு பட்டிருக்க வேண்டும்.

: படைக்கலம் பயிற்றுவிப்பவன். போர் நுணுக்கங்கள் தெரிந்தவன்.

: அறிவியல் அறிந்தவன், இலக்கியங்களைப் படைப்பவன்.

: புதுப்புது நூல்களை உருவாக்குபவன்.

ஆசிரியர் மூவகையானவர் என்பது தமிழர் மரபு.

1. நூலாசிரியர் (கலை, அறிவியல், இலக்கண, இலக்கியங் களை எழுதுபவர். (Author)

2. உரையாசிரியர் (நூலாசிரியரால் எழுதப்பட்டவைகளுக்கு விளக்கங்கள் கொடுத்து விரிவுரை எழுதுபவர்கள் - Commentator.)

3. கற்பிக்கும் ஆசிரியர் (மேற்கண்ட நூல்களையும், விளக்க வுரைகளையும் கற்று அவற்றை மாணவர்களுக்குக் கற்பிப் பவர் - Teacher)

ஆய் - ஆய்ச்சு - ஆய்ச்சர் என்ற தமிழ்ச் சொல்லுக்கும், டீச், டீச்சர் என்ற ஆங்கிலச் சொல்லுக்கும் ஒலியளவிலான தொடர்பு உள்ளதை நோக்குக.

இரி - இரிதல் - இரியர் என்ற சொல்லுக்கு, ஓடுதல் என்றவாறு பொருள் உள்ளது.

இரிவு = ஒழுகுதல் (to flow).

இரியர் = பகைவர்.

மேற்கண்ட சொற்களின் அடிப்படையில், இரியர் என்ற சொல்லுக்கு நீக்குபவர் என்று எவ்வாறு பொருள் கொண் டனர் என விளங்கவில்லை. ஆசு + இரியர் = குற்றங்களை நீக்கு பவர். எனவே, ஆசிரியர் என்ற சொல்லுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்ட விளக்கம் தவறானதாகும். தமிழில் நெடில் களே முதலில் தோன்றி, குறில்கள் பிறகு தோன்றின என்பது பாவாணருடைய கூற்றாகும். அந்த வகையில் ஆ என்ற எழுத்துக்குப் பிறகே அ என்ற குறில் தோன்றியது. ஆ என்ற ஓரெழுத்துச் சொல்லுக்குத் தொடக்கம் என்பதே பொருளாகும்.

ஆநா ணிறைமதி யலர்தரு பக்கம்போல் – பரிபாடல், 11:31.

பிறை தோன்றிய நாள், ஆநாள் என்று கூறப்பட்டுள்ளதை நோக்குக.

ஆ = தொடக்கம், முதன்மை, முதலில் தொடங்கப்பட்ட என்றவாறு விரியும்.

அறிதல் என்பது அறிவோடு தொடர்புடைய சொல்லாகும். அறியன் என்பது அறிவன் என்றும் அறியப்படும்.

ஆசான் + அறியன் - ஆசாறியன் - ஆசிரியன் என்று பிற்காலத்தில் மருவியிருக்க வேண்டும்.

றகரம் ரகரமாகப் படியெடுத்தவர்களால் மாற்றம் பெற்றிருக்க வேண்டும்.

ஆசாறியன் - ஆசிரியன் என்று வழக்கிற்கு வந்திருக்க வேண்டும். ஆசறியன் என்ற தமிழ்ச் சொல்லே, ஆசார்ய என்று வடமொழியில் திரிந்திருக்க வேண்டும். கி.பி 10ஆம் நூற்றாண்டுகளில் உரையெழுதியவர்களும், படியெடுத்தவர்களும், அக்கால அவையிலிருந்த வடமொழித் திரிபுச் சொற்களைப் புகுத்தி, உரிய மூலச் சொற்களைச் சிதைத்து விட்டனர். இத்தவறுகள் பல சொற்களால் இன்று அறியப்படுகின்றன. தொல்காப்பியத்திலும் இவ்வாறான சொற்சிதைவுகள் உள்ளன. மேலும் தொல்காப்பியம் ஆரிய நூலே எனக் காட்ட, பலவரிகளை இடைச் செறுகல்களாகத் திணித்ததைப் போன்றே, பல சொற்களையும் மாற்றியெழுதியதோடு, பல தமிழ்ச் சொற்களுக்கு ஆரிய வழிப் பொருளையும் அளித்துள்ளனர். இவ்வகையில், ஆசிரியன் என்ற சொல்லும், ஆசான் அறியன் என்ற சொல்லுக்குப் பதிலாக இணைக்கப்பட்ட சொல்லே என அறியலாம்.

ooo

14

உரு

உர் என்ற வேர்ச் சொல்லினின்று,

உர - உரி - உரா - உரு போன்ற சொற்கள் நீண்டன.

உர் என்பது நிலையாக உள்ளது. ஊர் என்பது நகர்வது. உரு என்பது காணக் கூடியது ஊர் என்பது அறியக் கூடியது.

உரு = வடிவு, அழகு, உடல், தோற்றம் என்றவாறு விரியும். உரு - உருவம் (image)

உரு என்ற தமிழ்ச் சொல், ரூப (Rupa) என்று வடமொழியில் திரிந்தது.

உருவம் என்ற சொல்லுக்கு எதிர்ச் சொல் அருவம் ஆகும். அருவம் தமிழ்ச் சொல்லே.

அல் + உரு = அரு என்றானது. அல் : கண்ணுக்குப் புலப்படாத (invisible).

அல்உருவம், அருவம் எனப்பட்டது. அரூப (Arupa) என்று வடமொழியில் திரிந்தது.

கடவுளை அருவன் என அழைப்பர். அரூபி என்று வடமொழித் திரிபு.

உருவு என்பதை உருவமுள்ளதாகவும், உருபு அல்லது உருவிக்கு எதிர்ச்சொல் அருவி என்றும் சொல்லப்பட்டது. அருவியும் தமிழ்ச் சொல்லே.

கரையழி வாலருவிக் கால் பாராட்ட – பரிபாடல், 6:53.

அருவிக் கால் பாராட்ட : உருவமில்லாத நல்ல காற்றுத் தாலாட்ட, என்பது பொருளாம்.

உருவம் என்ற சொல்லையும் பரிபாடல் குறிப்பிடுகின்றது.

உருவறி வாரா வொன்ற னூழியும் – பரிபாடல், 2:6.

உருவி லாள னொறுக்குந் துன்பமும் – சிலப்பதிகாரம், 14:36.

உருவம் என்ற தமிழ்ச் சொல்லே, ரூபா - ரூப்யா என்று சொல்லப்பட்டு, பணத்தைக் குறித்தது. பண்ணியர் (வணிகர்) பயன்படுத்தியது பணம் எனப்பட்டது. பணம் அல்லது நாணயத்தில் குறிக்கப்பட்டிருக்கும் உருவத்தின் அடிப்படை யிலேயே, ரூபா என்று அழைக்கப்பட்டது. உருவ அல்லது உருவா என்றே ரூபாயைக் கொள்ளுதல் சிறப்பானது.

மேலை மொழிகளில் உரு என்ற சொல், உரா (ura) என்ற பின்னொட்டுச் சொல்லாகி, Figura என இலத்தீன் மொழியில் சொல்லப்பட்டு, Fig - ure என ஆங்கிலத்தில் திரிந்தது. பகு - உரு என்ற தமிழ்ச் சொல்லுக்கு, உருவத்தை அறிந்து கொள்ளுதல் என்பது பொருளாகும். பகுவுரு என்பதே, பிகுரா என்று இலத்தீனில் திரிந்துள்ளது.

உருவம் என்ற சொல்லுக்கு Figure என்ற பொருளைத் தருகின்றனர். (external form) அருவம் என்ற சொல், ஆங்கிலத்தில் காணப்படவில்லை. அருவம் : மறைந்துள்ள உருவம், தெரியாத உருவம் (invisible figure) என்பதற்கான நேரிடையான சொல், கிரேக்கம் - இலத்தீன் - ஆங்கில மொழிகளில் இல்லையென மொழியியலார் கூறுகின்றனர்.

Spirit என்ற சொல்லை, ஆன்மா - பேய் - பண்பு - மதுவுக் கான மூலப் பொருள் - உணர்வு வாழ்வு என்ற பொருளில், இடத்திற்கேற்றவாறு பயன் படுத்துகின்றனர். Spirit என்பது ஒரு பொருளைக் குறித்த சொல்லன்று.

Fog என்ற சொல், தெரியாத உருவம் என்ற பொருளில் சொல்லப்பட்டாலும், மூடுபனியைக் குறிப்பிடுவதாகவே யுள்ளது. Fog என்ற சொல், புகை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபேயாகும். எல் என்பது வெளிச்சத்தையும், அல் என்பது இருட்டையும் குறித்தது போலவே, உல் என்ற வேர்ச் சொல்லே உருவத்தையும் குறித்தது.

உல் - உல - உலகு = ஞாலம்.

உல் - உரு - உருவம் = தோற்றம்.

அல் - அரு - அருவம் = தோன்றித் தோன்றாத பொருள்.

எபிறேய மொழியில் ருவ (Rua) என்ற சொல் காணப்படுகின்றது. இச் சொல்லுக்குச் சரியான, இதே பொருளை விளக்கும் சொல், ஐரோப்பிய மொழிகளில் இல்லையென்பது மொழியியலாரின் கருத்தாகும். (The Hebrew word Rua does not admit translation by any single word, nor is it entirely correct to say that it some times means breath, some times winds, sometimes spirit etc. The word spirit is not equal to Rua - The Dictionary of the Bible, p. *840).*

உருவம் (தோற்றம்) என்ற சொல், ura - , fig-ura என்று சரியான பொருளைத் தந்தது.

பகுத்தல் - வேறுபடுத்தித் தெரிந்து கொள்ளுதல். பகு, பிகு (fig) எனத் திரிந்தது.

பகுஉரு - figure என்று சொல்லப்பட்டது போல், அருவம் என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணையான ஐரோப்பிய மொழிச் சொல்லைக் காண இயலவில்லை.

சிக்கலான, ஆழ்ந்த பொருள் கெண்ட அருவம் தமிழ்ச் சொல்லை, எந்த வேர்ச் சொல்லும் காட்ட இயலாத அருவ என்ற வடமொழித் திரிபுச் சொல்லோடு ஒப்பிட்டு மூலமாகக் காட்டுவது அறியாமையே.

அருவம் : தெரிந்தும் தெரியாதவொரு பொருள். அது காற்றில் கலந்துள்ள மாசு போன்றும், வானில் திரியும் மாசி போன்றும், காற்றடிக்கும் போது பெய்யும் மழையில் காணப் படும் நீண்ட தூண்போன்றும், இரவு நேரத்தில் வெண் தூசு போன்றும் தோன்றுது.

உருவம் (உருவ) என்ற சொல்லுக்கு, அருவம் (அருவ) என்று வடமொழியில் அகரத்தை எதிர்ப் பொருளுணரக் கூறினர். அருவ என்ற சொல்லுக்கான வேர்ச்சொல் வட மொழியில் இல்லை.

உருவம் என்ற தமிழ்ச் சொல், உல் என்ற வேர்ச்சொல்லி னின்றும்,

அருவம் என்ற தமிழ்ச் சொல், அல் என்ற வேர்ச் சொல் லினின்றும்,

தோன்றின என்பதை ஆய்ந்து பாராதவர், இவ்விரண்டும் வடசொற்களே என உரைத்தனர்.

○○○

இமை

இமை என்பது வடசொல்லே, அது இம (Hima) என்ற சொல்லின் தமிழ்த்திரிபே என்றும் கூறினர். இமம் என்பது பனியென்றும், இமம் + அச்சலம் = இமாச்சலம், பனிமலை யென்றும் பொருள் கூறுவாராயினர். இமய மலையை இமாலயா என்றுரைத்தனர். இமம் என்பதற்குப் பொன்னென்றும், இமய மலையைப் பொன்மலை என்றும் சிலர் கூறுவர். குளிர்ந்த ஒளியைத் தருவதனால், நிலவை இமகரன் (Himakara) என்றும் உரைப்பர்.

இம (Hima) என்ற வடசொல், பனியையும், பனித்துகளையும் குறித்தது. பொன் எனப்படும் மாழம், கட்டியாக வெட்டி யெடுக்கப்படுவதில்லை. அதுவும் துகள்களாகவே சேர்க்கப்பட்டு, கட்டியாக்கப்படுகின்றது. எனவே, துகள் (Particle) என்ற பொருளிலேயே இம என்ற வட சொல் பயன்படுத்தப்படுகிறது. வேறு பொருள் எதுவும் வடமொழியில் கூறப்படவில்லை.

இம (Hima) = பொன், பனி.

இம கரன் (Himakara) = நிலவு.

இம கிரி (Himagiri) அல்லது இமாலயா (Himalaya) = இமயமலை.

இமவாத் (Himavat) = இமய மலைத் தொடர்.

இமயவல்லி : இமய மலையில் பிறந்த பார்வதி.

தமிழில் இம் என்ற வேர்ச் சொல்லுக்கான சொற்கள் பல்வேறு பொருளில் விரிகின்றன.

இம் = விரைவு (speed). இம்மென உரைக்கு முன், எதிரே வந்து நின்றான்.

இம் - இமை = விரைவாக மூடித்திறக்கும் கண்களின் மூடி.

இமை - இமைத்தல் = மூடித் திறக்கும் கண் இமை எடுத்துக் கொள்ளும் நேரம். இமைத்தல் என்பதை நொடித்தல் என்றும் கூறுவர். அதனால் அக்கால அளவுக்கு நொடி என்றே வழங்கலாயிற்று.

இமைநொடி = கால அளவில் மிகக் குறுகிய நேரம். Minute என்று ஆங்கிலத்தில் கூறுவர். Mi என்பது இமை என்ற சொல்லின் திரிபாகவும், nute என்பதை நொடி என்ற சொல் லின் திரிபாகவும் கொள்ளலாம். இமைநொடி - Minute ஆனது.

Minute : மினிட் என்றனர். இமைநொடி என்ற சொல்லின் திரிபு.

Minute : மைன்யூட் என்றும் கூறினர். மிகச்சிறிய கால அளவு, அல்லது மிகச் சிறிய துகள் (very small article).

Minute என்ற ஒரே ஆங்கிலச் சொல்லில், மிகச் சிறிய அளவு என்ற பொருளும், இமை நொடி என்ற கால அளவும் சொல்லப்படுவதை நோக்குக.

மைன்யூட் என்ற ஆங்கிலச் சொல், மின்னுடுஸ் (Minutus) என்ற இலத்தீன் சொல்லின் திரிபாகும். இது, மின் + உடு = மின்னுடு, விண்மீன் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே. விண்மீன் காண்பதற்கு மிகச் சிறிய அளவில் தோன்றுவதைக் கருத்தில் கொள்க.

இம் என்ற தமிழ்ச் சொல் விரைவு கருதி சொல்லப்பட்டது போலவே, துகள் என்ற பொருளிலும் சொல்லப்பட்டது.

இம் - இம்மி = மிகச் சிறிய அளவு, நுண்மை, அணு என்றவாறு விரியும்.

10,75,200 என்ற பகுதியில் ஒரு பகுதியே இம்மி எனப்படும்.

10 இம்மி = ஒரு கீழ் முந்திரிகை.

320 கீழ் முந்திரிகை = ஒரு மேல் முந்திரிகை.

320 மேல் முந்திரிகை = ஒரெண்.

ஒரெண் என்பது, 1075200x10½x320x320 பகுதிகளை உள்ளடக்கியதாகும்.

இம்மி என்ற சொல், பனித்துகளையும் பொன்துகளையும் குறிக்கும்.

இம்மிகளை ஒன்று சேர்ப்பவன் (தட்டான்), இம்மித்து வேலையைச் செய்பவனாவான்.

இம்மித்து என்ற தமிழ்ச் சொல்லே, சுமித்து (Smith) என மேலை மொழிகளில் திரிந்தது. இம்மித்து என்ற தமிழ்ச் சொல் இன்று வழக்கிழந்து போயிற்று.

இம் மென்பது பனித்துனியையும் குறித்ததால், இம் என்பதே இம (Hima) என்று வட மொழியில் திரிந்து, பனித் துளியையே குறித்தது.

அச்சலம் என்பதற்கு அசைவில்லாத என்பதே பொருளாகும். செல்லுதல், நகர்தல் (Moving) எனப்படும். செல் என்ற தமிழ் மூலச் சொல், வடமொழியில் எதிர்மறைப் பொருளுடன் அசெல் எனப்பட்டது. அசெல் = நகராத, அசையாத. அசெல், அச்சல் என்று வடமொழியில் திரிந்தது.

இமம் + அசெல் என்பதே, இமாச்சல் (Himachal) எனவும் திரிந்தது.

ஆலயம் என்பதும் தமிழ்ச் சொல்லே தொன்மைக் காலச் சிவனியத்திற்கு ஆலமரமே முதற் கோயிலாகும். சிவனை ஆலமர்ச் செல்வன் என அழைத்ததை நோக்குக. ஆலமரம், மரங்களின் அரசனாகக் கருதப்படும். ஆல்போல் விரிந்து என்ற முதுமொழியை நோக்குக. ஆலமரம் போன்று பரந்து விரிந்து காணப்படும் வேறு மரங்கள் எதுவுமில்லை. இது ஒரு ஏரியின் பரப்பனைவப் போல் விரிந்திருந்ததால், ஆல்+அயம் = அலயம் எனப்பட்டது. அயம் = ஏரி அல்லது குளம். அயம் வெள் ஆம்பல் எனக் குறுந்தொகை கூறுகிறது.

ஆலயம் : மிகப் பரந்து விரிந்த ஆலமரம் நிலை பெற்றிருக்கும் இடம். பிற்காலத்தில் அனைத்து வழி பாட்டிடங்களையும் ஆலயம் என்றனர். தேவன் குடியிருந்த ஆலயம், தேவாலயம் எனப்பட்டது. சிவன் குடியிருந்த ஆலயம், சிவாலயம் எனப்பட்டது.

இமம் + ஆலயம் = இமாலயம். எங்கும் பனித்துகள் பரவியிருந்த மலைப்பகுதி.

ஆலயம் என்ற சொல் பிற்காலத்தில், தங்குமிடம் (Residence), பிராமணன் வீடு, யானைகளைக் கட்டிவைக்குமிடம் ஆகியவைகளையும் குறித்தது.

ஆலமரம், வட்ட வடிவமாகவே படர்ந்திருந்ததால், வட்டம் என்ற பொருளும் சேர்ந்தது. ஆலவட்டம் என்ற சொல்லை நோக்குக. ஆல், தனது மரத்தின் அனைத்து உறுப்புகளையும் மக்கள் பயன்பாட்டிற்கு அளித்தது. எல்லாம் (இலை, சுள்ளி, பழம், தண்டி என விரியும்) பயன்பட்டன என்ற பொருளிலும், எல்லா பறவைகளுக்கும் இல்லமாகத் திகழ்ந்தது என்ற பொருளிலும் ஆல் என்ற சொல், all என்றே ஆங்கிலத்தில் சொல்லப்பட்டுள்ளதை நோக்குக.

ஆல் = பெரிய, மிகப் பெரிய.

ஆல் - ஆலா = மிகப்பெரிய நீர்ப்பறவை (the white headed sea eagle)

ஆல் - ஆலாத்தி = பெரிய வட்டமான தட்டில் வண்ண நீரூற்றி வரவேற்பு அளிப்பது.

ஆல் - ஆலாபனம் (Alapana) = விரிவான உரையாடல், இசையில் விரிக்கப்படும் ஒலி.

ஆலங்கட்டி = ஆலம்பழம் போன்ற நீர்க்கட்டி.

ஆலிங்கனம் = உயர்வான உணர்ச்சிகளின் சேர்க்கை. வடமொழியில் திரிந்த தமிழ்ச் சொல்

ஆலை = மிக விரிந்து பரந்த தொழிற் கூடம்.

ஆல் + யோசனை = விரிவான சிந்தனை (ஒசு - உயர்வான, புகழ்மிக்க) ஒசு - யோசனை எனத் திரிந்தது.

இமாலய (Himalaya) என்பதும் தமிழ்ச் சொல்லே என அறிதல் வேண்டும்.

இமம் + மலை = இமயமலை. இதனைத் தவறெனவும் சிலர் கூறுவர்.

சிமம் என்ற தமிழ்ச் சொல்லே, படியெடுக்கும் போது, இ - சியாக மாற்றப்பட்டது என்பர்.

சிமயமலை என்பதே இமயமலையாகத் தவறாக எழுதப் பட்டது எனவும் கொள்ளலாம்.

சிம் - சிமை என்ற தமிழ்ச் சொல்லுக்கு, உயர்வு, உயர்ந்த இடத்திலுள்ள தலை என்றும் பொருளுண்டு. அரிமாவுக்குத் தலையே அழகைக் கொடுப்பதால், அது சிம்மம் எனப்பட்டது. சிம்ஹ (Simha) என்று வடமொழியில் திரிந்தது.

சிமை மாடு - சிம்மாடு - சும்மாடு என நீண்டதை நோக்குக. (சிம்மாடு = தலைத் துணி).

இம் - இமிழ் என்ற சொல் ஒலி (sound) என்ற பொருளிலும் சொல்லப்பட்டது.

> இமிழ்கடல், இமிழ் முரசு என விரியும். இமிழ்வில் முழவு
> (பரிபாடல், 22:31)

இம் - இமை என்னும் சொல் ஒளி (light) என்ற பொருளிலும் உரைக்கப்பட்டது.

> எரிபுரை யோடை யிடை இமைக்கும் சென்னி (பரிபாடல், 21:1)

இம்-இம்மை = இடம், பிறப்பு என்ற பொருளிலும் அறியப் பட்டுள்ளது.

வடமொழியில் இமா (Hima) என்பது, பனித்துகள் பொன் துகள் என்ற இரு விடங்களில் மட்டுமே சொல்லப்பட்டு, அது துகள் என்ற பொருளில் மட்டுமே அறியப்படுகின்றது. இமா என்ற சொல்லுக்கான வேர்ச்சொல் வடமொழியில் தெளி வாக்கப்படவில்லை. ஆனால், தமிழில் இம் என்ற வேர்ச்சொல், துகள், பனி, பொன், ஒளி, ஒலி, அமைவு, நொடி, காலம், பிறப்பு, இடம் எனப் பல்வேறு பொருளில் அறியப்படுவதால், இம் என்ற தமிழ்ச் சொல்லே, இமா என்று வட மொழியில் திரிந்தது என்க. தமிழிலிருந்து திரிந்த வட சொற்களையே மூலச் சொற்களாகக் கருதி, அதனைத் தமிழ்ப்படுத்தியது போன்றே இமையென்ற சொல்லையும் தவறாகக் கருதினர் எனலாம். இமை, தமிழ்ச் சொல்லே.

○○○

16

அந்தம்

அந்த்த என்ற வடசொல்லுக்கு முடிவு என்றும், கடைசி என்றும், சாவு என்றும், இருட்டு என்றும் பொருள் கூறுகின்றனர்.

தொல்காப்பியர், எல்லாச் சொற்களும் பொருள் குறித்தனவே என்று கூறுகிறார். தமிழில் உள்ள அனைத்துச் சொற்களுக்கும் பொருளுண்டு என்பது, தமிழுக்கே உள்ள சிறப்பாகும். தமிழ் மொழியில் உள்ள சொற்களுக்குத் தமிழிலேயே வேர்ச் சொற்கள் உள்ளதால், தமிழ்ச் சொற்களுக்குப் பொருளுண்டு என அறியலாம். ஆனால் அயன்மொழிச் சொற்கள் பலவற்றிற்கு அம்மொழியில் வேர்ச் சொற்கள் இல்லாமையாலும், அவைகளில் பல தமிழில் வேர்ச் சொற்களாக அமைந்திருப்பதாலும், தமிழ்ப் பொருளையே அயன் மொழித் திரிபுச் சொற்களும் பெற்றுள்ளன. இவ்வாறான பல அயன்மொழிச் சொற்களை, அவை திரிபுபட்ட வரலாறு தெரியாத தமிழறிஞர்கள், பலர், அவை அயன் மொழிச் சொற்கள் என்றே மயங்கினர். தமிழில் அறியப்பட்ட பலவாயிரம் தொன்மைக் காலச் சொற்களில் பல வழக்கிழந்து போயின, பல தமிழிலேயே வேறு சொற்கள் போல் அறியப்பட்டன. அவைகளில் ஒன்றே அந்தம் என்ற சொல்லாகும்.

அம் எனும் வேர்ச்சொல், அழகு - நீர் - மழை - மேகம் என்றவாறு விரியும். அம் என்பதற்குப் பொதுவான பொருள் அழகு என்பதே.

அம்+உலி - அம்புலியாயிற்று. உல்-உல-உலி என்க. உலா வரும் நிலவு எனப்படும்.

அம்புலி = தண்மைகொண்ட, அழகுடைய, உ.. நிலவு. ாம்

அம்முலி என்ற மூலச் சொல், தொன்மை காலச் சொல், அம்புலியாயிற்று.

அம்+அணம் - அம்பணம் : அழகியதும் உயர்வானதுமான ஒருபொருள். அணம் - மேலே.

அம்பணத்தி = அழகிய கொற்றவை.

அம்பட்டன் = அம்+பட்டன். நாடி பார்ப்பதற்குப் பயன் படுத்தப்படும் பட்டுத்துணியைக் கையில் வைத்திருப்பவன். மருத்துவன் தாழ்ந்த சாதி என்று ஆரியக்கலப்பிற்குப் பிறகு கருதப்பட்டான். அந்தணர்கள், செல்வர்களுக்கு நாடிபார்க்க, பட்டுத் துணியை கையில் விரித்துப் பார்க்கும் வழக்கம் இருந்தது. அழகிய பட்டுத்துணியை வைத்து நாடி பார்த்தவன் அம்பட்டன் எனப்பட்டான். அம்பட என்பது இச்சொல்லின் வடமொழித் திரிபாகும்.

அம்+தீ = அந்தீ. அழகிய வடிவில் தோன்றும் கதிரவன். குறிப்பாக மாலைப் பொழுதுக் கதிரவன். அந்தீ என்ற சொல்லே, அந்தி எனப்பட்டது. அது கதிரவன் மறையும் பொழுதையும் பிற்காலத்தில் குறித்தது.

அம்+தீ+பொழுது = மாலைப்பொழுது. கதிரவன் மறையும் காலம், பகல் நேரத்தின் கடைசி வேளையானதால், அந்தி என்ற சொல், முடிவு என்ற பொருளிலும் உணரப்பட்டது. இருள் தோன்று முன் உள்ள அக்காலத்தை, இருள் என்ற பொரு ளிலும் பிற்காலத்தவர் பயன்படுத்தினர். அந்தி என்பது இருட் டானதால், கண் தெரியாதக் குருடன் அந்திகன் எனப்பட்டான். அந்திகனை, அந்தகன் என்றவாறு வடமொழியில் திரித்துக் கொண்டனர். அந்தி - அந்த (Anta) என வடமொழியில் திரிந்தது.

அந்தி = கடைசி யென்றால், தொடக்கம் ஆதி எனப்பட்டது.

ஆதி : ஆ என்ற ஓரெழுத்துத் தமிழ்ச் சொல்லுக்கு, தொடக்கம் என்பது ஏற்கனவே விளக்கப்பட்டுள்ளது. தொன்மை காலத் தமிழ்ச் சொல்லான ஆதீ என்பதே, பிற்காலத்தில் ஆதி எனப்பட்டது.

ஆதீ : முதலில் தோன்றும் ஒளி, அதாவது கதிரவன்.

ஆதிபகவன் எனப்பட்டது, உயிர்களைப் பகுத்துக் காத்து வரும் கதிரவனாகிய சிவன் என்ற பொருளைத் தருவதே.

ஆதீ பகவன் - ஆதி பகவனாயிற்று. ஆதி என்ற சொல்லின் மூலத்தை யறியாத தமிழர்கள், ஆதி வடசொல்லென மயங்கினர்.

ஆதீ : காலையில் தோன்றும் கதிரவன் - ஆதி.

அந்தீ : மாலையில் மறையும் கதிரவன் - அந்தி.

ஆதி அந்தமில்லா அருட் சோதியே என இறைவனைப் பாடுவது, தொடக்கமும் முடிவுமில்லாத இறைவனைப் பற்றியே என அறியலாம்.

அந்தி என்ற சொல், மறைவு என்ற பொருளில் அறியப் பட்டதால், அந்தகன் என்ற சொல், பார்வை மறைவு என்ற பொருளில், குருடனைக் குறித்தது.

அந்தகன் : குருடன். கல்வியறிவில்லாத மூடன்.

அந்தகன் : ஒளியுள்ள பொருட்களை அழித்துக் (தீக்கிரை யாக்கி) கரியாக்கியவன். மதுரையைக் கொளுத்தி அழித்தசோழன், மதுராந்தகன் எனப்பட்டான்.

அந்தகன் என்ற சொல் கருமையைக் குறித்ததால், யாமன் (எமன்) அந்த காரி எனப்பட்டான்

அந்தகார் (Antakar) என்ற வடதிரிபுச் சொல், இருட்டையே குறித்தது.

ஆந்தாதி : ஒருவரியின் கடைச் சொல்லை, அடுத்தவரியின் முதற் சொல்லாகப் பாடுவது.

அந்தம்+ஆதி = அந்தாதி - முடிவும் தொடக்கமும் என்று பொருள்படும்.

அந்தி என்ற பொழுது, பகலுக்குப் பிறகும் இரவுக்கு முன்பும் அறியப்பட்டது.

அந்திப் பொழுதை பகலென்றும் கூறவியலாது, இர வென்றும் கூறவியலாது எனலாம். எனவே, இவ்விடைப் பட்ட

பொழுதை அந்தி+இரா = அந்திரா என அழைந்திருக்க வேண்டும். அந்திரா என்ற சொல் இன்று வழக்கிழந்து விட்டது. அந்திரா என்பதே, அந்த்ரா (Antra) என வடமொழியில் திரிந் திருக்க வேண்டும். அந்திரா = இடைப்பட்ட (Middle) ஞாயிறு உள்ளிட்ட விண்மீன்கள் உள்ள இடத்துக்கும், உலகத்திற்கும் இடைப்பட்ட பகுதியை அந்திரம் என அழைத்திருக்க வேண்டும்.

அந்திரம் என்ற சொல்லுக்கு இருள் என்றே சதுரகராதி பொருள் கூறுகிறது. மேலும் காலம் (Time) என்ற பொருளையும் அது கூறுவதால், அந்திப் பொழுதுடன் தொடர்புடைய தமிழ்ச் சொல்லே, அந்திரம் என்பதாகும். வடசொல்லான அந்த்ரா என்ற சொல்லையே மூலச் சொல்லெனத் தவறாகக் கருதி, அந்தரம் என்று தமிழில் உரைத்தனர்.

அந்திரம் என்ற தமிழ் மூலச் சொல்லினின்றே, அந்த்ர என்ற வடசொல் திரிந்தது. எனவே, ஆதி என்பதும் அந்தம் என்பதும் தமிழ்ச் சொற்களே என அறிக.

○○○

17

காரணம் – காரியம்

ஒரு செயலைச் செய்வதற்கு மூலமானது (Cause) காரணம் எனப்படும். காரணம் ஏற்படுத்தும் வினை காரியம் எனப்படும். காரணா (Karana) என்ற வடசொல் காரணம் என்றும், கார்யா (Karya) என்ற வடசொல், காரியம் என்றும் தமிழில் திரிந்த தாகக் கூறினர். காரண காரியம் என்பதை தூண்டுதலும் துலங்கலும் (Cause and effect) எனக் கூறலாம். ஒரு செயலைச் செய்வதற்கான மூலம் (essential element) தேவைப்படுகின்றது. அம்மூலத்தின் விளைவாக செய்கை (action, operation) நிகழ் கிறது. காரணம் - காரியம் என்பதற்கான வேரும் மூலமும் எம் மொழியில் உள்ளன? வடமொழியில் இல்லையென்பது தெளிவு.

மழை பெய்வதால், ஏரி குளம் போன்ற நீர் நிலைகள் நிறைகின்றன. இது காரியம் ஆகும். நீர் நிலைகள் நிறைய முகில் கூட்டங்களே மூலமாய் உள்ளன. இது காரணம் ஆகும். எளிமையான இந்த எடுத்துக் காட்டில் அடங்கியிருக்கும் ஆழமான பொருளை நோக்கலாம். கார் என்பது, மழை முகில் என்ற பொருளைத் தரும் தமிழ்ச் சொல்லாகும்.

கரு - கருமை - கார் என விரியும். கார் காலம் = மழைக்காலம். கார்முகில் = கரிய முகில். கார் எனும் தமிழ்ச் சொல், சொல்லப்படும் இடத்திற்கேற்றவாறு, முகில் என்றும் மழை என்றும் பொருள் கொள்ளப்படும்.

அணம் என்ற சொல்லுக்கு உயர்வு, மேலே (up, high) என்றவாறு தமிழில் பொருளுண்டு. அண் என்ற மூலச் சொல் லினின்று, அணம், அணா, அண்ணம், அண்ணி, அண்ணன் அண்ணல் போன்ற சொற்கள் விரிவடைகின்றன.

அணா - அண்ணம் : மேல் வாய்.

அண்ணன் - அண்ணி = உயர்ந்தோன், அவன் மனைவி. அண்ணல் = உயர்ந்தவர்.

அணா - அணி: உடலின் மேலே அணிந்து கொள்ளப் படும் ஆடை, நகை முதலியன. அணிகம்: உயரமான பல்லக்கு.

கார் + அணம் = உயரத்திலுள்ள மேகம் அல்லது முகில்.

அயம் என்பது நீர்நிலை. குளம், ஏரி என விரியும்.

கார் அயம் + நீர்நிறைந்துள்ள குளம். அயம் + குளம், ஊரி, கடல் உன விரியும்.

யா என்பது நீரைக் குறித்த தொல்தமிழ்ச் சொல்லாகும். யா - யம் - அயம் என விரிந்தது.

அயம் + தமிழில் சொல்லப்பட்ட நீர்நிலைக்கான சொல்.

யம் (Yam) = ஏரி கடலைக் குறித்த எகிப்தியச் சொல்.

யா (Ea) = கடலைக் குறித்த பாபிலோனியச் சொல்.

யா என்ற தொல்தமிழ்ச் சொல்லினின்றே, யம் - அயம் போன்ற சொற்கள் விரிந்தன.

கார் அணம் = நீர்தோன்றுவதற்கான மூலம் (cause, origin, source).

கார் அயம் = மூலத்தின் செயல்பாட்டு விளைவு (operation).

வானத்தில் கார் முகில் தோன்றுவது காரணம்.

நிலத்தில் மழையாகப் பொழிவது காரியம்.

கார் + அயம் என்பது, காரயம் எனப்படும் காரயம், காரியம் எனத்திரிந்தது.

காரணம் (தமிழ்) காரண் (வடமொழி) - Karan.

காரயம் (தமிழ்) கார்ய (வடமொழி) - Karya.

மழையையும் முகிலையும் எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு உருவான தமிழ்ச்சொற்களே காரணம் - காரியம் என்பனவாகும்.

காரகம் என்றவாறும் (Karaka) வடசொல்லொன்று காணப்படுகின்றது. இதுவும் கூட, கார் +அகம் என்ற தமிழ்ச் சொல்லே. காரகம் என்பதும் முகிலே எனலாம்.

காரணம் என்பதற்கு வடமொழியில் என்ன பொருள் கூறப்பட்டுள்ளதோ, அதே பொருளை காரகம் என்ற சொல்லும் கொண்டுள்ளது.

எது என்பது தமிழில் கேள்விக்குரிய சொல்லாகும். ஒளிர்ந்தது எது? மொழிந்தது எது?

எது என்ற கேள்விக்குரிய விடைதான் ஏது என்பதாகும்.

ஏது என்பதை வடசொல் (Hethu) எனப் பலரும் மயங்கினர். எது - ஏது, சொல்லழகை நோக்குக.

ஏது என்ற சொல்லும், காரணம் என்ற பொருளிலே அறியப்படும்.

ஏது காட்ட : காரணம் காட்ட. ஏதுவானவன் = காரணமானவன்.

எது என்ற சொல், பிற்காலத்தில் ஏது என்றவாறும் சொல்லப்பட்டது. எது - ஏது இவற்றிற்கான பொருள் சரியாக உணரப்படாததால், எது - ஏதுவானது.

தாயேது? தந்தையேது? உனக்கேது? எனக்கேது, போன்றவற்றை நோக்குக.

ooo

18

அமுதம்

அமுதம் என்ற சொல், அம்ருத (Amruta) என்ற வடசொல் லின் தமிழ்த்திரிபு என்று கூறினர்.

அமுதம்: தேவர்கள் உண்ணும் உணவு. இது பாற்கடலைக் கடைந்தெடுத்து வந்தது. இதை உண்போர் இறப்பதில்லை.

பால், இனிமை, நீர் என்றவாறும் விரியும்.

பாற்கடலை, தேவரும் அசுரரும், மேரு மலையை மத்தாகவும், ஆதிசேடன் என்ற பாம்பைக் கயிறாகவும் கொண்டு கடைந்தனர். பாலைக் கடைந்தால் வெண்ணெய் வருவது போல, பாற்கடலைக் கடைந்த போது அமுதம் வந்தது. அமுதம் என்பது வெண்ணெய்யா அல்லது வேறு ஒன்றா எனத் தெரியவில்லை. அமுதம் கிடைத்த போது, அதை அப்படியே தேவர்கள் எடுத்துக் கொண்டு போய்விட்டனர். அசுரர்கள் தந்த உழைப்பிற்குக் கூட அவர்களுக்குச் சிறிதும் கொடுக்கப் படவில்லை. தேவர்கள், அசுரர்களை ஏமாற்றிவிட்டனர் என்பது ஒரு புறமிருக்க, கடைந்தபோது ஏற்பட்ட கழிவு நஞ்சாகிய தால், அதை எங்கே போடுவது அல்லது கொட்டுவது என அனைவரும் நினைக்கையில் சிவன் அந்த நஞ்சை விழுங்கி விட்டதாகவும், சிவனின் மனைவி ஓடிவந்து, தொண்டையை இறுக்கிப் பிடிக்க, நஞ்சு தொண்டையிலேயே நின்றுவிட்ட தாகவும் சொல்லப்படும் கதை, நல்ல கற்பனை வளம் கொண் டது. முல்லை, நெய்தல் நில நாகரிகத்தை இத்தொன்மக்கதை விளக்குகிறது. இக்கதையின் மூலம், அமுதம் என்பது ஓர் அரிய உணவு என்றும், அது எப்போதும் கிடைக்காது என்றும்,

சாகாமை அதன் மூலம் கிடைக்கும் என்றும், வெண்ணெய்யின் மேன்மையை விளக்கியிருக்கிறார்கள். இக்கதை, முழுக்க முழுக் கத் தமிழ்ச் சூழலில் சொல்லப்பட்ட கதையே எனலாம்.

மேரு மலை எங்கிருந்தது என்பதைப் பற்றிய குறிப்புகள் இல்லையாயினும், அது குமரிக் கண்டத்திலேயே நிலைபெற் றிருந்ததை அறியலாம். மேல் + உரு என்று சொல்லப்படும், மிக உயாந்த உருவம் கொண்ட அம்மலையும் தமிழ்ச் சொல்லே. தேவர் என்பதும் தமிழ்ச் சொல்லை அசுரர் என்பதும் தமிழ்ச்சொல்லே. ஆதிசேஷன் என்பது, தெற்கே காணப்படும் தென்பாம்பு என்ற விண்மீன் கூட்டமே. இதனை Hydra என்று கிரேக்க மொழியில் கூறினர்.

ஆதீ என்பது விண்மீனையும் குறித்த தமிழ்ச் சொல்லாகும். சேண் - சேடு - சேடன் என விரிந்த அச்சொல், நீளமான - உயரமான என்ற பொருளைத் தருவது. சேடன் என்பதைக் சேஷன் என்று வடமொழியில் திரித்துக் கொண்டனர். ஹைட்ரா என்ற கிரேக்கச் சொல்லும் கூட, ஆடு + அரா = படமெடுத்தாடும் பாம்பு என்ற தமிழ்ப் பொருளைத் தரும் சொல்லே.

ஆடு + அரா =ஆடரா - ஹைட்ரா

அமுதம் கடைந்தெடுத்த கதை, தமிழர் கூறியதோர் வானியல் உருவகக் கதையே. இக்கதை தமிழ்ச் சூழலில் நிகழ் வுற்றதாக அறியப்படும் வேளையில், அந்நிகழ்வின் மூலம் கிடைத்த அமுதம் (என்ற சொல்), ஆரியர் சொல்லே எனக் கூறுவது எவ்வாறு பொருந்தும் எனக் கேட்பது சரியானதே.

உலகிலுள்ள மொழிகளில் பெரும்பான்மையான மொழி களில் காணப்படும் தாய்தந்தையர் பற்றிய சொற்கள், தமிழ் மூலத்தைக் கொண்டவைகளே.

பிறந்த குழந்தை வாயைத் திறக்கும்போது அ என்ற ஒலியும், மூடும் போது ம் என்ற ஒலியும் பிறக்கின்றன. ம்அ - ம்அ- என்றவாறு ஒலிக்கப்படும்போது, அது அம்மா என்று உரு வாகின்றது. அம்மா என்ற சொல்லுக்கு வேர்ச்சொல், மூலச் சொல் எல்லாமே அம்மாதான். அம்மா என்பது இயற்கையி லேயே உருவான சொல்லாகும். அப்பா என்பதுகூட செயற்கை யில் உருவானதாகக் கருதலாம். அம்மா என்பது மென்மை

யான ஒலி. அது தாய்மையின் மென்மையைக் குறித்தது. அப்பா என்பது வல்லொலி. அது தந்தையின் வலிமையைக் குறித்தது.

அம்மா என்ற சொல்லே, அம்மை, அம்மாள் என்றும் நீண்டது. அம்மாவுடன் பிறந்தவன் அம்மான் எனப்பட்டான். அம்மாவின் தாய் அம்மாயி எனப்பட்டாள் அம்மு என்பது அம்மாவின் குழந்தை என்ற பொருளில் அறியப்பட்டது. அம்மா தரும் பாலுணவு அம்மு என்றே சொல்லப்பட்டது. முலைக் காம்பிற்கும் அம்மு என்ற சொல்லே பயன்படுத்தப் பட்டது. அம்மு : பால், முலைக்காம்பு, குழந்தை என விரியும்.

அம்மு என்ற பால், அமுது என்றும் விரியும். தாய் உண்ணும் உணவு, பாலாக அல்லது அமுதாக வெளிப்படுகிறது.

அம்மா தரும் அம்மு, அமுது எனப்பட்டது. அமுது இனிமையாயிருந்ததால், அமுது என்ற சொல்லுக்கு இனிமை யென்றும் பொருளாயிற்று.

அம்மு பால் என்பதால், வைசூரி (தமிழ்ச்சொல்லே) என்ற நோய் தரும் கொப்புளச்சீழும் அம்மை என்றே அழைக்கப் பட்டது. மாரியம்மை எனும் தெய்வத்தாய் தரும் கொப்புள நோய், அம்மை என்றே சொல்லப்பட்டது.

அம்மா அழகானவள் என்பதால், அம்மை என்ற சொல் லுக்கு அழகு என்றும் பொருள் விரியும்.

அம்மாவின் பெருமைகளைப் பற்றிப் பாடி விளையாடும் பெண்கள் விளையாட்டிற்கு அம்மானை என்று பெயராகும்.

அமுது என்ற அன்னை தரும்பால், அமிழ்ந்து என்றும் கூறப்பட்டது.

அம்மு - அமுது - அமிழ்து - அமிழ்தம் போன்ற சொற்கள் யாவும், அம்மா என்ற மூலச் சொல்லினின்றும் பிறந்தவைகளே.

தமிழ் ஓர் இனிமையான மொழி. அது தாய் தரும் அமிழ்தைப் போலவே, பேசும்போது இனிக்கும், பாடும்போது மணக்கும், எழுதும் போது சிறக்கும் என்பதால், தமிழுக்கும் அமுதென்று பேர் வைத்தனர்.

அமிழ்து என்ற சொல்லே, தமிழ் என விரிந்ததாகவும் கூறுவர்.

அமிழ்து என்ற தமிழ்ச்சொல், அமிர்த என்று வடமொழியில் திரிந்தது.

அமுது தாயைத் தவிர மற்றவரிடம் கிடைக்காத பொருளாதலால், அதன் சிறப்புக் கருதி, அதனைத் தேவருணவு என்றனர்.

அமுதகலம் என்றழைக்கப்படும் தாயின் மார்பகங்களை, அமிர்தகலச என்று வடமொழியில் கூறினர்.

அமுது வெண்மையாயிருந்ததால், நிலவையும், அமுதன் என்றும் அமிர்தன் என்றும் அழைத்தனர். அமிர்தன் என்பது தேவரையும் குறித்த சொல்லாகும்.

அமுதம் தமிழ்ச் சொல்லே யென்றும், அது தமிழிலேயே வேரினையும் மூலத்தையும் கொண்டுள்ளது என்றும், அமுதம் - அமிர்த என்று வடமொழியில் திரிந்தது என்றும் அறியலாம்.

ooo

19

உலகம்

லோக் (Lok) என்ற வடமொழிச் சொல்லினின்றே, உலகம் என்ற தமிழ்ச் சொல் பிறந்ததாகக் கூறப்பட்டது. லோக் என்பதையே மூலச் சொல்லெனத் தவறாகக் கருதி,லோகம், மோட்ச லோகம், பாதாள லோகம் போன்ற சொற்களை விரிவு படுத்தினர். உல் என்ற தமிழ் வேர்ச்சொல்லினின்றே விரிந்த சொல்லே உலகம் என்பதாகும். உல் - உல - உலம்: வட்டமான, வட்ட வடிவிலுள்ள.

உல் - உல - உலவு: சுற்றி வருதல்.

உல் - உல- உலா: மெதுவாக நகர்தல். உலாத்துதல். (to be walking about)

துலாத்தில் வெள்ளி உலாத்தில் மழை பெய்யும் – பழமொழி

(When venus is in Libra it will rain everywhere).

உல - உலாவு : மகிழ்வாக நடைப் பயிற்சி மேற்கொள்ளுதல்.

உலா: திருவிழாக் காலங்களில் வீதியுலா வரும் தேர் முதலியன. சுற்றிவருதல்

உல். உல - உலவை: எங்கும் சுற்றி வரும் காற்று.

உலவை - அசைந்தாடும் மரக்கொம்பு, காற்றிலாடும் கொடி, காட்டாறு என விரியும். நில்லாமல் உலாப் போவதால், திங்கள் நிலா எனப்பட்டது. நில்லா உலா - நிலா.

உலட்டி: தெலுங்குச் சொல். கள் குடித்ததால் மயங்கி, அங்குமிங்கும் அலைபவன். உலவு என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே. உலொட்டி என்றும் கூறுவர்.

உலை: கொல்லன் பட்டறையிலுள்ள வட்டமான அடுப்பு.

: சமையலுக்குப் பயன்படுத்தப்பட்ட கலத்திற்கும் உலை என்றே பொருளாயிற்று.

வட்டமான வாயைக் கொண்ட கலம்.

: உலைகட்டுதல்; உலைகாய வைத்தல் உலை கொதிக்க வைத்தல், உலைநீர் போன்ற வழக்கிலுள்ள தமிழ்ச்சொற்களை நோக்குக.

உலை என்பது வினைச் சொல்லாகும் போது, அலைதல், சீரழிதல் என்ற பொருளைத் தரும்.

உயிருக்கே உலை வைத்துவிட்டான், என்ற சொல்வழக்கை நோக்குக.

உல் - உல - உலகம்: சுற்றிவரும் ஞாலம்.

உலகம், லோக் என வடமொழியில் திரிந்தது. லோக் என்ற சொல்லுக்கான வேர்ச் சொல்லும், விரிவு படுத்தப்பட்ட சொற்களும் வடமொழியில் இல்லை என்பதையுணர்தல் வேண்டும்.

உலகம் என்பது, தரை - நிலம் என்ற பொருளிலும் தமிழில் கூறப்பட்டது.

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு போன்ற மாழங்கள் அல்லது கனிமங்கள் நிலத்தினின்றே எடுக்கப்பட்டதால், இவை உலோகம் (Loka) என்று வடமொழியில் கூறப்பட்டாலும், அவை உலகம் என்ற தமிழ் மூலத்தின் திரிபுகளே.

உல் - உல்கு = எங்கும் சுற்றிவரும் வணிகர்களிடம் பெறப்படும் வரி அல்லது ஆயம்.

உல் எனும் தமிழ் வேர்ச் சொல்லினின்றே, உல்லாசம் (ullasa) என்ற வடசொல்லும் பிறந்தது. உலவுதலால் ஏற்படும் மகிழ்ச்சி.

உலகம் என்ற தமிழ்ச் சொல், லோக் என வடமொழியில் திரிந்தது. போலவே, ஓலம் (olam) என்று எபிரேய மொழியில் சொல்லப்பட்டது.

ஓலம் என்ற சொல், உலகத்தையும் பேரண்டத்தையும் குறித்தது.

உல் - எனும் தமிழ் வேர்ச் சொல்லினின்றே World என்ற ஆங்கிலச் சொல்லும் பிறந்தது.

உலகம் (தமிழ்) - லோக் (வடமொழி) - ஓலம் (எபிரேயம்) - ஓர்ல்ட் (ஆங்கிலம்)

உலட்டி என்ற தமிழ்ச்சொல்லும், உலொட்டி என்ற தெலுங்குச் சொல்லும், கள் - மது - கள்குடியன் - கள் கலயம் போன்ற பொருளைத் தருவன. கட்குடியன் மதுவின் தாக்கத்தால் சுற்றி வருதலால், மதியிழந்தவன் என அறியப்படுகிறான். இவ்வாறு மதியிழந்தவை லூனாட்டிக் (Lunatic) என்று கிரேக்க மொழியில் கூறுவர். உலட்டி - லூனாட்டிக், ஒலித்தொடர்பையும் பொருள் தொடர்பையும் நோக்குக. Lunatic என்ற சொல்லே, உல் - உல என்ற தமிழ் வேரினின்றும் நீண்ட சொல்லே எனத் தெளிக.

நா என்ற ஓரெழுத்துச் சொல்லுக்கு, நீண்ட என்பதே பொருளாகும். அது, நாக்கு (tongue) திறவுகோல் (Key), தீக்கதிர் (flame) என்றவாறு நீளும்.

நா - நால் = தொங்கிக் கொண்டிருக்கும் நாயின் நாக்கு, யானையின் கை. யானையின் துதிக்கையை வாய் எனவும கருதுவர். அந்தக் கைக்கு வாய்போன்ற அமைப்பு இருந்தது பற்றி, அதுநால்வாய் - தொங்கும் வாய் என்ற பெயரும் உண்டு.

நா - நாய் - நாலம் = தொங்கிக் கொண்டிருக்கின்ற (hanging).

நாலம் - ஞாலம் என்றும் சொல்லப்பட்டது.

நால் - நான் என்றும் விரிந்து, நால் + து - நான்று என்றும் விரிந்தது. நான்று கொண்டான்: தூக்குக் கயிற்றில் தொங்கினான்.

ஞான்று கொண்டான் எனவும் சொல்லப்பட்டது. நான்று - ஞான்று.

நாலம் - ஞாலம் ; நான்று - ஞான்று.

தொங்கிக் கொண்டிருக்கும் இவ்வுலகம், ஞாலம் என்றும் கூறப்பட்டது.

நாலு எனும் சொல்லுக்கு, வானிலிருந்து விழும் மழைத்துளி அல்லது மழை என்ற பொருளை, சதுரகராதி கூறுகிறது. நான் - நால் - நாலு - மழை.

நான் என்ற சொல் மழையை அல்லது நீரையும் குறித்தது (கம்பிபோல் நீண்டிருந்ததால்) நான் என்பது நீர், அதில் குளித்தல் என்பது நானம் எனப்பட்டது.

தமிழில் நான் என்ற நீரைக் குறித்த சொல் இன்று வழக்கிழந்துவிட்டது.

நான் - ஸ்நான் என்று வடமொழியில் திரிந்தது.

நா - நான் = வானிலிருந்து மொழியும் மழை (நீண்ட கம்பி களைப் போன்றது).

நா - நால் = நீண்ட, விரிந்த என்றும் பொருள் கொள்ளப் பட்டது.

நால் - நாலம் = விரிந்து, பரந்து, தொங்கிக் கொண்டிருக்கும் உலகம்.

நான் = விரிந்த, அகன்ற, எங்கும் பரவிய என்ற பொருளும் உண்டு.

நான் - நானம் = எங்கும் மணம் பரப்பும் நாற்றம் (fragrance)

நானம் - ஞானம் என்றும் விரிந்தது. நாலம் - ஞானம்; நானம் - ஞானம்.

ஞானம் என்ற சொல், தமிழ்ச் சொல்லே. அது நா என்ற வேர்ச் சொல்லினின்றும் விரிந்தது.

ஞானம் - க்ஞான் (gnan) என்று வடமொழியில் திரிந்தது.

ஞானம் என்ற தமிழ்ச்சொல், விரிந்து பரந்து பெற்ற அறிவையும் குறித்தது.

ஞானம் = அறிவு.

மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம் - கடவுளைப் பற்றிய அறிவு. அல்லது உயர்கல்வி.

அல் + ஞானம் = அஞ்ஞானம் - அறிவில்லாத இருள். கடவுளைப் பற்றி அறியாமை.

விண் + ஞானம் = விஞ்ஞானம் - வானியலைப் பற்றிய அறிவு.

ஞானம் என்ற தமிழ்ச் சொல் அறிவைக் குறித்ததால், அவ்வறிவைப் பெற்றவர்கள் ஞானிகள் எனப்பட்டனர்.

அக்காலத்தில் ஞானம் பெற்றவர்கள் அரைகுறை ஆடையுடன் (இருப்பில் மட்டுமே சிறிய துணி) இருந்தனர். அது தமிழ் நாட்டுச் சூழலுக்குப் பொருத்தமாகவும் இருந்தது. இவர்களைக் கணியர்கள் என்றும் உரைத்தனர். கணியர்கள் வட நாட்டிலும் பரவி வாழ்ந்திருந்தனர். சமண சமயம் தோன்றிய பின், சமண சமயத்தாரும், கணியர்களைப் போல் ஆடையணிந்தனர். அல்லது ஆடையில்லாமலிருந்தனர். ஞானியர் ஆடையில்லாதிருந்த நிலை, அமணம் எனப்பட்டது. கம்னோஸ் (Gumnos) என்ற கிரேக்கச் சொல், ஞானம் அல்லது அமணம் என்ற சொல்லின் திரிபாகவே உள்ளது.

பொதுவாக ஞா எனும் எழுத்தில் தொடங்கும் சொற்கள், தொடக்கத்தில் நா என்ற எழுத்தில் தொடங்கியவைகளே.

நாண் - ஞானம் (கயிறு)

நானம் - ஞானம் (அறிவு)

நாலம் - ஞாலம் (உலகம்)

நாயிறு - ஞாயிறு (கதிரவன்)

நாள் - ஞான் அல்லது ஞான்று (day)

நாயம் - ஞாயம் (உண்மை)

ஞா என்ற எழுத்தை ஒலிக்க இயலாத ஆரியர், க்யா என்றவாறு திரித்து ஒலித்துக் கொண்டனர். விஞ்ஞானம் - விக்யான், என்றவாறு என அறிக. ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்களை, அவற்றின் வேரும் மூலமும் அறியாமல், தமிழரே அச்சொற்களை வடசொற்கள் என மயங்கினர் என்பதற்கு மேற்கண்ட சொற்களே எடுத்துக் காட்டுகளாகும்.

ooo

20

ஆணை

ஆக்ஞா (Akgna) என்ற வடசொல்லிலிருந்துதான் ஆணை என்ற தமிழ்ச்சொல் பிறந்ததாகக் கூறப்படுகின்றது. மேலும், ஆக்கினை - ஆக்ஞை என்றவாறும் சொல்லப்பட்டது. ஆக்ஞா என்பதையே மூலச் சொல்லாகக் கொண்டு, ஆணை - ஆக்கினை - ஆக்ஞை போன்ற தமிழ்ச் சொற்கள் திரிந்ததாகக் கூறிவைத்தனர்.

ஆணை: சத்தியம், வீண் சபதம், கட்டுதல், ஆக்கினை, அடையாளம், வெற்றி; முன்னோர் இட்ட கட்டளை என்ற வாறு தமிழ் அகரமுதலிகள் பொருள் கூறுகின்றன.

ஆ என்ற நெடில் உயிரெழுத்துக்குத் தொடக்கம், முதன்மை, தலைமை என்ற பொருள் விரிவு உண்டென ஏற்கனவே விளக்கப் பட்டுள்ளது.

ஆ என்ற சொல் பெண்ணைக் குறித்ததாகச் சொல்லப்படு வதைத் தமிழ் மரபுகளின் வாயிலாக அறியலாம்.

ஆ = பெண், பெண்பசு, பெண் எருமை, பெண் மரை என விரியும்.

ஆ என்ற சொல், பெண்ணுருப்பையும் குறித்தது. இலங்கும் குறியில் (இலிங்க) காணப்படும் அடிப்பகுதியை ஆ என்ற சொல்லால் அழைப்பர். இலங்கும் குறி யென்பதே, ஆண் - பெண் (சிவன் - சிவனுடைய மனைவி) உறவை விளக்கும் உருவகமாகும். ஆவைத் தனது உரிமையாக்கிக் கொண்டவன், ஆவுடையப்பன் ஆவான். பெருமைக்குரிய அப்பெண் உறுப்பைத்

தனக்கு உடைமையாக்கிக் கொண்ட சிவன், பெருவுடையான் என்று சொல்லப்படுவதை நோக்குக.

பெண்ணினின்றே உயிர்கள் தொடங்குகின்றன என்ற பொருளில், ஆ என்ற சொல்லைப் பெண்ணுக்கு உரியதாக்கினர்.

ஆணே உயிரினத்தின் தொடக்கம் என்றும், ஆணையே இறைவன் முதன்முதலாகப் படைத்தார் என்றும், அதுபற்றியே எல்லாச் சமயங்களும் கடவுளை ஆணாகவே கருதுகின்றன என்றும் கூறப்படும். கருத்திலும் உண்மையுண்டு. தமிழரின் முழுமுதற் கடவுள் சிவன் ஆணே.

ஆ என்பது சிவனின் மனைவியைக் குறித்தது. பிற்கால வழங்கு சிவனையே குறித்ததுதான் தமிழரின் தொன்மைக் காலவழக்கு. எனவேதான், சிவன் - ஆணாகவும் பெண்ணாகவும் உள்ளான் என்ற கருத்தும் நிலைத்தது.

ஆ என்பது தொடக்கம், முதன்மை எனப்பட்டதால், முதலில் தோற்றுவிக்கப்பட்ட மாந்தன் ஆதாம் எனப்பட்டான். ஆதாம் என்பது, ஆதாம (Aadaama) என்ற எபிறேய மூலச்சொல் லினின்றும் பிறந்த ஆங்கிலச் சொல்லாகும்.

ஆதாமா என்பது செம்மண்ணையும், ஆதாம என்பது மாந்தனையும் குறித்த எபிறேயச் சொற்களாகும். இவ்விரு சொற்களுக்கு ஒரு சிறிய வேறுபாடே உள்ளதை நோக்குக. தாமம் என்பது சிவப்பைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும். மண்ணிலிருந்தே மாந்தன் தோற்றுவிக்கப்பட்டான் என்ற கருத்து, ஆதாமா என்ற சொல்லால் விளக்கப்படுகின்றது. மேலும் விளக்கங்களுக்கும் ஆசிரியரின், "எபிறேயத்தின் தாய்மொழி தமிழே" என்ற நூலைக் காண்க.

ஆ = தொடக்கம், முதன்மை, தாம(ம்) மண் = செம்மண்.

செம்மண்ணிலிருந்து படைக்கப்பட்ட முதல் மாந்தன், அவனே ஆதாம்.

ஆதாம் என்பது காரணப்பெயரேயன்றி, கடவுள் வைத்த பெயராகத் தெரியவில்லை.

ஆ என்பது தொடக்கமாதலால், படைக்கப்பட்ட முதல் மாந்தன் ஆணே என்பதால்,

ஆ - ஆடு - ஆடூஉ என்ற தமிழ்ச்சொல், ஆணினத்தையே குறித்தது (Male of the human species).

ஆணே ஆற்றலுள்ளவன் என்பதாலும், அனைத்தையும் கட்டுப்படுத்துபவன் என்பதாலும் ஆள் என்ற சொல்லால் அழைக்கப்பட்டான்.

ஆள்: ஆண்மகன் பெயர்ச்சொல்

ஆள்: ஆட்சிசெய், அடிமைப்படுத்து. ஆள் - ஆளுமை = ஆண்மை.

ஆள் என்ற சொல்லினின்றே ஆளுமை, ஆட்சி என்ற சொற்கள் விரிந்தன.

அனைத்தையும் (மரம், செடி, கொடி, விலங்குகள்) ஆள்பவன் ஆளன் எனப்பட்டான்.

ஆள் - ஆண் எனவும் விரிந்தது.

ஆண் - ஆண்மை = தலைமைக்குரியதகுதி ஆண்மை = ஆண்டை

ஆண் = ஆண்டை - ஆண்டான் - ஆண்டவன் எனவும் விரிந்தது.

நாள் - நாண் எனவும் சொல்லப்பட்டது போல் (நாள் + நிறை = நாணிறை),

ஆள் - ஆண் எனவும் சொல்லப்பட்டது.

ஆண்டை = ஆண்மகன், தலைமையான ஆள்.

ஆண்அளித்த சொல் ஆணை யெனப்பட்டது. ஆண் - ஆணை.

ஆண் அவன் என்ற தகுதியால் காட்டப்பெற்ற குறிப்பு ஆணவம் எனப்பட்டது.

ஆணவம்: தன்னிலும் விஞ்சியவரில்லை என்ற எண்ணம் (Pride, Manliness)

ஆண் = உயர்ந்தவன். ஆணி = உயர்ந்த (Superior)

ஆணிப்பொன்: உயர்வான பொன். ஆணிமுத்து = உயர் வான மணி.

உயர்வான, அறிவைப் பெருக்கும் நூல்களை எழுதப்பட்ட கருவியும் உயர்வானதாகவே கருதப்பட்டு, அதற்கு ஆணி என்று பெயரிடப்பட்டது. எழுதும் ஆணி கூர்மையானதாயிருந்ததால், அது போன்ற பிற பொருட்களும் ஆணி என்றே அழைக்கப் பட்டன.

ஆணியென்பது உயர்வானதென்றும் (Excellence), கூர்மை யான தென்றும் (Nail) அறியப்பட்டது.

ஆ என்ற வேர்ச் சொல்லினின்றே, ஆண்மைக்குத் தொடர்புடைய,

ஆடு, ஆள், ஆண், ஆண்மை, ஆண்டை, ஆண்டவன், ஆட்சி, ஆளுநர், ஆணி, ஆணை போன்ற சொற்கள் நீண்டன,.

ஆணை என்பது தமிழ்ச் சொல்லே எனத் தெளிக.

ooo

21

தூணி

தூணி என்பது அம்புகளை வைத்திருக்கும் கூடு (Quiver for arrows) எனப்படும்.

சமஸ்கிருதத்தில் தூணின் (Tunin) என்று சொல்லப்பட்டது. தூணின் என்ற வடசொல்லினின்றே தூணி என்ற தமிழ்ச்சொல் பிறந்ததாகக் கூறினர்.

அம்பு என்ற சொல், தனித்தமிழ்ச் சொல்லாயிருக்க, அம்பு களை வைத்திருக்கும் கூடு மட்டும் வடமொழியில் சொல்லப் பட்டுள்ளது என்பது விந்தையானதே. வில்லும் அம்பும் இணைத்தே கூறப்படுபவை. வில் என்பதும் தனித்தமிழ்ச் சொல்லே.

வில் - அம்பு - தூணி ஆகியவை ஒன்றோடொன்று தொடர் புடையவை.

தள் என் வேர்ச் சொல்லினின்று பல நூறு சொற்கள் தோன்றுவதைக் காணலாம்.

தள் என்பதற்கு வெளியேற்று என்பது பொதுப் பொரு ளாகும்.

தள் - தள்ளு = வெளியேற்று, விலக்கு அகற்று, நீக்கு என்றவாறு தள்ளப்படுவதால் ஏற்படும் விளைவுகள் என பொருள் விரியும்.

தள் - தளி = நீண்ட, அல்லது உயர்ந்த, தள்ளப்பட்ட நீண்ட கம்பி,

தளி = உயர்ந்து நிற்கும் கோயில், விளக்குத் தண்டு, நீண்டு கம்பிபோல்விழும் மழைத்துளி.

தளி - தளிர் = வெளிவரும் இளந்தழை - செடியினின்றும், தள்ளப்படும் குருத்து,

தள் - தளு = தளும்பு = வெளியே செல்லும் நீரலைகளின் தள்ளாட்டம்.

தள் - தளை = நீண்ட கயிறு. தளைத்தல்: கயிற்றால் கட்டுதல்.

தள் - தெள் - தெளி = வெளியேற்று வாளியிலிருந்து நீரைக் கொட்டுதல் சிறுசிறு பகுதிகளாகத் தள்ளுதல்.

தள் - துள் - துளி = ஒன்று பலவாக மாறுதல். மழைத்துளி. நீண்ட ஒன்றின் சிறிய பகுதி.

துள் - தூள் = ஒன்றிலிருந்து பிரியும் சிறு பிரிவுகள் மாசுத்தூள்.

தள் - துள் - தூள் - தூளி = நீண்ட ஒன்று, வெளியேற்றப் படும் தூசி, விரிந்து படர்ந்திருக்கும் நீண்ட முகிற்கூட்டம்.

தள் - தள - தட -தடம் = நீண்டுசெல்லும் பாதை = பாதங் களால் தள்ளப்படும் வழி.

தடம் - தண்டம் = நீண்ட கொம்பு அல்லது கழி. தண்டு = மரக்கழி, நீண்ட தடி,

தள் - துள் - துளி - துமி = ஒன்று பலவாதல், இரண்டாக்கு தல், நீர்த்துமி.

துளி - துமி - துணி = நீண்ட ஒன்றை வெட்டியெடுத்தல் துணி (Cloth).

தள் - துன் - துண் - தூண் = நீண்டதொரு தாங்கும் உறுப்பு (Pillar)

தூண்: மேற்கூரையைத் தாங்குவது தடித்த, பருத்த மரக்கிளை அல்லது கல்,

தூண்: நீண்டதொரு உறுப்பு. திண் - துண் - தூண் = வலிமை யுள்ள தாங்கும் தகழி.

துண் - திண் - திணி = வெற்றிடத்தில் ஏதோவொன்றை நிரப்புதல்.

திண் - திண்மை : ஆற்றல் , வலிமை (strong, powerful) எனவிரியும்.

தூண் என்பது உருளை வடிவில் உள்ள உயர்ந்த மரம் அல்லது கல் (Cyeinderical)

தூண் உயர்ந்து பருத்திப்பதையடுத்து, அதுபோன்ற பிற பொருட்களும் தூண் - தூணி எனப்பட்டன.

தூணி - தூணி = தவசங்களை அளந்து போடும் மரக்கால், விளக்கை வைக்கும் தூண்,

தள் - துள் - துண் - துணி - தூணி என்றவாறு விரிந்தது.

தூணி: மரக்கால், உள்ளே கொள்ளளவு கொண்ட கலம்.

தூணி: உள்ளே கொள்ளளவும் கொண்ட அம்புகள் வைக்குமிடம்.

தூணி என்பதும் மரக்காலைப் போன்றதொரு கலமே யாகும்.

தூண் போன்றதொரு உருவமைப்பைக் கொண்டுள்ள மரக்காலையொத்த அம்புக்கூடு, தூணம் என்றும், தூணி என்றும் சொல்லப்பட்டது.

துள் = தன்னிலையிலிருந்து எழுவது, உயர்வது (jump)

துன் - தூண் = உயர்வு, நீட்சி, தூண்டுதல்: தொடர்ந்து முருக்கிவிடுதல்.

தூண்டில் = நீண்ட கம்பும் கயிறும் கொண்ட பொறி.

தன் - தண் - திண் -திணி = ஒன்றைவைத்து நிரப்புதல் (திணித்தல் - To stuff in).

திணி - தூணி: நிரப்புதல், பெருக்கவைத்தல் (To grow full).

அம்புகளால் தூணிக்கப்படும் கலம் தூணி எனப்பட்டது.

திண் - துண் - தூண் = திண்மைப் பொருளால் திணிக்கப் பட்ட ஒன்று.

தூண்: பெருத்த, தடித்த, கால் (Pillar).

எனவே, எவ்வகையில் நோக்கினாலும், துணி என்பது தமிழ் வேரினின்றும் மூலத்தினின்றும் வெளிப்படுவதாகவே உள்ளதை நோக்குக.

ooo

22

இலக்கணம் – இலக்கியம்

ஒரு மொழி எவ்வாறு எழுதப்படல், வேண்டும், பேசப் படல் வேண்டும் என்பதை விதிகளின் வழியே விளக்குவதே இலக்கணம் என்பர். இந்த விதிகள், ஒரு நாளில் தோன்றி யவைகளாகவோ, ஒருவரால் அறிமுகப்படுத்தப்பட்டவை களாகவோ அமைந்திருக்க வாய்ப்பில்லை. இலக்கியங்களே முதலில் தோன்றியவையென்றும், அவ்விலக்கியங்கள் எவ்வகை யிலான நெறிமுறைகளுமின்றி எழுதப்பட்டபோது தமிழறிஞர் கள், அவைகளைச் சில விதிகளின் கீழ் கொண்டுவந்தனர் என்றும் அறியலாம். இந்த விதிமுறைகள் பலவாயிரம் ஆண்டுகள் பண்படுத்தப்பட்டு வெளிவந்தவைகளே.

இல் என்ற தமிழ்ச் சொல்லுக்கு இடம் என்ற பொருளு முண்டு. அவ்விடம் குடியிருக்கும் வீடு என்பதோடல்லாமல் சில குறிக்கோள்களை அடையவிரும்பும் எண்ணங்களாகவு மிருந்தன.

அக்கு என்ற சொல், உயர்வு, உயர்ந்த, என்ற பொருளைத் தருவது.

ஆய்த எழுத்தான ஃ என்பதும் உயர்வையும், உயரத்தையும் (height) குறித்த எழுத்தே இதனை அடுப்புக் கொண்டை எனவும் உரைப்பர்.

அக்குமலை = உயர்ந்த மலை. கேரளத்தில் ஒரூர் இப்பெயரிலேயே உள்ளது.

அக்கமலி என்று தற்போது அழைக்கப்படுகிறது.

அக்கு: எருதின் உயர்ந்துள்ள திமில் (Hump)

இல் + அக்கு = உயர்ந்த இடம் அல்லது பொருள், பொருளின் தோற்றம்.

இலக்கு - இலங்கு = தோன்றுதல், உயர்ந்து நிற்றல், எழுந்து நிற்றல்.

இலங்கு என்ற தமிழ்ச் சொல்லே லிங்க என்று வடமொழியில் திரிந்ததை நோக்குக.

இலங்கு = தோற்றம்

இலக்கு = தோற்றம் காணப்படும் இடம். குறிப்பிட்ட ஒரு உயர்பொருள் அல்லது நெறி

= ஒருயர்ந்த குறிக்கோள்

இயம் = இயம்புதல், சொல்லுதல், எடுத்துரைத்தல், விளக்குதல் என விரியும்.

இயம் = ஒலி, ஒலியின் வழியே வெளிப்படும் சொல்.

இயல் = ஒழுங்குபடுத்தப்பட்ட சொற்களின் கோர்வை. சொல்லப்படுதலில் காணப்படும் விதி அல்லது முறைமை.

இயல் = இசைவு, பொருத்தம். விதியுடன் பொருந்திய நடைமுறை

இயல்பு = உயர்வான விதிமுறை அல்லது ஒழுக்கம்.

இயம்பு = இவ்விதிகளை எடுத்துச் சொல்லுதல்.

இயல் + கை = இயற்கை. ஒழுங்கு விதிகளுடன் இயங்கும் ஆற்றல்.

இலக்கு + இயம் = இலக்கியம். உயர்ந்த குறிக்கோளை இயம்பும் முறைகள்.

இல் + அக்கு + இயல் எனும் மூன்று மூலச்சொற்களைக் கொண்டு விரிந்ததே.

இலக்கியம் என்பதற்கு, ஒருயர்ந்த குறிக்கோளை, விரிவாக எடுத்தியம்புதல் என்பதே பொருளாகும்.

இலக்கியங்கள் பல்லாற்றானும் பெருகவே, அதன் நெறி முறைகள் பல்வகையிலும் ஒழுங்கற்றுக் காணப்பட்டன. இலக்

கியங்களை நெறிப்படுத்தவும், ஒழுக்குபடுத்தியும் ஏற்படுத்தப் பட்ட விதிகளே இலக்கணம் ஆகும்.

அண் - அண - அணவு = இயைபு, பொருத்தம்.

அண் - அண - அணை = சேர்ப்பு, இரு பொருளை இணைத்தல்.

அண் - அண - அணம் = இணைவு (come close to)

அணவுகள் : இணைதல் (to unite, to join)

இலக்கியத்தோடு, ஒழுங்கையும் விதிகளையும் இணைத்தல், இலக்கணம் எனப்படும்.

இலக்கணம் = இலக்கியம் ஆகிய சொற்களில் உள்ள தமிழ்ப் பொருளை நோக்குக.

இலக்கியம்: லக்ஷ்ய (Lakshya) என்ற வடமொழிச் சொல்லினின்றே இலக்கியம் என்ற சொல் தோன்றியதாகக் கூறினர். லக்ஷ்ய என்ற வடசொல்லைப் பிரித்து, அதற்கு மூலமும் வேரும் வடமொழியில் காட்ட இயலாது.

இலக்கணம்: லக்ஷண (Lakshana) என்ற வடசொல்லின் திரிபே இலக்கணம் என்ற தமிழ்ச்சொல் என்றனர். இதுவும் தவறான கண்ணோட்டமே.

இலக்கு என்ற தமிழ்மூலச் சொல்லினின்றே, லக்ஷ என்ற வடசொல் திரிந்தது.

அக்கு - அக்ஷ எனவும் அக்கம் - அக்ஷம் எனவும், பக்கம் - பக்ஷம் எனவும் திரிந்ததைப் போல், இலக்கு - லக்ஷ எனத் திரிந்தது என்க.

இலக்கு என்பது உயர்வான, எண்ணற்ற என்ற பொருளில், இலக்கம் என்ற சொல்லும் விரிந்தது. ஒரு நூறாயிரம் என்ற எண்ணையும் குறித்தது.

இதனை லக்ஷ (Laksha) என்று வடமொழியில் திரிந்துக் கொண்டனர்.

இலக்கம் என்ற தமிழ்ச்சொல், எண் - குறி என்றவாறு அறியப்படும்.

இலக்கம் என்பது நூறாயிரம் என்று சொல்லப்பட்டதால் அது மிகுதியைக் குறித்தது.

செல்வம் (Property) என்பதும் மிகுதியைக் குறித்ததால், அது இலக்கு - இலக்கம் என்ற தமிழ்ச் சொல்லோடு இணைக்கப் பட்டு, செல்வத்திற்கான கடவுளாக லக்ஷ்மி என்று திரிந்தது. தமிழில் இலக்குமி எனத் திரித்துக் கொண்டனர்.

இலக்கம்மா - இலக்கம்மை என்பதே தமிழ்ச்சொல்லாகும். இலக்குமி என்பது வடசொல்லின் தமிழ்ப் பெயராகும்.

இலட்சியம் (Lakshya) என்ற தமிழ்ச் சொல், வடதிரிபுச் சொல்லே. இச்சொல்லும் இலக்கு என்ற தமிழ் மூலச் சொல்லி னின்றும் வடமொழியில் திரிந்ததே.

இலக்கியம் என்ற தமிழ்ச்சொல்லே, இலட்சியம் என்ற வடதிரிபுச் சொல்லுக்கான பொருளையும் தரும். இலக்கியம் என்பதற்குப் பதிலாக இலக்கு எனக் குறிப்பதே சிறந்ததாகும்.

வாழ்க்கையின் முன்னேற்றமே எனது இலட்சியம் ஆகும். என்பதே,

வாழ்க்கையின் முன்னேற்றமே எனது இலக்கு ஆகும் எனக் கூறுதல் சரியானது.

இலக்கு என்பதே இலங்கு எனவும் விரிந்ததை அறிந்தோம். இலக்கு = விளங்கு, தோன்று, நீரினிடையே தோன்றும் நிலமும் இலங்கு என்றே சொல்லப்பட்டது.

ஆவின் மேலே தோன்றும் இலங்கு, லிங்க எனப்பட்டது. போல்,

நீரில் மேலே தோன்றிய நிலப்பகுதியும் இலங்கு என்றே சொல்லப்பட்டது.

முன்னது லிங்க என்றும் பின்னது லங்க (Lunka) என்றும் சொல்லப்பட்டது.

லங்க என்ற வடசொல்லுக்கு நீரிடைத் தோன்றும் நிலப் பகுதி என்பதே பொருளாகும்.

இச்சொல், கடல்நீரிடைத் தோன்றும் நிலப்பகுதியைவிட, ஆற்றிடைத் தோன்றும் நிலப்பகுதியையே குறித்தது என்பர்.

லங்க என்பதையே மூலச்சொல்லெனத் தவறாகக் கருதிய தமிழர் அதனை இலங்கை என்று திரித்துக் கூறினர். இலங்கு - இலங்கை என்பதும் தமிழ்ச்சொல்லே என்றாலும், இலங்கு என்ற தமிழ் மூலச் சொல்லினின்றே, லங்க என்ற சொல் தோன்றியதைப் பற்றி எவரும் கருதவில்லை.

இராமன் சீதையை மீட்கச் சென்றவிடம், தென்னிலங்கை யல்ல வென்றும், அது கோதாவரி ஆற்றின் நடுவேயிருந்த திட்டான மேட்டு நிலமேயென்றும் (திருவரங்கம் போல வெனக் கொள்க) நீலகண்ட சாத்திரியர் என்னும் வரலாற்று அறிஞர் கருதுகிறார்.

சினை என்பது குறியைக் குறித்த சொல்லாகும்.

இலங்கு + சினை, என்பதே இலச்சினை என்று பிற் காலத்தில் வழங்கலாயிற்று, இலஞ்சினை என்பதை ஆண்குறி எனவும் கொள்ளலாம், மறைத்தற்குரிய அவ்வுருப்பை வெளிக் காட்டுவது வெட்கத்துக்குரியது என்பதால், இலஞ்சை என்ற தெலுங்கு சொல் தோன்றியது. இலஞ்சை - இலச்சை = வெட்கம், கூச்சம் எனக் கொள்க.

இலஞ்சம் என்பதுகூட வெட்கக் கேடான செயல் என்பதால், தெலுங்கில் இச்சொல் வழங்கிப் பிறகு தமிழிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இல் - இல - இலக்கியம் - இலக்கணம் - இலங்கம் - இலங்கு போன்றவையனைத்தும் தமிழ்ச் சொற்களே என அறிதல் வேண்டும்.

○○○

23

காயம்

காயம் என்பது உடலைக்குறித்த சொல்லாகும். காயா (Kaya) என்ற வட சொல்லினின்றே, காயம் என்ற தமிழ்ச்சொல் பிறந்ததாகக் கூறினர். காய கற்பம், காய சித்தி, காய விருத்தி காயஸ்திரி போன்ற வடசொற்கள், உடலோடு தொடர்புடைய சொற்களே.

இன்றைக்குத் தமிழில் அறியப்பட்ட சொற்களைக் கொண்டு வடமொழி உள்ளிட்ட அயன் மொழிகளை நோக்குதல் தவறாகும். 3000 ஆண்டுகட்கு முன்பு வழக்கிலிருந்த பல்வேறு தமிழ்ச் சொற்கள் இன்று வழக்கிழந்து போயுள்ளன. அவ்வாறு தமிழில் வழக்கிழந்த பலவாயிரம் தமிழ்ச் சொற்கள், அயன் மொழிகளில், திரிந்தோ திரியாமலோ காணப்படுகின்றன. காயம் என்ற சொல்லும் அதற்கோர் எடுத்துக்காட்டாகும்.

காயம் என்ற சொல்லுக்கு இன்று அறியப்படும் பொருள் மூவாயிரம் ஆண்டு வளர்ச்சியில் மாறுபட்டுள்ளது. காயா என்ற வடசொல்லுக்கு அம்மொழியில் சரியான வேர்ச்சொற்கள் இல்லையென்பதை அறிதல் வேண்டும்.

காய் என்ற தமிழ்ச் சொல், இன்று அறியப்பட்ட அளவில், தொன்மைக் காலத்தில் அறியப்படவில்லை. இன்றைய பொருளைவிட ஆழமான பொருளை, காய் என்ற சொல், தொன்மைக் காலத்தில் உணர்த்தியது. இன்று அறியப்படும் பொருளாவன:

காயம்: பழுக்காத நிலையிலுள்ள முன்கனி, பெயர்ச்சொல்.

காய்: சுடு, வெப்பப்படுத்து, காய்ச்சு. வினைச்சொல்.

காய் - காயன்: வெப்பப்படுத்துபவன். வினையினின்று தோன்றிய பெயர்ச்சொல்

காய் கருமை நிறம்.

காய - காயன்: கருமை நிற மேனியன், கார்வண்ணனாகிய மால்.

காய் - காயாம்பூ: கருமை (நீல) நிறப்பூ. காசாம்பூ என்று திரிந்தது.

காய் + அவன் = காயவன் கருமை நிறங்கொண்ட தமிழன் காசிபன் என வடமொழியில் திரிந்தது.

காய் + சுனி = காய்சுனி - காசினி

சுன்னுதல் = வளைதல் அல்லது வளைவு அல்லது வட்டவடிவம்

காசினி: வட்ட அல்லது கோளவடிவமான கரிய நிற உலக உருண்டை. காயைக் போன்று உருண்டையான உலகம்.

காய் - காய்ச்சு - காசு = காசு என்பது தமிழ்ச்சொல் அல்லவென்று கூறப்படுகின்றது. எபிறேய மொழியிலும் காசு (Qasu) என்றே சொல்லப்பட்டுள்ளது. ஆங்கில மொழியில் காயின் (Coin) என்று அறியப்படுகின்றது. காய் என்ற மூலச் சொல்லினின்றே, காயின் திரிந்தது.

காசு என்பது, காய்ச்சிய மாழத்தை (Metal) உருக்கி வார்க்கும் பொருளாகும். காய்ச்சு என்ற மூலச் சொல்லினின்றே காசு என்ற தமிழ்ச்சொல் பிறந்தது.

மண்ணும் பொன்னுமாக விருந்த கலவையைக் காய்ச்சி, பொன்னைப் பிரித்தனர்.

காய்ச்சிய பின் ஒளிர்ந்த பொன், காசா (Kasha) என்று வடமொழியில் கூறப்பட்டது.

காசா என்ற வடசொல், ஒளிர்தல் என்ற பொருளிலும் அறியப்படும்

காசா (Hasa) என்றும் விரிந்தது.

சந்திர ஹாசா = ஒளிரும் நிலவு. கமலஹாசா: ஒளிரும் தாமரை.

காசா மரம் என்ற காயா மரம் (Memecylon tinetorium): ஒளியிழந்த கண்ணுக்கு (கண்ணோய்க்கு) மருத்தாகவும் பயன் படுகிறது.

காசி என்ற வட மாநிலத்து நகரம்,ஒளி என்ற பொருளில் சொல்லப்பட்டதே.

காய் - காய்ச்சு - காசா = ஒளிபொருந்திய, தூசுகள் நீக்கப் பட்ட, தூய்மையான காய் என்ற தமிழ் மூலச் சொல்லினின்று நீண்டு திரிந்த அரபுச் சொல்லே, காஜி என்பதாகும். ஹாஜி (Hajji) எனப்படும் சொல், ஒளி - தூய்மை என்ற பொருளில் சொல்லப் பட்டதே. புனிதப் பயணம் மேற்கொண்ட ஒருவர், தனது குற்றங்கள் நீக்கப்பட்டு, ஒளிரும் தன்மை கொண்ட ஒருவராக மாறுகிறார் என்பதே, ஹாஜி என்ற சொல்லுக்குப் பொருளாகும்.

காவிரி: காவிரி என்ற சொல்லுக்கு, விரிந்த காட்டினூடே ஓடிவரும் ஆறு என்றும் பொருள் கூறப்பட்டது. இது சரியான பொருளாகத் தெரியவில்லை. காவிரிக்கும் பொன்னி என்ற பெயரும் உள்ளதை நோக்கும் போது, காவிரி தனது நீருடன் பொன் துகள்களையும் அடித்துக் கொண்டு வருவதாகக் கருதலாம். பொன்னால் அல்லது பொன் துகள்களால் ஒளிரும் ஆறு பொன்னி எனப்பட்டது.

காய் என்பதற்குப் பொன் என்றும், ஒளிர்தல் என்றும் பொருளுண்டு என்பதை ஏற்கனவே விளக்கியுள்ளோம் எனவே, காவிரி என்பது பொன்னாறு என்ற பொருளில் தான் சொல்லப்பட்டது.

காய் + விரி = காய்விரி - காவிரி எனத்திரிந்தது.

காவிரி : பொன்துகள்களை அடித்துக்கொண்டு ஓடிவரும் காவிரி.

ஏற்கனவே தாமிரத்தை அடித்துக்கொண்டு ஓடிவரும் ஆற்றைப்பற்றிய செய்தியுமுண்டு. தாமிரவருணியை நோக்குக.

காண் என்ற தமிழ்ச்சொல், ஒளிர்தல் என்ற பொருளிலும் கூறப்பட்டது.

காய் - காய்த்தல்: பருவத்தே பூத்தல், காய்த்தல், கனிதல் என்ற நிலையை அடைதல்.

பூத்தல், காய்த்தல், கனிதல் என்ற மூன்று நிலைகளையும், காய்த்தல் என்ற ஒரு சொல்லால் குறிப்பிடுவது தமிழர் மரபாகும்.

காய்த்த மரம் என்றால், பூவாகி, காயாகி, கனியாகி, கனிகள் எங்கும் நிறைந்துள்ளதை விளக்குவதாகும். காய்த்தல் என்பது, காய்ப்பருவத்தை மட்டும் குறிப்பிடுவதன்று.

காய்: முன்கனி (Raw Fruit) புளிப்புச்சுவை கொண்டது.

கனி: முற்றிய காய், இனிப்புச் சுவையுள்ளது.

கனி என்ற சொல்லுக்கு இளகுதல் என்ற பொருளுமுண்டு கன்னுதல் = கருத்தல்.

கன்னுதல் = பழுத்தல் அல்லது முற்றுதல். கன்னிய பழம் கனி எனப்படும்.

கன்னி = முழுமையான வளர்ச்சி பெற்ற பெண்.

கன்னி = கரியநிறமுடைய பெண் என்ற பொருளும் உண்டு.

காய்த்தல் என்பது, வளர்ந்த செடியோ மரமோ, அடுத்த தலைமுறையை உருவாக்கும். தகுதியைப் பெறுதல் என்பது பெருளாகும்.

காய்த்தல்: அடுத்த தலைமுறைக்கான வித்துக்களை உண்டாக்குதல்.

காய் - காய்த்தல் : அடுத்த தலைமுறையை உருவாக்குதல்.

காய் - காயன்: திருமணத் தகுதியுடைய ஆண்.

காயன் : உடற்கட்டும் ஆண்மை வளர்ச்சியும் பெற்ற ஆண் தனது உடல் வலிமையால் அடுத்ததொரு உடலையும் உயிரையும் உருவாக்கும் தகுதியுடையவன்.

காய் என்ற சொல், உடலுடன் தொடர்புடைய சொல் லாதலால், காயம் என்ற சொல் உடலைக் குறித்த பழந்தமிழ்ச் சொல்லே எனலாம்.

காயன் = கரிய நிறங்கொண்ட தமிழன்

காயன் = தலைமுறைகளை உருவாக்குபவன்.

காயம் என்ற உடலைக் குறித்தத்தமிழ்ச்சொல், காயா என்று வடமொழியில் திரிந்தது.

காயமே இது பொய்யடா – முதுமொழி.

காயம் என்பது உடலைக் குறித்த சொல்லானதால், உடலில் ஏற்படும் வடுக்களும் காயம் என்றே (Wound) சொல்லப்பட்டன.

காலம் என்பது கனியையும் குறித்த சொல்லாததலால், பழுத்திருக்கும் அல்ல சிவந்திருக்கும் உடற்குறியும் காயம் என்றே சொல்லப்பட்டது.

காய் - காய்த்தல்; வளர்தல், பெருகுதல், (growth, spread).

விரிந்து பரந்த வானமும் காயம் எனப்பட்டது. அதுவே ஆகாயம் எனப்பட்டது.

ஆ = தொடக்கம். காயம் = வானம், ஆகாயம் = முதலில் தோன்றிய (இருந்த) வானம்.

ஆகாயம் என்ற தமிழ்ச்சொல், ஆகாச என்று வடமொழியில் திரிந்தது.

காயம் என்பதற்கு மணம் என்ற பொருளும் உண்டு.

காய்ப்புத் தொடங்கிய தோட்டத்தில் ஏற்படும் மணத்தை ஒப்பு நோக்குக.

உணவுக்கு மணம் சேர்க்கும் பொருட்களும் காயம் என்றே சொல்லப்பட்டன.

பெருங்காயம் (Asafoetida), மிளகு (Pepper), வெங்காயம் (Onion), சுருங்காயம் என்ற சுக்கு (dry ginger), கடுங்காயம் என்ற கடுகு (Mustare) ஆகியவை ஐங்காயங்கள் எனப்பட்டன.

தமிழில் காய் எனப்பட்ட மூலச்சொல்,

வளர்ச்சியைக் குறித்தும், வெப்பப்படுத்துதலைக் குறித்தும் சொல்லப்பட்டது. இவ்விரு பொருள் வழியே பல சொற்கள் விரிந்தன.

காய் என்ற தமிழ்ச் சொல், காச என்று வடமொழியில் திரிந்து தமிழ்ப்பொருளையே கொடுத்தது.

காய் என்ற தமிழ்ச்சொல், எபிரேய மொழியிலும் தமிழ்ப் பொருளை தந்துள்ளது.

காய் - காயன் = தலைமுறைகளை உருவாக்குபவன். (generator)

காய் - காயன் = வெப்பத்தோடு தொடர்புடையவன் (Smith)

இவ்விரு பொருளும் கொண்ட ஒரே சொல்லாக, காயன் (Cain) என்ற எபிறேயச் சொல் காணப்படுகிறது.

காய் - காச என்று வடமொழியில் திரிந்தது. போலின்றி, காய் - காயன் என்றே எபிறேய மொழியில் சொல்லப்பட்டுள்ளது.

காயன் I (Cain): விவிலியத்தில் கூறப்பட்டுள்ள ஆதாம் - ஏவாள் இணையில் முதல் மகன் காயன் என்று சொல்லப்படுகிறான். இச்சொல்லுக்கு விளக்கம் கூறும் விவிலிய ஆய்வாளர்கள் மகப்பேறு என்ற பொருளை யுணர்த்துகின்றனர். ஏவாள், தனக்குப் பிறந்த முதல் குழந்தையைக் கண்டு, கடவுள் என்னைக் காய்க்க வைத்துவிட்டார் எனக் கூறுவதாக விவிலியம் சொல்கிறது. மரம்காய்த்துக் கனிதருவதைப்போல், ஏவாளும் காய்த்து, காயன் என்ற கனியைப் பெற்றெடுத்ததாக அறியப் படுகின்றது. (I have gotten a man - child) காயன் என்பதற்குப் பெற்றெடுக்கப்பட்டவன் என்றவாறு விவிலியம் பொருள் கூறுவதால், காய் - காய்த்தல் என்ற தமிழ் வினைச் சொல், அங்கு கையாளப்பட்டுள்ளதை நோக்குக.

காயன் என்ற விவிலியச் சொல், காய்த்தல் (to bear fruit, to yield, to produce, to give birth) என்ற பொருளில் அறிப்படுவதால், காயன் என்ற எபிறேயச் சொல் காய் என்ற தமிழ் மூலச் சொல்லினின்றும் விரிவடைந்துள்ளதை நோக்குக.

காயன் II: விவிலியத்தில் மற்றொரு இடத்தில் காயன் (Cain) என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. இதுவும் பெயர்ச் சொல்லாகவே உள்ளது. இவ்விடத்தில் காயன் என்ற சொல், காய்ச்சு - சூடுபடுத்து - வெப்பப்படுத்து (to heat) என்ற பொருளில் கூறப்பட்டுள்ளது.

காய் = சுடு, சூடுபடுத்து. காய்ச்சுபவன் காயன்.

காயன் என்ற எபிறேயச்சொல், கருமான் = கம்மாளன் (smith) என்ற பொருளில் சொல்லப்பட்டுள்ளது. (The name Cain also suggests that he once was identified as the inventor of metals working which is in the traditions of genesis (Bible first chapter) has passed to his descendant Tubal Cain. Gn. 4:22) - Dictionary of the Bible, p. 114.

காய் - காய்ச்சு - காய்ச்சுபவன்: மாழங்களை (Metals)க் காய்ச்சி வடிக்கும் கருமான்.

காய் - காயன் (Cain) என்று சொல்லப்பட்டுள்ளதை நோக்குக.

மேலும் ஒரு காயன், துவள் காயன் (Tubal cain) என்று சொல்லப்படுகின்றன. துவள் - துவட்டு - துவட்டுதல் = கனிமங்களைக் காய்ச்சி, துவட்டி, தேவைக்கேற்ப வடிவமைத்தல்.

துவள் என்ற தமிழ்ச்சொல், துபள் என்று, வகர - பகரத் திரிபாக உள்ளதை நோக்குக.

துவள் - துவட்டு - துவட்டன் = கருமான், கம்மாளன் (Smith).

துவட்டன் என்ற தமிழ்ச்சொல், துவஷ்ட (Twashta) என்று வடமொழியில் திரிந்து விஸ்வகர்மா என்ற தேவதச்சனைக் குறிப்பிடுகின்றது. இவனே இந்திரனுக்கு வேல்வடித்துக் கொடுத்தவன் என்று ரிக்வேதம் கூறுகிறது.

காய்த்தல் என்ற வினைச் சொல், பிறப்பு - தலைமுறைப் பெருக்கம் என்ற பொருளிலும், காய்த்தல் என்ற வினைச்சொல், காய்ச்சுதல், சூடுபடுத்துதல் என்ற பொருளிலும் தமிழில் கூறப் பட்டுள்ளதை நோக்கும் போது,

காய் - காயன் என்ற தமிழ்ச்சொல், மாந்த உடலைச் சுட்டிய தமிழ்ச் சொல்லே என அறியலாம்.

காயன் என்று உடலைச் சுட்டிய தொன்மைக் காலத்தமிழ்ச் சொல், அதன் வடமொழித் திரிபுச் சொல்லான காயா (Kaya) என்ற சொல்லினின்றே பிறந்ததாக, தமிழறிஞர்கள் பலரும் தவறாகக் கருதிவிட்டனர்.

தமிழர்களின் உடல் கருமை நிறத்துடையதாயிருந்தாலும், காயம் என்பது கருமை நிறத்தைக் குறித்ததாலும், உடலைக் காயம் என்று சொல்லவும் வழியுண்டு.

எவ்வகையில் நோக்கிலும் காயம் என்பது தமிழ்ச் சொல்லே என அறியலாம்.

ooo

24

அமரர்

அமரர் என்ற சொல், தேவர்களையும் குறிப்பாக இறந்து போனவர்களையும் குறித்துச்சொல்லப்பட்டுள்ளது.

அமரர்: தேவர்கள், வானுலகத்தில் வாழ்பவர்கள். வானோர் (Celestials).

அமரர்: இறந்து போனவர்கள். இறந்தவரில் வானுலகம் சென்றவர்கள். (Amara)

அமரமாதர்: தெய்வ உலகத்துப் பெண்டிர். தேவரின் மனைவியர். (Goddesses)

அமரன்: வானுலகத்தின் மன்னன் இந்திரன் அல்லது கடவுள்.

அமராவதி: இந்திரன் வசிக்கும் வானுலகத் தலைநகர்.

அமர (Amara) என்ற வடசொல்லினின்றே, அமரர் என்ற தமிழ்ச் சொல்பிறந்ததாகக் கூறினர். அமர - அமரா என்ற வடமொழிச் சொல்லுக்கான வேர்ச் சொல் யாது என்பதற்கு விளக்கம் கிடைக்கவில்லை.

அம் என்ற தமிழ் வேர்ச்சொல்லுக்கு, அழகு என்றும், உயர்வு என்றும், விரிவு என்றும் பொருளுணரப்படும். அம் என்ற வேர்ச் சொல்லினின்று மேற்கண்டவாறு பொருள் விரிந்தன.

அம் - அம்பலம் = அழகுடைய, மேன்மையுடைய அவை.

அம்பட்டு = அழகிய பட்டுத்துணி. இதனைக் கொண்டு (மேலேபோர்த்தி) நாடி பார்ப்பவன் அம்பட்டன் ஆவான்.

அம்பணம் = உயரமான மரக்கால், வாழைமரம்.

அம்பரம் = வானம், விரிந்த கடல்.

அம்பாரம் = அடுக்கடுக்கான அழகிய குவியல், பாரம் - பார் என்ற தமிழ்மூலச் சொல்லினின்றும் விரிந்த தமிழ்ச் சொல்லே. அம்பாரம் என்பது குவியான வணிகப் பொருட் களைக் குறித்தது. இதுவே எம்போரியம் (Emporium) என்று மேலை மொழியில் திரிந்தது.

அம்பி: அழகிய தெப்பம், தோணி.

அம் + ஆ = அம்மா என்ற சொல்லும் கூட, அழகிய - மேன்மையான -உயர்வான தொடக்கம் என்றும் பொருள் கொள்ளலாம். ஆ = தொடக்கம், முதன்மை. வாழ்க்கையில் தொடக்கமே அம்மா எனக் கொள்ளுதலும் சரியானதே.

அம் + அர் = அமர். அழகிய நிலை, இருப்பு, அமைவு, பொருத்தம், பொலிவு, விருப்பம் என்று விரியும்.

அமர் = பொதுவாக உட்காருதல் என்ற பொருளில் கொள்ளப்பட்டது.

அவையில் அமர்ந்திருந்தோர் அனைவரும் அறிஞர் பெருமக்களே.

ஆர அமரப்பேசுங்கள் (உட்கார்ந்து பொறுமையாய்ப் பேசுங்கள்) சினையில் அமர்ந்த கலுழன் கௌவிச் சென்றது.

அமர்ந்தோர்: இருக்கையில் அமர்ந்திருப்போர்.

அமர்வு = அமைவு என்ற சொல்லாலும் அறியப்படும். அமைவோர்= அவையிலிருப்போர்.

அம் - அமை - அமைவு = நிறைவு, பொருத்தம்

அமை - அமைச்சர்: தகுதியான இடத்தில் அமர்ந்திருப்பவர்.

அம் என் வேர்ச் சொல்லினின்றே, அமை - அமைச்சு - அமைச்சர் என சொற்கள் விரிந்தன.

அமைவு = நிலையான அமர்வு.

அமைதி = சலசலப்பற்ற நிலை (Stillness)

அமையம் = நடுவே அமைதியாக அமர்ந்திருத்தல்.

அமையம் என்பதே மையம் எனவும் சொல்லப்பட்டது.

அம் + மையம் = அம்மையம் = நடுவேயுள்ள புள்ளி அல்லது கரும்புள்ளி.

அமரர் = அமர்ந்திருப்பவரெல்லாம் அமரர் என்று சொல்லப்பட்டனர். அவர்களில் நிலையில் அமர்ந்திருப்போர் அமரர் என்ற சொல்லுக்குப் பொருளாயினர்.

அமர்ந்திருப்போர் யார்?

தொல் தமிழகத்தில் நீத்தாரை அமர்ந்த நிலையில் உட்கார வைத்திருப்பது தமிழர் மரபாகும். படுக்க வைத்த நிலை பிற்கால மரபாகும். இன்னும் கூடப் பலவிடங்களில் நீத்தாரை நாற்காலியில் அமரவைத்திருப்பதைக் காணலாம். அதைப் போலவே, நீத்தாரைத் தாழியில் வைக்கும் போதும் அமர்ந்த நிலையிலேயே உட்காரவைத்துத் தாழியைப்புதைத்தனர். இன்று ஆதித்த நல்லூர், அரிக்கமேடு போன்ற ஊர்களில் கண்டெடுக்கப்பட்டுள்ள தாழிகளில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள், அமர்ந்த நிலையிலேயே உள்ளன என்று அறியப்பட்டுள்ளன. படுத்த நிலையில் வைப்பதற்குத் தாழிகள் உருவாக்கப்படவில்லை எனவும் அறியலாம். அமர்ந்த நிலையில் புதைக்கப்பட்ட நீத்தாரை, அமரர் என்றே அக்காலத்தில் அழைத்தனர். அமரர் என்ற தமிழ்ச்சொல், அமர (Amara) என்று வடமொழியில் திரிந்தது. அமர என்பதே மூலச்சொல் எனக்கருதிய பிற்காலத் தமிழறிஞர் சிலர், அமரர் என்பதை, வட சொல்லின் திரிபு எனத் தவறாகக் கருதினர். வடசொற் ளாகக் கருதப்படும் பலவாயிரம் தமிழ்ச் சொற்களில் அமரர் என்ற சொல்லும் ஒன்றாகும்.

வடசொல் என்று கருதப்படும் தமிழ்ச் சொல்லின் வேரினையும் மூலத்தையும் காண நம்மவர் முயல்வதில்லை. இடையில் யாரோவோர் வடமொழிப் பற்றாளர் கூறிய செய்திகளையெல்லாம் உண்மையென்றே நந்தமிழர் நம்பினர்.

அமர் + அணா = அமர்ணா (Amarna) என்ற சொல் எகிப்திய மொழியில் காணப்படுகின்றது. அது ஓரூரின்பெயரைக்

குறிப்பிடும் சொல்லாகும். அவ்வூரில் கிடைத்துள்ள பல்வேறு பாப்பிரஸ் ஆவணங்கள், கி.மு. 1400 ஆண்டுகளைச் சார்ந்தவை களாகும். கெய்ரோ நகருக்குத் தெற்கே நீலாற்றின் வடகரையில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரின் பெயருக்கான வரலாறு அறிவிக்கப்படவில்லையாயினும், இவ்வூர் பாரோ மன்னரின் அரண்மனை மற்றும் கல்லறைகள் காணப்பட்டதாக அறியப் பட்டுள்ளது.

அணா என்ற தமிழ்ச் சொல்லுக்கு உயர்வான, பெருமைக் குரிய, சிறந்த என்றவாறு பொருள் விரிவு உண்டு. அமர் என்ற சொல்லோடு இணைந்த அமர் + அணை என்ற அவ்வூர், மன்னர் வாழ்ந்திருந்த மாளிகைகளையும் கல்லறைகளையும் கொண் டுள்ளதால், அமர்ணா என அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இங்கு கண்டெடுக்கப்பட்ட ஆவணங்களில், 350க்கு மேற்பட்டவை வெளிநாட்டு ஆட்சியாளர்கள் பற்றிய செய்தி களைத் தருகின்றன. (Both the great power (Babylon, Assyria, Mitannu, Hittites) and petty kingdoms of Syria, Canaan, Sidon, Byblos, Tyre, Ashkelon, Jerusalem, Gezer, Lachish, Megiddo and Many other) The Dictionary of the Bible, p. 24.

இந்த ஆவணங்களில் பல பாபிலோனிய, சுமேரிய அசீரிய மொழிகளில் காணப்படுகின்றன. இவைகளைத் தமிழ்க் கண்ணோட்டத்தில் எவரும் இன்னும் ஆய்வு செய்யவில்லை. அவ்வாறு ஆய்வு செய்யப்பட்டால், தொல் தமிழர் பற்றிய புதியசெய்திகளை அவைகள் தரும் என்பது தெளிவு. அக் கண்ணோட்டத்திலேயே அமர் + அணா என்ற சொல்லும் ஆய்வு செய்யப்படும்.

(குறிப்பு: இந்த ஆவணங்கள் யாவும் எகிப்திய நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ளனவென்றும், அவை பல்வேறு மொழி களில் காணப்படுவதாகவும் சொல்லப்பட்ட நிலையில், அச் செய்திகள் தொடர்பான ஆங்கில மொழிபெயர்ப்புகள் வெளி வந்துள்ளன எனினும் அந்த நூல்கள் இந்தியாவில் கிடைக்க வில்லை.)

அமர - அமரர் - அமர மூர்த்தி போன்ற சொற்கள் இன்னும் தமிழகத்தில் பரவலாக அறியப்படுகின்றன.

அமர மூர்த்தி என்ற பெயர், வானுலகின் தலைவனாக இந்திரனைக் குறித்த சொல் என்பர். மூர்த்தி - கீர்த்தி என்ற சொற்கள் வடசொற்களேயென்றும், மூர்த்தி இறைவனைக் குறித்தும், கீர்த்தி புகழைக்குறித்தும் சொல்லப்படுகின்றன.

மூர்த்தி பெரிதா? கீர்த்தி பெரிதா என்றும், மூர்த்தி சிறியதாயினும் கீர்த்திபெரிது என்பன போன்ற வழக்குச் சொற்களும் தமிழகத்தில் அறியப்படுகின்றன.

தீ என்ற தமிழ்ச்சொல், கோள், விண்மீன், நிலவு, கதிரவன், போன்ற ஒளிதரும் அனைத்தையும் குறித்த தமிழ்ச் சொல்லாகும்.

கோள் - ஒரு தீயாகவும், விண்மீன் ஒரு தீயாகவும், நிலவு ஒரு தீயாகவும் கருதப்பட்டு அவை முத்தீ எனப்பட்டன. கதிரவன் மட்டும் தனித்தீயாகச் சொல்லப்பட்டான். அவன் தோன்றும் கிழக்குத் திசையையொட்டி, கீழ்த்தீ எனப்பட்டான்.

முத்தீ என் தமிழ்ச் சொல்லே மூர்த்தி என்றும், கீழ்த்தீ - கீர்த்தி என்றும் வடமொழியில் திரிபுபட்டன.

கோள் - விண்மீன் - நிலவு ஆகியவை பெரிதா? - முத்தீபெரிதா - மூர்த்திபெரிதா?

கதிரவன் என்ற கீழ்த்தீ பெரிதா - கீழத்தி பெரிதா - கீர்த்தி பெரிதா?

என்றவாறு, ஒப்பீட்டுக் கருத்துகள் தோன்றின. இவற்றை ஆரிய மரபு வேறு கருத்தில் திரிந்துக் கூறிவிட்டது.

ooo

25

கபி

கவி என்பது குரங்குகளைக் குறித்த சொல்லாகும். இது கபி என்ற வடமொழிச்சொல்லினின்றும் திரிந்தது என்று கூறினர். கபி என்ற வடசொல்லுக்கான மூலச் சொல்லும் அதன் விளக்கமும் தெளிவாக இல்லை. கபி என்பது வளைவு என்றும், வளைவான அரைவட்டமான தலைக் கொண்டுள்ளதால் குரங்கு கபி எனப்பட்டதாகவும் கூறினர்.

தமிழில் வகரமாகச் சொல்லப்பட்ட பல சொற்களைப் பகரமாகக் கொண்டு வடசொற்கள், திரிந்துள்ளன. ஆனால் பகரமாகச் சொல்லப்பட்ட தமிழ்ச் சொற்கள், வடமொழியில் வகரமாகத் திரியவில்லை. ஆனால் வகரம் - பகரம், எனத் திரிந்துள்ள சொற்கள் அனைத்தும் மேற்கண்டவாறு அமை யாமல், சிலவிலக்குகளும் உள்ளன.

வங்கம் - பங்கம், வலம் - பலம், வனம் - பனம், வாணம் - பாணம் என்றும் திரிந்தன.

பக்கம் - பக்ஷம், பகவன் - பகவான், பக்கணம் - பக்ஷணம், பங்கயம் - பங்கஜம் என்றும் திரிந்தன.

கவி என்பது மரக்கிளையைக் குறித்த தமிழ்ச் சொல் லாகும். மரத்தைக் கவ்வி நிற்பதால் அது கவியெனப்பட்டது.

கவ்வுதல் = பற்றியிருத்தல் (to hold with), சுற்றியிருத்தல் (to encircle with)

கவ் - கவ்வி - கவி = மரத்தைச் சுற்றிப் பற்றியிருந்து பொலிவைத் தருவது.

கவ் - குவ் - குவி = குவிந்திருப்பது இடை பெருத்து மேலும் கீழும் சுருங்கியிருப்பது.

குவி - குவளை = மலர். குவிந்திருப்பதால் குவளையெனப் பட்டது.

கவி - கவை யென்றும் சொல்லப்பட்டது. கவை = கிளை அல்லது மரம்.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்

கவி = அரைவட்டமாகக் காட்சிதரும் மரம், கவிந்திருப்பது.

(to cover as with an umbrella, Overspread)

கவி = குடை. கவிகை = வெண் கொற்றக்குடை.

கவி கவிழ் = குடைபோல் இருக்குமாறு செய்தல். குவளை யைக் கவிழ்த்தல்.

கவி = மரக்கிளை. மரக்கிளையில் வாழும் குரங்கு.

குரங்கு இயற்கையான சொல்லென்றும், கவி பிற்காலச் சொல்லென்றும் பாவாணர் கருதுகிறார். குர் குர் என ஒலித்த தால் அது குரங்கு எனப்பட்டது.

குரங்கு தனது குட்டிகளைக் கவ்விச் செல்வதால், அது கவி யெனப்பட்டது எனவும் கொள்ளலாம்.

கவரி : உடலெல்லாம் மயிரால் போர்த்தப்பட்டுள்ள மான்.

கவத்தல்: பற்றுதல், மூடுதல், போர்த்துதல்.

கவயம்: போர்ச்சட்டை, கவசம் என்றும் கூறப்பட்டது.

கவடு = வளைவான மரக்கிளை.

கவட்டை = கிளையின் ஒரு நுனியின் விரிந்து குறுகும் இரு சிறுகிளைகள் வளைந்துள்ள கால்களையுடையவனைக் கவட்டைக் காலன் என்பர்.

கவர்: விரிந்து பரந்து மரத்தை மூடியுள்ள மரக்கொப்புகள்

கவர் என்ற தமிழ்ச் சொல்லுக்கு மூடியிருத்தல் (கவரிமான்) என்ற பொருளும் உண்டு. இச்சொல் ஆங்கிலத்தில் Cover என்றே சொல்லப்படுவதை நோக்குக.

கவி என்ற குரங்கைக் குறித்த தமிழ்ச்சொல், கபி (Kapi) என்று வடமொழியில் திரிந்தது. கவி என்பது தொடக்கத்தில் கிளையையும், கிளையில் வாழ்ந்திருந்த குரங்கின் தலையை யொட்டி அரைவட்டத்தையும், அரைவட்டம் பின்னர் குடை யையும் குறித்தன.

கவி = கிளை. கவி = குரங்கு. கவிகை = குடை

மரத்தைத் கவ்விய கிளை கவி எனப்பட்டது போல், அறிவைக் கவ்விய மாந்தனும் கவி எனப்பட்டான். அக்காலத் தில் அறிவார்ந்தவர்கள் கவிகள் என்றே அழைக்கப்பட்டனர். கவி தைத்துக் கொடுத்தவையெல்லாம், கவிதையாயின.

தை = கோர்ப்பது, சோர்ப்பது, கவி பிற்காலத்தில் கவிஞன் எனப்பட்டான். கவிஞன் தந்தப் பாடல்கள் அழகுணர்வுடன் காணப்பட்டதால், அழகுக்குக் கவின் என்ற சொல்லும் பிறந்தது.

கவி + அழகு = கவியழகு. கவியே அழகாகி, கழகு எனப் பட்டது.

கழகு - கவியைக்கற்குமிடம். கழகு பிற்காலத்தில் கழகம் எனப்பட்டது.

கழகம் = கல்வி கற்குமிடம் (College) கல்விக் கூடம்.

கழகம் பிற்காலத்தில் கூட்டம், அவை என்ற பொரு ளிலும் உணரப்பட்டது.

கழங்கு என்பது ஒரு வகையான கொட்டையாகும். இதனை வைத்துச் சூதாடுவர்.

அதனால் சூதாட்டத்திற்குக் கழங்கம் என்ற பெயரும் உண்டு. கழங்கும் பிற்காலத்தில் கழகம் என்றும் கூறப்பட்டது.

கவி வடமொழியில் கபி எனத் திரிந்தது போலவே,. கிரேக்க மொழியில் கேபர் (caper) என்றும், இத்தாலிய மொழியில் கப்பு (Cappu) என்றும் திரிந்தது

கவி என்பது வளைவு என்ற பொருளில், மேற்கண்ட அயன்மொழிச் சொற்களும் அறியப்பட்டன. ஆட்டின் வளைந்த கொம்பை, Caper, என்று கிரேக்க மொழி கூறுகிறது.

குரங்கின் கவிழ்த்த கிண்ணம் போன்ற அரைவட்ட வளை வான தலையை கப்பு என்று இத்தாலிய மொழி கூறுகிறது.

குரங்கின் தலையைப்போன்றே சிரைத்துக் கொண்ட கத்தோலிக்கத் துறவிகள் சிலர். (Frairs of cappuchin order), கப்பிச்சின் என்ற இத்தாலியச் சொல்லால் அழைக்கப்பட்டனர்.

ஆட்டின் வளைவான கொம்பை, Capricorn என்று இலத்தீன் மொழி கூறுகிறது. இதிலுள்ள பின்னொட்டுச் சொல்லான corn என்பது, cornu (கொர்னு) என்ற கிரேக்கச் சொல்லின் திரிபாகும். கொர்னு - கொம்பு என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

கடலில் நீண்டு சென்று வளைந்திருந்த நிலப்பகுதியை cape என்று ஆங்கிலத்தில் அழைத்தனர். Cape of Commerim, Cape of good hope (குமரி முனை, நன்னம்பிக்கை முனை)

தமிழ்நாட்டில் கடலூரில், வளைவான குறுமலையொன்றுள்ளது. இங்கு செம்மண், அரளை போன்ற சாலைப் பணிகளுக்குத் தேவையான சிறு கற்களை வெட்டி எடுப்பர்.

தற்போது அங்கு மாவட்டச் சிறை உள்ளது இவ்வளைவான மலையை Capper Quarry (கேப்பர் குவாரி) என்று ஆங்கிலேயர் அழைத்தனர். இன்றும் அது கேப்பர் மலை என்றே அழைக்கப்படுகின்றது.

கவி என்ற தமிழ்ச் சொல்லினின்றும் எவ்வாறு அயன் மொழிகளில் அச்சொல் திரிபு பட்டுள்ளது என்பதை நோக்குக.

கருமை கலந்து பழுப்பாகக் காணப்படும் நிறத்தையும் கபி - கபில என்று வடமொழி கூறுகிறது. இச்சொல் கவி என்ற தமிழ்ச்சொல்லின் திரிபன்று என்பதை அறிதல் வேண்டும். பழுப்பு என்பது தமிழ் மரபில் ஒரு நிறமன்று. ஐந்து நிறங்களையே தமிழர் கூறினர். வெள்ளை, பச்சை, மஞ்சள், கறுப்பு, சிவப்பு ஆகியவையே அவையாகும்.

நீலம் (Blue), பழுப்பு (Brown), ஊதா (Violet) போன்றவை இவ்வைந்து நிறங்கள் ஒன்றோடொன்று கலப்பதால் தோன்றும் நிறங்களாகும்.

இளங்கறுப்பைப் பச்சையென்றும் தமிழர் கூறினர். இது பற்றியே இவ்வைந்து சொற்களுக்கும் ரெட்டிப்புச் சொற்கள் தமிழில் உண்டு.

வெள்ளை வெளேர், பச்சைப் பசேர், மஞ்சமசேர், கன்னங்கரேர், செக்கச்செவேர் என்பனவாகும்.

நீலம் உள்ள பிற வண்ணங்களை அவ்வாறு அழைப்ப தில்லை என்பதால், தமிழரின் வண்ணங்கள் ஐந்து என்று தெளியலாம்.

கறுப்பு என்ற வண்ணம், வெளிர்ந்திருந்தால் அது க(று)ப்பு என்று அழைக்கப்படும்.

கப்பு வண்ணம் என்பதும் கறுமை நிறமே.

கப்பி = கருமை நிங்கிகொண்ட குறத்தி - Gypsy என்று ஆங்கிலச் சொல், கப்பி என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

கப்பி, கபி என்று வடமொழியில் திரிந்தது. கறுப்பா யிருந்த பிராமணப் புலவன் கபிலன் என்று அழைக்கப்பட்டான். புத்தர் பிறந்த கபில வஸ்து என்ற ஊரின் பெயரை நோக்குக.

வண்ணம் என்ற சொல்லும் தமிழ்ச் சொல் அல்லவென்றும், அது வர்ணம் என்ற வடசொல்லின் திரிபேயென்றும் தவறாகக் கருதினர். அது வண்ணம் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே என்பதை அவர் அறியவில்லை.

வண்ணங்கள் பிற்காலத்தில் அறியப்பட்டு அவை செடி களினின்றே உருவாக்கப்பட்டன. வண்ணம் என்ற சொல்லின் மூலச் சொல் தமிழில் யாது? இதற்கு விடையளிக்க இயலாத தால், வர்ணம் என்பதே மூலச் சொல் என்று கூறிவைத்தனர்.

வண் - வண்ணுதல் என்பதற்கு வளைதல் என்பதே தமிழில் பொருளாகும். அது வள் என்ற வேர்ச் சொல்லினின்றும் விரிந்த தாகும்.

வள் - வள - வளைவு: நேரான ஒன்றைக் கோணலாக்குதல்.

வள் - வண் - வணவு: வளைந்து கொடுத்தல்.

வண் - வண - வணக்கம்: உடலை வளைத்து வரவேற்கும் தமிழரின் பண்பாடு.

வணக்கு: வளைத்தல் (to bend, to make flexible)

வணங்கு: தொழு, பணிவு காட்டு, இச்செய்கைகளில் உடல் வளைந்து கொடுப்பதை நோக்குக (to worship to adore).

வண்டி: வளைவான கூரையைக் கொண்டது

வண்டு: வளைவான முதுகைக் கொண்டது.

வண்ணம் என்ற சொல்லும் வளைவு என்ற மூலச் சொல்லி னின்றும் பிறந்ததே.

தமிழர்கள் முதன்முதலில் அனைத்து வண்ணங்களையும் ஒரு சேரக்கண்டது. வானவில் போன்ற நிகழ்வில் தான் எனலாம். வானவில்லில் ஐந்து நிறங்களே உள்ளன. என்பது தமிழரின் முடி பாகும். தற்காலத்து அறிவியல் ஏழு வண்ணங்களாக (VIBGYOR)ச் சொல்கிறது.

வில் என்ற சொல்லுக்கும் வளைவு என்பதே பொருளாகும். தொல்தமிழர் வானவில்லை, வண்ண வில், அதாவது வளைந்த வில் என்றே அழைத்தனர். வண்ணுதல் = வளைதல்.

வண்ணம் என்பது இவ்விடத்தில் நிறத்தைக் குறித்ததன்று. அது வளைவைக் குறித்ததே.

வண்ண வில்லில் நிறங்கள் தெளிவாகத் தெரிந்தது பற்றியே, நிறத்தையே வண்ணம் என்று அழைக்கும் வழக்கு தோன்றியது.

வண்ணம்: வண்ணமான வில்லில் தோன்றும் நிறங்கள்

வண்ணம் என்ற தமிழ்ச்சொல் தோன்றிய வரலாறு இதுவே எனலாம். இத்தமிழ்ச் சொல்லே, வர்ண என்று வடமொழியில் திரிந்தது.

கன்ன என்ற தமிழ்ச் சொல், கர்ண என்று வடமொழியில் திரிந்ததை நோக்குக.

கன்னம்: வெளியே நீண்டிருக்கும் காது. கன்னம் - கர்ணம், கர்ணன் என்றவாறு.

சுண்ணம் என்ற தமிழ்ச் சொல், சுண்ணாம்பைக் குறித்தது. இதுவும் கூட வடசொல் என்றே கருதினர்.

வண்ணம், சுண்ணம் ஆகியவை தொல்காப்பியத்தில் சொல்லப்பட்டுள்ளன. அவை வடசொற்களே என்றும், தொல் காப்பியர் ஆரியரே என்றும் சிலர் கூறினர்.

சுள் என்றே வேர்ச் சொல்லின்றும் பல சொற்கள் தமிழில் விரிந்துள்ளன.

சுள் - சுன் - சுன்னுதல் = வளைதல், வளைவு என்று பொருள்படும்.

சுள் - சுண் - சுண்ணுதல் = இதுவும் வளைவைக் குறித்த சொல்லே.

சுணக்கம் = வளைவு.

சுணங்கள் = வளைந்த வாலையுடைய நாய், நாய்வாலை நிமிர்த்த இயலாது.

சுணை - வட்டவட்டமாகக் காணப்படும் சொறி நோய்.

சுண்டுதல் = சுருங்கவைத்தல் அல்லது வளைத்தல்.

சுண்ணம் = பொடி, துகள், புழுதி என்று தமிழில் விரியும். இச்சொல்லை, சூர்ணம், (Choorna) என்று வடமொழியில் உரைத்தனர்.

வண்ணம் - வர்ணமானது போல், சுண்ணம் - சூர்ணமானது.

சுண்ணுதல் என்ற வளைதல், வளைவான பொருள் என்ற நிலையில், அது கிளிஞ்சலையும் குறித்தது. சுருட்டிக் கொண்ட வாறு தெரியும் கிளிஞ்சல், சுண்ணம் எனப்பட்டது. சுருட்டிக் கொள்ளும் விரல் சுண்டு விரல் எனப்பட்டது.

சுண்ணமாகிய கிளிஞ்சலிலிருந்து எடுக்கப்பட்ட பொடி, சுண்ணம் என்றே அழைக்கப்பட்டது.

சுண்ணப் பொடியென்பது, கிளிஞ்சலிலிருந்து எடுக்கப் பட்ட பொடியே அது வடமொழியில் சூர்ணமாகி, எல்லாப் பொடிகளையும் குறித்தது.

குறிப்பாக, மருத்துவர் தரும் பொடி. சூர்ணம் என்று பரவலாக அறியப்பட்டது. சுண்ணப்பொடி, சுண்ணாம்புப் பொடியென்றும், சுண்ணாம்பு என்றும் அறியப்பட்டது. பிற்காலத்தில் சிலவகைக் கற்களிலிருந்து எடுக்கப்பட்ட பொடிவகைகளும் சுண்ணம் என்றே அழைக்கப்பட்டன. (கல் சுண்ணாம்பு).

ooo

26

கரகம்

நூலே கரகம் முக்கோல் மணையே
ஆயுங் காலை அந்தணர்க்கு உரிய — தொல்காப்பியம்,
பொருள். 1570

இவ்வரிகள் தொடங்கி,

அந்தணர்க்கு அரசு வரைவு இன்றே (1574)

முடியவுள்ள 12 வரிகள், தொல்காப்பியரால் எழுதப் பட்டவையல்லவென்றும், கி.பி, 10 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு தொல்காப்பியத்தில் இணைக்கப்பட்ட இடைச்சொற்களே என்றும் அறிஞர் வெள்ளை வாரணனார் குறிப்பிடுகின்றார் மேலும்,

மேலோர் மூவோர்க்கும் யுணர்ந்த கரணம்
கீழோர்க்காகிய காலமும் உண்டே. — பொருள். 1090

என்ற வரிகளும் இடைச்செருகல்களே என்பதும் வாரண னாரின் கருத்தாகும். இவை, மூலவரிகளின் நடையிலும் பொரு ளிலும் மாறுபட்டிருப்பதோடு, ஆரியக்கருத்துக்களையும் வலி யுறுத்துகின்றன. தொல்காப்பியர் காலத்தில் ஆரியம் தென் னாட்டில் அறியப்படவில்லை என்பது தற்கால ஆள்வாளர் களால் மெய்ப்பிக்கப்பட்ட ஒன்றாகும். தொல்காப்பியத்தில் மேற்கண்ட வரிகளில் காணப்படும் கரகம், கரணம் போன்ற சொற்கள் வடசொற்களேயென்றும் அவை தொல்காப்பியர் காலத்தில் அறியப்பட்டசொற்கள் அல்லவென்றும் கூறப்பட்டன.

மேலும் கருமம், காரணம், காரியம், காமம் போன்ற சொற்களும் வடசொற்களே என்றும் கூறியுள்ளனர். வட

மொழியில் காணப்படும் பெரும்பாலான சொற்கள், தமிழ் மூலத்தைக் கொண்டவைகளே என்பது ஒரு புறமிருக்க, கரணம் - கரகம் போன்றவை வட மொழிச் சொற்களா என்பதை ஆய்வு செய்தலும் வேண்டற்பாலதே.

கரகம் = கமண்டலம். நீரை வைத்திருக்க கலயம் அல்லது குடுவை.

கரணம் = திருமணச் சடங்குகள். வதுவை என்றும் கூறுவர்.

திருமணம் என்றும் புணர்ச்சி என்றும் கூடக் கருதுவர்.

தமிழில் கார், கரி, கரு, கருமை ஆகிய சொற்கள், முகில் என்ற மூலப் பொருளிலிருந்து நீண்டவைகளே. கருமையைக் குறித்த அனைத்துச் சொற்களும், பன்மொழிகளில் அவை காணப்பட்டாலும், அவை தமிழ்மூலச் சொற்களின் திரிபுகளே. கார் என்றும் கருமை என்றும் சொல்லப்பட்ட தமிழ்ச் சொற்கள், விரிந்து பரந்த ஆழமான உட்பொருளையும் கொண்டு விளங்குகின்றன. மாந்தனின் முதல் தேவை ஒளியென்பதும், மறு தேவை நீரென்பதும் அறியப்பட்டவை. எனவே கதிரவனும் கார்முகிலும் தமிழரின் வாழ்வியலில் பிரிக்க வியலாத சொற்களாயின. கதிரவன் சிவனியமாகவும், கார்முகில் மாலியமாகவும் உருவெடுத்தன. கருமை என்ற வண்ணம், தமிழரின் வாழ்விய லோடு கலந்தவொன்றாகும்.

மா என்ற சொல்லுக்குப் பெரிய, மிகப்பெரிய, எண்ண வியலாத அளவிடவியலாத என்றவாறு பொருள் விரியும். மா + அல் = மிகவும் கருமை. பேரிருள் என்றும் விரியும்.

மா + அல் என்ற சொற்களே, மால் என்று அறியப்பட்டது.

மால் = கருமை, பெருமை, மயக்கம், மேகம், இருள் என்றவாறு பொருள் விரியும்.

மால் + ஐ அழகிய கருமை, விந்தையான இருள்.

மால் + ஐ என்ற சொற்களே, இருள்கூடும் பொழுதான மாலை என்ற சொல்லை உருவாக்கின.

மால் என்ற தமிழ்ச்சொல், மேலைமொழிகளிலும், இருட்டு, தீமை, தீச்செயல், தீவினை, திருட்டு போன்ற பொருளில் அறியப்பட்டுள்ளது.

மால் - Male என்ற இலத்தீன் சொல்லுக்கு, கெட்டது (bad), குற்றம் (fault), இல்லாமை (not) என்றவாறு பொருள் கூறப் பட்டுள்ளது. Male என்ற இலத்தீன் சொல், Mal என்று ஆங்கிலத்தில் திரிந்து அதே பொருளே தந்தது.

Mal practice: சட்டத்திற்குப் புறம்பான, கெடுதலான, குற்றவியல் தன்மை கொண்ட என்றவாறு பொருள் கூறப் பட்டுள்ளது.

Mal - aria = அரியா என்ற இத்தாலியச் சொல்லுக்குக் காற்று என்பது பொருளாகும். Air என்ற ஆங்கிலச் சொல்லை நோக்குக.

Mal - aria = கெட்ட காற்று; அதுவே மலேரியா என்ற கொசுவினால் உண்டாகும் நோயாகக் கருதப்பட்டது.

கார் என்ற தமிழ்ச்சொல், க்ரு Kru - க்ரு Krsh என்று வடமொழியிலும் Kri என்று கிரேக்க மொழியிலும் திரிந் துள்ளதைக் காணலாம்.

மால் என்ற சொல் தமிழ் மொழியில் இருட்டைக் குறித்தது; மேலை மொழிகளில் திருட்டைக் குறித்தது. திருட்டு என்பது தவறான, கெட்ட என்றவாறு பொருள் கொள்க.

மால் தமிழில் பெருமையைக் குறித்தது; மேலை மொழி களில் சிறுமையைக் குறித்தது.

கார் என்பது தமிழில் பெருமையைக் குறித்தது போலவே, வடமொழியிலும் மேலை மொழிகளிலும் பெருமைகளையே குறித்தது.

எனவே, வடமொழியில் சொல்லப்படும் க்ரு, க்ர, க்ரு போன்ற அனைத்துச் சொற்களும் கார் அல்லது கரு என்ற தமிழ்ச் சொற்களின் திரிபுகளே எனலாம்.

கார் என்பது மழையையும் குறித்த சொல்லாகும் கார் காலம் = மழைக்காலம்.

கார் + அகம் = காரகம். நீர்க்குடுவை அதுவே வடமொழி யில் கரகம் என்று திரிந்தது.

கையும் மெய்யும் சேர்ந்து செய்யும் பணி கைமெய் எனப்பட்டது.

கைமெய் = செயல், செயல்பாடு, கைத்திறன் கொண்ட வேலை.

கைமெய்யாளர்கள் எனப்பட்டோர், கம்மாளராயினர்.

கம்மக்காரர்: உடலுழைப்புச் செய்வோர்.

கம்மாலை ; கம்மாளரின் உலைக்களம்.

கம்மியர் செய்த குடம், கம்மக் குடம் எனப்பட்டது.

மண்டலம் என்பது வட்டம் என்ற பொருளில் கூறப் பட்டது, கம்மியர் செய்த வட்ட வடிவிலான குடுவை. கம்ம + மண்டலம் = கமண்டலம் எனப்பட்டது.

கமண்டலத்தில் நீர் நிரப்பி வைக்கப்பட்டிருப்பதை அறியலாம்.

மண்டலம் என்ற சொல், மண் + தளம் என்றே சொல்லப் பட்டிருக்க வேண்டும்.

தளம் என்பது விரிந்து பரந்த வெளி அல்லது நிலம் என்று கருதப்படும். தளம் என்பதும் வடசொல்லே என்று சிலர் தவறாகக் கருதினர். பார்வையினின்றும் தள்ளப்படுவது அதாவது நீண்டு கொண்டே செல்வது தளம் எனப்படும்.

மண் என்பது தரையைக் குறித்த தமிழ்ச் சொல்லாகும். மண் + தளம் = மண்டலம்.

மண்டலம் என்பது பெரிய அளவிலான நிலப்பரப்பையும் குறித்ததாலும், அது வட்ட வடிவமான எல்லையைக் கொண் டிருந்ததாலும், மண்டலம் என்பது பிற்காலத்தில் வட்டம் என்ற பொருளிலும் உணரப்பட்டது.

மண்டலம் : தற்போதுள்ள வருவாய் மாவட்ட அளவிலான ஒரு பகுதி எனக் கருதலாம்.

கம்மான் செய்த குடுவை வட்ட வடிவிலிருந்ததால், அது கமண்டலம் எனப்பட்டது. கமம், குடுவையைக் குறித்ததால், பின்னர் குடுவையிலிருந்த நீரையும் குறித்தது. நீரை அடிப்படை யாகக் கொண்ட வேளாண் மக்களும் கம்மர் எனப் பட்டனர்.

கம்மவார் : ஆந்திர மாநிலத்திலுள்ள வேளாண்மக்கள்.

கம்மாறர் : நீரில் படகு செலுத்துவோர்.

கரணம் = சேர்க்கை, புணர்ச்சி, திருமணம் என்றவாறு விரியும்.

அணம் என்ற சொல்லுக்கு, சேர்தல் = இணைதல் என்பதே பொருளாகும்.

அணம் - அணவு = இரண்டு ஒன்றாதல் (to unite, to join)

கரவு = மறைவு (to hide)

கரவும் அணமும் சேர்ந்து கரவணம் - கரணம் என்றானது.

கரணம் = இல்லற ஈடுபாடு ஒன்றோடொன்று இணைதல்

இவ்வாறான இணைதலை அல்லது பொருத்தத்தை, வான வியலிலும் கூறினர்.

விண்மீன்கள் (ராசிகள்), குறிப்பிட்ட கோளுடன் இணைந்து காணப்படுவதைக் கரணம் என்றனர் (Artronomical calculations)

இது பிற்காலத்தில், (கிரகப் பொருத்தம் என்ற பெயரில்) சுடரியத்திலும் கணிக்கப்பட்டது. (Astrological calculations) காலத்தைப் பகுத்து, அக்கால அளவில் கோள்களின் நிலை களைச் சொல்வது கரணம் எனப்பட்டது.

கரணம் என்பது, பொருத்தம் - இணைப்பு என்ற பொரு ளின் உணரப்பட்டதை நோக்குக. தொல்காப்பியம் பயன் படுத்திய கரகம், கரணம் ஆகிய சொற்கள், தமிழ்ச் சொற்களே என்பது தெளிவு.

○○○

27

சின்னம்

சிறிய அளவிலான பொருள், இடம், பொருள் குறித்த அடையாளம், கீழ்த்தரமான செயல், ஒரு பொருளுக்கான மற்றொரு பொருளை உவமையாகக் காட்டுவது, சிறிய அளவிலான முறம், தட்டு, பூ என்றவாறு, சின்னம் என்ற சொல் லுக்கான பொருள் விரியும். சின்னம் என்பது வடசொல்லே என்பதற்கான காரணம் எதுவுமில்லை.

சிறு - சிறிய என்ற மூலச் சொல்லினின்றே, சின்ன வென்ற சொல்லும் விரிந்தது. சின்ன வென்ற தமிழ்ச் சொல், தொன்மைக் காலச் சொல்லாகவே அறியப்பட்டுள்ளது.

சிறு அளவிலான முட்டை, சினையென்று சொல்லப்பட்டது.

சிறு - சிறுனை - சினை என்றவாறு சொல்லப்பட்டது. சினை யென்பது சிறு அளவையும், வளைந்த அல்லது வட்ட மான உருவத்தையும் கூடக் குறித்தது.

சிறுமை - சின்மை என்று சொல்லப்படுவதை நோக்குக.

சின்ன என்பது இளைய என்ற பொருளில் கூறப்பட் டுள்ளதை அறியலாம்.

சின்னப்பையன், சின்னத்தம்பி, சின்னப்பன், சின்னக்காள் எனவிரியும்.

சின்ன என்பது கீழ்த்தரமான என்ற பொருளிலும் கூறப் பட்டது.

சின்னச் சாதி, சின்னமனிதன், சின்னபுத்தி, சின்னத்தனம் என்றவாறு அறிக.

ஒரு பெரிய அளவிலான நாடு. அரசு, மொழி ஆகியவற்றை நினைவுபடுத்த வேறொரு சிறிய பொருளைக் காட்டுவதும் சின்னம் எனப்படும்.

மீன் - பாண்டியர்கள், வில் - சேரர்கள், புலி - சோழர்கள்.

இது போன்ற சின்னங்கள், தமிழர் குடியேற்ற நாடுகளிலும் காணப்பட்டன. விண்மீனை யொத்த முக்கோணக் கட்டங்கள் கொண்டதொரு சின்னம், தாவீது மன்னனால், தனது நாட்டையுணர்த்தப் பயன்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு போர் மறவனும், அலுவலர் உள்ளிட்ட அரசுப் பணியாளர்களும் அவ்வரசுக்குரிய அடையாளத்தை அணிந்திருந்தனர்.

ஒவ்வொரு மலரும் ஒரு இறைவனை நினைவூட்டுவதை அறியலாம்.

அரசு முத்திரைகளும், காசுகளும், விருதுகளும் கூட, சிறிய அளவில் உள்ளனவாதலால், அவை சின்னங்கள் என்றே அழைக்கப்பட்டன.

சின்ன என்பது சிறிய அளவிலான என்ற பொதுப் பொருளைக் குறித்ததாகும்.

சேலம் என்பது பெரிய நகரத்தையும், சின்ன சேலம் என்பது சிறு நகரத்தையும் குறித்துக் காட்டச் சொல்லப்பட்டதாகும். மதுரை - சின்ன மதுரை அல்லது சிறுமதுரை.

பெரியமலை - சின்னமலை. சின்னமனூர் சின்னாளப்பட்டி என விரியும்.

சென்னை என்ற பெயரே, சின்ன என்ற சொல்லின் தெலுங்குத் திரிபாகும்.

சென்னை என்ற தெலுங்குச் சொல், சின்ன என்ற தமிழ்ச் சொல்லின் திரிபேயாகும்.

சின்னப்பன் என்ற தமிழ்ச்சொல், சென்னப்பன் என்று தெலுங்கில் திரிந்துள்ளது. தமிழர்கள், தங்களைத் தமிழர் என்ற தமிழ்ச் சொல்லால் அழைக்கப்படுவதைவிட, திராவிடர் என்ற சமற்கிருதச் சொல்லால் அழைக்கப்படுவதில் பெருமை

கொள்வர். அதே போன்று, தமிழ் நாட்டுத் தலைநகரம், தெலுங்குப் பெயரால் அழைக்கப்படுவதிலும் பெருமை காண் கின்றனர். சிங்காரச் சென்னை யென்று மற்றொரு வடசொல்லை இணைத்துக் கூறுவதில் அளவிலா மகிழ்ச்சியடைகின்றனர். மெட்ராஸ் என்ற பெயரை மாற்ற நினைத்தபோது, மயிலை - திருமயிலை போன்ற ஊர்ப் பெயர்களை மறந்துவிட்டனர். வளமான வரலாற்றைக் கொண்ட மயிலை எவ்வளவு சிறப்பான தமிழ்ப் பெயர் என்பதையும் மறந்துவிட்டனர். இதனை ஈடு செய்யும் வகையில், பாண்டிச்சேரி - புதுச்சேரி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதற்கானப் பாராட்டும் தெரிவிக்கலாம்.

சின்ன என்ற தமிழ்ச்சொல், சிக்க என்று கன்னட மொழி யிலும், சென்ன என்று தெலுங்கிலும் திரிந்துள்ள நிலையில், சின்ன என்ற ஒலியுடனே எபிறேய மற்றும் பாபிலோனிய மொழி யிலும் திரிபுபட்டுள்ளதைக் காணலாம்.

சின்ன என்ற தமிழ்ச்சொல், சின் (sin) என்றவாறு பாபி லோனிய மொழியில் திரிபுபட்டுள்ளது. இச் சொல்லுக்கு விளக்கம் தந்த மொழியியலார், அது சிறிய (Small) என்ற பொரு ளையே தருவதாகக் கூறுகின்றனர். கதிரவன் பெரிய அளவிலும், திங்கள் சிறிய அளவிலும் அறியப்படுவதால், திங்களைக் குறித்த சின்(ன) என்ற சொல்லைப் பாபிலோனியர் பயன்படுத்தியுள்ள னர் என அறிகிறோம். Sin god = Moon god.

பாபிலோனிய மொழியிலுள்ள சில சொற்களைப் படித்தவர் களும், அதற்கு விளக்கம் சொன்னவர்களும் சில சொற்களைத் தலைகீழாகப் படித்துள்ளனர் என்றும் அறியமுடிகின்றது. மாறன் என்ற தமிழ்ச்சொல், மன்னன் ஒருவனைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. அச்சொல்லை நாறம் (என்றவாறு தலைகீழாகப் படித்துள்ளனர்)

MARAN - said as - NARAM.

நாறம் சின் (Naram sin) என்ற பெயரிலுள்ள முன்னொட்டுச் சொல் மாறனையும் சின் என்ற பின்னொட்டுச்சொல், சின்ன (Small) என்ற தமிழ்ச் சொல்லையும் குறித்தனவே சுமேரியர் வழிவந்த சின்ன மாறன் (Maran the Junior), இவ்வாறு தலைகீழ்ப் பெயராகப் படிக்கப்பட்டுள்ளான். இவை ஆப்பு எழுத்துக்

களின் (Cunieform) எழுதப்பட்டுள்ளவையாதலால், தலைகீழாகப் படிப்பதற்கும் வாய்ப்புள்ளது.

மேலும் தைகிரீஸ் ஆற்றை சின்னாறு (Small river) என்றே எபிரேய மொழி கூறுகிறது. சின்னாறு - சென்னாறு (Sennar) என்று எபிரேய மொழியிலும், சினார் (Shinar) என்று பாபிலோனிய மொழியிலும் கூறப்பட்டுள்ளது. இரட்டை ஆறுகளை யூப்ரடீசைப்பேராறு (Perat) என்றும், தைகிரீசைச் சின்னாறு (Sennar) என்றும் விவிலிய நூல் விளக்குகிறது.

சின்ன - சின்னம் போன்ற தமிழ்ச் சொற்கள், எவ்வாறு மேலை மொழிகளிலும் காணப்படுகின்றன என்பதற்கு மேற் கண்ட சொற்களே சான்றுகளாகும். சின்ன - சின்னம் என்பது தமிழ்ச் சொல்லேயென்றும், அது வடமொழிச் சொல்லெனத் தவறாகக் கருதப்பட்டது என்றும் எண்ணுதல் வேண்டும். தொல்காப்பியம் கூறும், சின்னம் என்ற சொல், தனித்தமிழ்ச் சொல்லே என்பது தெளிவு.

○○○

28

சூதர்

சுள்ளென்ற வேர்ச் சொல்லினின்றே சூது - சூதர் என்ற சொற்கள் நீண்டன. சூதர் என்பது வடசொல்லென்றும், சூட (Soota) என்ற சொல்லின் திரிபேயென்றும் தவறாகக் கருதினர்.

சுள் = சுருங்குதல், தன்னிலையிலிருந்து உருவில் சிறிய தாதல்.

சுள் - சுளி = சினத்தால் முகத்தைச் சுருக்குதல். முகத்தைச் சுளித்தல்

சுளுகு = சுருக்கமான வழி (Shortest way)

சுளுக்கு = நீண்ட நரம்பு வளைந்து சுருங்கிக் கொள்ளுதல் (To be spranied).

சுளுவு =பெருமுயற்சியில்லாத செயல்பாடு (Easy work).

சுளை = பெரிய பழத்தின் சுருக்கமான அல்லது சிறிய அலகு. (Pulp).

சுள்ளு = சுருங்கிப் போன மீன் அல்லது கருவாடு (dried fish).

சுள்ளி = சுருங்கிப் போன மரம் அல்லது கிளை, சிறு விறகு.

சுள் - சூள் எனவும் விரிந்தது. சூள் = ஒளி, நெருப்பு, சூடு என விரியும்.

சூள் = தீ (fire).

சூள் காரர் = தீப்பந்தம் பிடித்துக் கொண்டிருப்பவர்.

சூள் மீன் = தீப்பந்தம் கொண்டு பிடிக்கப்படும் மீன்.

சூளை = செங்கல்லைச் சுட்டெடுக்கும் உலை (A kiln or furnace)

சுள் - சுறு - சூறு: துளைத்தல், துடைத்தல், வழியேற் படுத்துதல்

சூறும் வளி = சூறாவளி - துடைத்தெடுக்கும் சூழல் காற்று.

சூறு = சுருங்கி விரியும் வழி. எருவாய்.

சுள் - சுன் - சூன் = வளைவு.

சூன் - சூனம் = பெருத்த வயிறு அல்லது வீங்கிய வயிறு. வட்டமாகத்தோன்றும் புறவளைவு.

சூனச் சுவர் = நேராக இல்லாமல் வெளிப்பக்கம் பிதுங்கி நிற்கும் சுவர்.

சூன் - சூனி = வளைவு அல்லது வட்டம், ஒன்றுமின்மை.

சூனியம் = ஒன்றுமில்லாமை, பாழ் (Emptyness).

பாழ் என்ற வெற்றெண் (Zero), சூனியம் என்றும் சொல்லப்படும் சூனியம் என்பது தமிழ்ச் சொல்லே. அது (Soonya) வடசொல்லாகத் திரிந்து சூன்யா என்று சொல்லப் பட்டது. சூன்யா என்பதையே மூலச் சொல்லாகக் கருதி யவர்கள், அதனைச் சூனியம் என்றனர். சூனியம் என்ற சொல் லுக்குத் தமிழில் வேர்ச் சொல்லும் மூலச் சொல்லும் உள்ளன எனவே, சூனியம் தமிழ்ச் சொல்லே என்பது தெளிவு.

சூள் என்ற சொல், சுள், என்ற வேர்ச் சொல்லினின்றே தோன்றியது. சூள் என்ற சொல் தீயையும் நெருப்பையும் குறித்தது. போலவே, சுள் என்ற சொல்லும் குறித்தது.

சுள் = சுள்ளெனச் சுடும் நெருப்பு வெயில் சுள் எனச் சுட்டது. எனவே சுள் என்பதும் நெருப்பு, தீ, வெப்பம் ஆகிய பொருளை உள்ளடக்கியச் சொல்லேயாகும்.

சுள் - சுடு: வெப்பமுறுதல், காய்தல், எரிதல், இது வினைச் சொல்லாகும்.

சுள் - சுடு - :வெப்பம் (Heat) சூடுபட்ட பூனை.

சூடு என்பதற்கு அணிந்து கொள்ளுதல் என்ற பொருளும் உண்டு.

சுள் - சுர் = சூர் = செம்மை, வெப்பம், கூர்மை, தெய்வம் என விரியும். சுர் எனச் சுட்டது.

சூர் - சூரன் = சிவந்த நிறமுடையவன். சுரன் - சூரன் = ஆரியன்.

அசுரன் = கரிய நிறமுடைய தமிழன் என்பது பாவண ருடைய கருத்தாகும். வலம் - அவலம் போன்ற சொற்களையும் எடுத்துக்காட்டி, அ என்ற முன்னொட்டுச் சொல்லாக இணைத்து எதிர்மறைப் பொருளை உணர்த்துவது தமிழ் முறையையே என்பதுப் பாவாணரின் கருத்தாகும். இதனை பிற்காலத்தில் வடமொழியினர் ஏற்றுக் கொண்டனர் என்பதும் அவரது முடிபாகும்.

சுர் -சூரி = கூர்மையான கத்தி.

சூர் - சூர் - சூரை = செந்நிறமுள்ள ஒருவகைக் பழம், சூரைப்பழம்.

சூர் - சூரி = வெப்பத்தால் உண்டாகும் நோய்.

சுள் - சூர் - சூர்த்தம் = சுருக்கம் சுள்ளென்பது சுருக்கம் என்ற பொருளையும் கொண்டது. சுள்ளி = சுருங்கிய கிளை.

சூர்த்து = சுருங்கி விரியும். தன்மை கொண்ட எருவாய், சூர்த்து - சூத்து என்றானது.

சூர்த்தை என்பது கனியாமல் சுருங்கிப் போனபழம் அது சொத்தை எனப்பட்டது.

சூர்த்து - சூத்து எனப்பட்டது போல், சூர்த்தம் -சொத்தை என்றானது போல்,

சூர்த்தர் - சூதர் எனப்பட்டனர்.

சூர்த்தர் = பெரும்பொருளைச் சுருக்கச்சொல்வோர்.

சூதர் = புகழ்ந்து பாடுவோர், பாணர், பாடகர், பாடலை எழுதுவோர், அறிவர்.

சூதர் என்ற தமிழ்ச்சொல், சூதா (Soota) என்று வடமொழி யில் திரிந்தது.

சூதா என்பவன், வியாசருடைய தலை மாணாக்கனாகச் சொல்லப்படுகின்றான்.

வடமொழியில் சொல்லப்பட்ட பதினெட்டு புராணங்களையும் வியாசரிடமிருந்து கேட்டறிந்து அதனை எழுதி வைத்தவன்.

வியாசன் என்பதே, வியல் என்ற தமிழ்ச் சொல்லின் வடமொழித் திரிபாகும்.

வியன் : விரிந்த, பரந்த, பெரிய, என்றவாறு, பொருள் கொள்ளப்படும்.

வியல் + ஆழன் என்ற தமிழ்ச் சொற்களே வியாழன் என்று நீண்டது

வியாழன்= விரிந்த பரந்த பெரியகோள்.

சூதம் என்பது சுருக்கம் என்ற பொருளில், சூத என்ற வடசொல், சுருக்கம் வளைவு என்ற பொருளையே தந்தது.

சூதம் = வளைந்து காணப்படும் புரியங்காய், வளைவான மூக்கைக் கொண்ட மாங்காய்.

மன்மதனின் கணைகளில் ஒன்றான, மாம்பூவால் தொடுக்கப்பட்ட கணை. வளைந்த முதுகைக் கொண்ட வண்டு.

சூதம் - சூது = நேரான வழியை விடுத்த வளைவான வழி அல்லது குறுக்குவழி. அது தீயவழி என்றும் கருதப்படும்.

சூது = உண்மை சுருங்கிப்போய், அது பொய்மையாகச் சிறுத்தது எனவும் கருதலாம்.

சூர் என்பது சுருக்கத்தைக் குறித்தது. மிக விரிந்த பொருள் கொண்ட ஒரு கொள்கையை அல்லது குழப்பமான ஒரு நிலையைச் சுருக்கித் திறம்பட உரைப்பது,

சூத்திறம் எனப்படும். சூர் + திறன் = சூர்த்திறன். ரகரம் வல்லினமாகச் சொல்லப்படல் வேண்டும்.

சூள் + திறன் + சூத்திறன். அறிவுடையோன், ஆற்றலுடையோன், தமிழன்.

சூள் திறன் கொண்ட தமிழன் சூத்திரன் (சூத்ர) எனப்பட்டான்.

சூத்திரன் என்பது ஆரியர்கள் கண்டுபிடித்தச் சொல் லன்று. அது ஆரியர்களுக்கு முன்பே தமிழகத்தில் வழக்கிலிருந்து சூத்திரன் என்ற சொல்லுக்குப் பொருளை அறியாத ஆரியர், தமிழர்களை இழிவுபடுத்துவதாக எண்ணிக் கொண்டு, சூத்ரா என்றனர். சுமேரிய நாட்டின் இலக்கியங்களை ஆய்வு செய்த மொழியியலார், அங்கு சூத்திரன் என்ற பொருளில் ஒரு மன்னன் ஆண்டுவந்ததாகக் கூறுகின்றனர். சூத்திரா (Sutra) என்ற அச்சொல்லுக்குப் பொருள் தெரியவில்லை யென்றும் கருதுகின்றனர்.

சூத பேதி, வாந்தி பேதி என்ற சொற்கள், வடசொற்கள் கலந்ததாக, இன்றும் வழக்கில் உள்ளன. பேதி என்ற வடசொல்,பெய்தல் அல்லது கொட்டுதல், வெளியேறுதல் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே. சூதம் என்பது எருவாய் வழியிலான கழிச்சல் என்றும், வாந்தி என்பது வாய்வழியிலான நீர் வெளியேற்றவும் எனவும் கொள்ளலாம்.

சூர்த்து =சூத்து சூதம் எனவும் உணரப்பட்டது.

சூதம் என்ற தமிழ்ச்சொல், சோதோம் (Sodom) என்று எபிறேய மொழியில் சொல்லப்பட்டு, அது எருவாயை (Anus)யே குறித்தது.

Sodomy என்ற ஓரினச் சேர்க்கை பற்றிய கிரேக்கச் சொல், சூத்து - சூதம் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே.

சோதோம் என்பது பண்டைக்காலத்தில், பாலத்தீனத்தில் இருந்த நகரமாகும். அங்கு வாழ்ந்திருந்த ஆண் மக்கள், சூதம் வழியே புணரும் ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டிருந்ததாகவும், அதனால் சினமுற்ற இறைவன் அந்நகரைத் தீக்கிரையாக்கிய தாகவும் விவிலியம் கூறுகிறது. சோதோம் நகரில் நடைபெற்ற ஓரினச் சேர்க்கை, பின்னர் அச்செயலுக்கான கிரேக்க, இலத்தீன் ஆங்கிலச் சொற்களாக மாறின.

மேற்கண்ட செய்திகளின் அடிப்படையில், சுள் என்ற தமிழ் வேர்ச் சொல்லிலிருந்தே சூதம், சூது, சூரி, சூரியன், சூத்து, சூத்திரன் போன்ற சொற்கள் விரிந்தன என அறியலாம்.

ooo

29

நாடகம்

தமிழ், இயல் - இசை - நாடகம் என முத்தமிழாக அறியப் பட்டது.

இயல்பாகத் தோன்றியதால் (Natural way) தமிழ், இயற் றமிழ் எனப்பட்டது. தமிழை யாரும் இயற்றிக் கொடுக்க வில்லை. மக்களின் பேசும் மொழியான தமிழ், பிற்காலத்தில் இலக்கிய இலக்கணமாகவும் வளர்ந்தது. இதனையே இயல் - தமிழ் என்றனர்.

இசை என்பது ஒலியென்றே கொள்ளப்படும். ஒலிக்கப் படும் ஒலியெல்லாம் இசையாவதில்லை.

இசையென்ற சொல்லுக்கு ஒலி, புகழ், சொல், மிடற்றால் பிறக்கும் இசை, நரம்பிற் பிறக்கும் இசை, பாட்டு என்றவாறு பொருள்விரியும்.

இசையில் ஏழு ஒலிகள் அடிப்படையானவை. இவ்வொலி கள் எவ்ாறு ஒலிக்கப்படவேண்டும் என்ற விதிகளுக்குப்பட் டவை. இசையென்பதே, வரன்முறைப்படுத்தப்பட்ட ஒலி எனலாம் இவை,

1. குரல், (the gilteral sound coming from the throat)
   - மிடற்றாற்குரல்.
2. துத்தம்.(the second tone modulated by the tongue)
   - நாவினாற்றுத்தம்.
3. கைக்கிளை. (the sound caused by the palate)
   - அண்ணத்தாற்கைக்கிளை.

4. உழை (the cerebral sound coming from the head) - சிரத்தாலுழை.

5. இளி. (sound from the forehead) - நெற்றியாலிளி.

6. விளரி. (the sound proceeds from the breast) - நெஞ்சால் விளரி.

7. தாரம் (the sound from the nose) - மூக்காற்றாரம்.

இவ்வாறு மேலும் விளக்கிக் கொண்டே செல்வலாம். சுருக்க மாக இசையென்பது குரல் மூலமாகவும் (Vocal), கருவிகள் மூலமாகவும் (Instruments) ஒலிக்கப்படும் விதிகளுக்குட்பட்ட ஒலியாகும்.

வாய்ப்பாட்டில் ஒலிக்கப்படும் பாடல்கள், இயற்றமிழின் பகுதிகளினின்றும் எடுக்கப்பட்டவைகளாகவோ, அன்றியோ இருக்கலாம். இசைவு பெற்ற (To join) ஒலிகளே இசை யெனப் படும்.

இசைத்தமிழ், தமிழகத்தில் சிறப்புற்றிருந்த செய்திகளை, சிலப்பதிகாரம் விரிவாக விளக்குகின்றது. அரங்கேற்றுக் காதையில் சொல்லப்பட்டுள்ள இசைபற்றிய ஆழமான செய்தி களுக்கு, இன்றுவரையிலும் கூட முழுமையான விளக்கங் களை எவராலும் கூற இயலவில்லை. நாடகம் என்ற சொல்லை இளங்கோவடிகள் பல இடங்களில் பயன்படுத்தியிருக்கிறார். நாட்டியம் என்ற சொல்லையும் ஆங்காங்கே கையாண்டுள்ளார்.

நாடக மேத்து நாடகக் கணிகையொ
டாடிய கொள்கையி னரும்பொருள் கேமுற – பதிகம், 15, 16.

கூத்து என்பது பழந்தமிழரால் அறியப்பட்ட கலையாகும். கூத்து என்ற சொல்லுக்கு நடனம், நாட்டியம், என்று பொது வான பொருள் அறியப்பட்டுள்ளது. ஆடல் அசைவுகளைக் கூட்டி வெளிப்படுத்துதலே கூத்து எனப்பட்டது. கூத்து என்ற சொல்லுக்கு, நடனம், நாடகம், விளையாட்டு, என்றும் பொருள் விரிக்கப்படுகின்றது. கூத்தை நிகழ்த்துபவன் கூத்தாடி எனப்பட்டான். கூத்தி என்பது பெண்பாற் சொல்லாகும்.

கூத்துக்கும் நாடகத்துக்கும் வேறுபாடு உண்டென சிலப்பதிகாரம் கூறுகிறது.

வரிக்கூத்து, வரிசாந்திக் கூத்து, சாந்திக்கூத்து, விநோதக் கூத்து, ஆரியக்கூத்து, தமிழ்க் கூத்து, இயல்புக்கூத்து, தேசிக் கூத்து என்று பல்வேறு பிரிவுகளை இலக்கியங்கள் சுட்டு கின்றன. ஒவ்வொரு கூத்திற்கும் பிரிவுகள் உள்ளன.

வரிக் கூத்தின் ஒருறுப்பாகக் குரவைக் கூத்து அறியப்படு கின்றது.

குதித்துக்குதித்து ஆடுவதே கூத்தென்று அறியப்பட்ட தாகவும் சிலர் உரைப்பர்.

..........................இன்பம்
எய்தியே குதித்த தாலே விழியுண்ணப் பிறந்த கூத்துத்தமிழே
– பாரதிதாசன்.

கூத்தென்பது கதையொன்றைச் சொல்லியோ அல்லது சொல் லாமலோ நடிக்கப்படுவது. ஆனால் நாடகமென்பது கதை தழுவிய கூத்தே ஆகும். ஆகவே நாடகமென்பதும் கூத்தினுள் அடங்கியதே.

நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம் – தொல்காப்பியம், பொருள், 999.

நாடகம் என்ற சொல்லைத் தொல்காப்பியர் பயன்டுத்தியுள் ளதைக் கண்ட பிற்காலத்தவர், நாடக (Nataka) என்ற வட மொழிச் சொல்லே, நாடகம் எனத் தமிழ்ப்படுத்தப்பட்ட தாகக் கூறினார்.

அக்காலத்தில் நாடகம் பொழுது போக்கிற்காக மட்டும் நடத்தப்படவில்லை. மக்களை நல்வழிப்படுத்தவும், சமயம் - கல்வி - இலக்கியம் தொடர்பான செய்திகளைக் கூறவும், மறை பொருளான வினாக்களைத் தொடுத்து, அவ்வினாக்களைக் பற்றி மக்களைச் சிந்திக்க வைத்து, அதற்கான விடையளித்தும், கல்விக் கூடம் செய்யும் பணி போல, இக்கலையை வளர்த் தனர். சமயம் தொடர்பான கற்பனைக் கதைகளின் நாற்றங் காலாக நாடக மேடைகள் திகழ்ந்தன. சங்க காலத்தில் பொது அரங்குகளில் நடைபெற்ற நாடகங்களில், இடைக்காலத்தில் கோயில்களிலும், பின்னர் தெருக்களிலும் நடித்துக் காட்டப் பெற்றன.

நாடகம் என்பது நாகரிகம் - பண்பாடு ஆகிய மிகப் சிறந்த குமுகாய முறையின் வெளிப்பாடுகள் ஆகும். தொல்காப்பியர் வாழ்ந்த காலமான கி. மு. 750 ஆண்டுகளில், ஆரியர்கள், இலக்கியம், நாடகம் போன்ற துறைகளில் ஈடுபடவுமில்லை. அவர்களின் வாழ்க்கை முறைகளும் அதற்கு இடம்தரவில்லை. ஆரியன் ஒருவன் நாடகத்தில் பங்கேற்பதை, கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் அறியப்பட்ட மனுநீதி நூல் தடைசெய்கிறது. சுருங்கச் சொல்லவேண்டுமெனில், நாடகம் போன்ற கலைத் துறைகள் (இசை நடனம் உள்ளிட்ட) ஆரியர்களின் வாழ்க்கை முறைமைக்கு ஏற்புடையதாயிருந்ததில்லை என்பதால், நாடகம் என்ற சொல்லை ஆரியர்களே அறிமுகம் செய்தனர் என்று கூறுவதும் தவறான சிந்தனையாகும்.

தொல்காப்பியர் காலத்துக்கு முன்பே, தமிழகத்தில் நாடகக் கலை வளர்ச்சியுற்றிருந்தது. இளங்கோவடிகள் கூறும் நாடக - இசைக்கலையின் நுணுக்கங்கள், பலவாயிரம் ஆண்டு காலத்தமிழ் மரபுகளின் வெளிப்பாடுகளே எனலாம். நாடகம் என்பது, நடிப்பும் பாட்டும் கலந்தவொன்றாதலால், பாடல் களே அன்றைய நாடகத்தின் வசனங்களாயிருந்தன. அதன் தொடர்ச்சிகளாக இன்றும் அறியப்படும் வாசகப்பா என்ற பாட்டு நாடகம் நடிக்கப்படுவதைக் காணலாம்.

வாசகம் என்பதும் வடசொல்லேயென்றும் (Vasaka = word), அது வசனத்தையே குறித்தது என்றும் சொல்லப்பட்டது. வாசகம் என்பது சொல்லே (Word) என்றும், அது பாடலைக் குறிக்காது என்றும் சொல்லப்பட்டதும் தவறான சிந்தனை யாகும். சொல்லப்படுவதுபோல் செய்யப்படல்வேண்டும் என்பதே அறிவுரையாகும். வாசகம் என்ற சொல்லின், வாய் + செய் என்ற இரு சொற்கள் மறைந்துள்ளன. வாசக என்ற வடசொல், வாய்ச்செய் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே. வாய் = நன்மொழி. செய்: அதன்வழி நடத்தல். இதில் வசனம் என்ற பொருள் உள்ளதாகக் கூறப்படுவதும் தவறான சிந்தனையே வாசகம் என்பது, வாசக என்ற வடசொல்லைத் தமிழ்ப்படுத் தியதே வாசகம். பிற்காலத்தில் வசனமாயிற்று.

வாசகப்பா: பாடல் வழியில் நடிக்கப்படும் நாடகம். இன்றும் இச்சொல் வழக்கிலுள்ளது. வாசகப்பா என்ற பாட்டு நாடகமும் இன்றும் தமிழகத்தில் நடைபெற்று வருகின்றது.

நாடகம் என்ற தமிழ்ச்சொல், மூலத்தமிழ் சொல்லே. ஏனெனில், நாடு + அகம் = நாடகம் என்றவாறு அச்சொல் பிரியும்.

அகம் என்ற சொல்லுக்கு இலக்கியங்கள் கூறும் பொருளைவிட, ஆழமான பொருளும் உள்ளது.

அகம் என்பது, முதற்பொருள் - கருப்பொருள் - உரிப் பொருள் எனவிரியும்.

அகம் என்பது உள்ளம் - உணர்வு தொடர்பான செய்தி களைச் சொல்வதாகும். இதனை அகத்து + இயல் = அகத்தியம் என்றும் கூறுலாம். மாந்தன் - விலங்கு - இயற்கை இவற்றோடு தொடர்புடைய உளவியல் (Psychological) தொடர்பான செய்தி களை விளக்குவதே, அகத்தியம் ஆகும். இவைகளைக் குறித்து விரிவாக எழுதியவன் அகத்தியன் எனப்பட்டான். தொல்காப் பியன் போல் அகத்தியன் என்பதும் குறிப்புப் பெயரே எனலாம். ஆழமான கருத்துக்களை உள்ளடக்கியதால், அகத்தியத்தை எழுதிய அகத்தியன் குள்ளமானவனாக உருவகம் செய்யப் பட்டான். அகத்தியம் தமிழ்ச்சொல்லாகவேயுள்ளதால், அகத்தியனும் தமிழனே எனலாம். அவனை ஆரியனாகத் திரித்துக் கூறிவிட்டனர்.

முதற்பொருள்: நிலத்தைப் பற்றியும் நிலத்தின் தன்மைகள் பற்றியும் கூறப்படுவது. மேலும் வானவியல் தொடர்பான காலம், அதனைப் பகுக்கும் முறைகள் பற்றியும் அறியக்கிடக்கின்றன.

கருப்பொருள்: நிலற்திற்கேற்ற கடவுளர்கள்,நிலத்தை ஆளும் தலைவர்கள், அறிவுடையோர், உழைக்கும் மக்கள், பறவைகள், விலங்குகள், ஊர், நாடு, நகரம், நீர், பூக்கள், மரங்கள், உணவு வகைகள், முரசுக்கருவிகள், யாழ்போன்ற நரம்புக் கருவிகள், பாணர்கள், நிலம் சார்ந்த தொழில்கள் என விரியும்.

உரிப்பொருள்: காதல் தொடர்புடைய சேர்தல் அல்லது புணர்தல், பிரிதல் தனிமையில் வாடுதல், ஊடல், இரங்கல் என விரியும்.

புணர்தல் - குறிஞ்சி, பிரிதல் -பாலை, இருத்தல் - முல்லை, ஊடல் - மருதம் இரங்கல் - நெய்தல் என, நிலங்கள் வாரியாக அறியப்படும்.

மேற்கண்ட செய்திகள் அனைத்தையும் அடக்கிய சொல்லே அகம் எனப்படும். ஒரு நாடகத்தின் கருவும், அக்கருவை விரிவு படுத்திய கதையும், மேற்கண்டவைகளிலிருந்தே எடுக்கப்பட்டன.

அகப்பொருளை நாடி, அதனை மையமாகவைத்து நடிக்கப் பட்டதே நாடகம் ஆகும். நடித்தல், நடிப்பு, நடனம், நடை, நடம், நடப்பு நடவை, போன்ற இன்னும் பிற சொற்கள் யாவும் நாடு என்ற மூலச் சொல்லினின்றும் பிறந்தவைகளே.

நாடு + அகம் = நாடகம் எனப்பட்டது. நாடகம் - நாடகா (Nataka) என்று வட பொழியில் திரிந்தது. நாடகம் தமிழ்ச் சொல்லே.

நாடகம் பத்து வகைப்படும் என்றவாறு சொல்லப் பட்டது பிற்காலத்திலேயே எனலாம்.

1.வாரம், 2.யாமிருகம், 3.அரட்டு, 4.சமுஸ்காரம்,5.பாணம், 6.வீதி, 7.சல்லாபம், 8. உத்திரட்டாங்கம், 9. வீராகணம், 10. வியா யோகம்.

இவையாவும் தமிழின் வடமொழித் திரிபுச் சொற்களே.

அதுபோல் நாட்டியமும் பத்துவகைப்படும்.

1.செறிவு, 2.தெளிவு, 3.சமநிலை, 4. இன்பம், 5. ஒழுகிசை, 6. உதாரம், 7. உய்த்தலில் பொருண்மை, 8. காந்தம், 9. வலி, 10. சமாதி.

நாடகத்தில் நடிக்கும் பெண்டிரை, கணிகை என்றும், கூத்தி என்றும் அழைத்தனர். ஆடவரை, கூத்தாடி கூத்தன் என்றவாறு அழைத்தனர்.

ooo

30

நிமித்திகன்

தொன்மைக் காலத் தமிழகத்தில் கணியர் என்ற வான வியலார், விண்மீன்கள் - கோள்கள் ஆகியவற்றின் நகர்ச்சிகளைக் கண்காணித்து, வானவியல் என்ற அறிவுத்துறையை உருவாக்கினர். அவ்வுண்மைகள், நம்பிக்கைகளின் அடிப்படையில் இல்லாமல், மெய்ப்பிக்கப்பட்ட செய்திகளாயிருந்தன. அக்கணியர்களை அறிவர் - மேதை - கணக்கர் - வள்ளுவர் - பார்ப்பார் - ஐயர் போன்ற அடைமொழிகளால் அழைத்தனர். இவ்வடைமொழிப் பெயர்கள் யாவும் அக்கணியர் மேற்கொண்டிருந்த பணிகளைச் சுட்டுவனவே. அவைகளின் நிமித்திகன் என்ற பிரிவும் தமிழகத்தில் இருந்தது.

தொன்மைக்கால வானவியலின் தந்தையர் என்று போற்றப்படும் கணியர்களில் பெரும்பாலானோர், கடவுள் மறுப்புக் கொள்கையைக் கொண்டிருந்தாலும், பார்ப்பார் - ஐயர் போன்ற பிரிவினர் தெய்வ நம்பிக்கையுடையவராய்த் திகழ்ந்தனர். பழங்காலத் தமிழகத்தில் ஆத்திகம் - நாத்திகம் என்ற இரு கொள்கைகளும் பின்பற்றப்பட்டுவந்தன. இச்சொற்களை, ஆத்தீயம் - நாத்தீயம் என்று அழைப்பது சிறப்பானதாயிருக்கும்.

ஆ என்பதற்குத் தொடக்கம் என்பது பொருளாகும். தீயென்பதே, தேவன் - தெய்வம் என்ற சொற்களுக்கான மூலச்சொல்லாகுமென பாவாணர் குறிப்பிடுகிறார்.

ஆத்தீயம் = இவ்வுலகை தோற்றுவித்த கடவுள் பற்றிய கொள்கை எனவிரியும்.

நாத்தீயம் = தீயம் என்ற கடவுட்கொள்கையை, மறுத்தவர்கள் மற்றும் எதிர்ப்பாளர்கள்.

நா என்ற சொல்லுக்கு நாக்கு என்பது மட்டும் பொருளன்று. நாவில் வழிவந்த சொல், பேச்சு, கருத்து, அறிவு எனவும் விரியும். தீயத்தை மறுத்துச் சொன்னவர்கள் நாத்தீயர் எனப்பட்டனர்.

ஆத்தீ என்ற சொல் சிவனைக் குறித்ததாகும். ஆ = தொடக்கம்; தீ = கடவுள். சிவந்த கடவுள், சிவன், சிவனுக்குப் படைக்கப்பட்டு மலரும் ஆத்தீ என்றே சொல்லப்பட்டு பிற்காலத்தில் ஆத்தி எனப்பட்டது. சிவனுக்கு ஆத்திச் சூடி என்ற பெயரும் உள்ளதை நோக்குக.

சிவன் சிவந்த நிறம் கொண்டவன் என்பது பற்றியே, சினத்தைக் குறிக்கும் ஆத்திரம் என்ற தெலுங்குச்சொல், சிவப்புடன் தொடர்பு கொண்டது.

ஆத்துமா என்ற வடசொல்லும், ஆத்தீமம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே.

கணியர்களில் பக்குடுக்கையார், பூங்குன்றன் போன்றோர் கடவுள் மறுப்புக்கொள்கையைக் கொண்டிருந்தோரில் சிலராவர். ஐயர், பார்ப்பார், அந்தணர் போன்ற தமிழ்ச் சொற்கள், ஆரியர்கள் தமிழகம் வருமுன்பே, தமிழ்க்கணியர்களுக்கு வழங்கப்பட்ட பெயர்களாகும். பார்ப்பார் என்போர், நாள் கோள் பார்த்து, நன்மை தீமைகளை மக்களுக்குச் சொல்லும் தொழிலைச் செய்தவராவர். பார் (See) என்ற மூலச்சொல், நாள் கோள்களை உன்னிப் பார்த்தல் என்றவாறு, பார்ப்பார் என விரிந்தது. பார்ப்பவன் பார்ப்பான் எனப்பட்டான். (Seer) பார்ப்பான் என்ற தமிழ்ப்பட்டத்தைப் பின்னர் வந்த ஆரியர் தமதாக்கிக் கொண்டனர். பார்ப்பாரில் ஒரு பிரிவினை நிமித்திகர் என அழைத்தனர்.

நீ என்ற ஒரெழுத்துத் தமிழ்ச்சொல்லுக்கு, நீட்சி - நீளம் - நீண்ட - என்ற பொருளுண்டு.

நீ என்ற எழுத்தில் தொடங்கும் சொற்களும் அவ்வாறே அமைந்துள்ளன.

நீள், நீடு, நீந்து, நீட்டு, நீர், என விரியும்.

நீ + அம் = நீண்ட கதிர்களையுடைய கதிரவனின் அழகிய ஒளி.

நீயம் - நீமம் என்றும் சொல்லப்பட்டது. நீமம் = ஒளி, கதிரவன்.

நீமம் - நிமி: கதிரவனின் குலத்தில் தோன்றிய மன்னன் நிமிச்சக்கரவர்த்தி.

நிமி - நிமிர்: உயர்வு, பெருமை, நீட்சி, நிமிர்வு.

நிமை = கண்ணின் மூடி (Eyelid) நிலை என்பது ஒளியுடன் தொடர்புடைய கண்ணின் மூடியாகச் சொல்லப்பட்டு, பிற்காலத்தில் இமை என்று அறியப்பட்டது.

நிமை = ஒளியுடைய கண்ணின் மூடி

நிம்ம = வேப்பமரம். வேப்பெண்ணையே தொடக்கத்தில் தீப்பந்தங்களுக்குப் பயன்படுத்தப்பட்டது. நிம் என்ற தமிழ்ச் சொல்லே நீம் (Neem) என்று ஆங்கிலத்தில் திரிந்தது.

நிம்மத் தார் மார்பன்: வேப்ப மாலையைச் சூடிய பாண்டியன்.

நீமம் - நிமி - நிமை எனவும் விரிந்தது. நிமை = கண்ணின் மூடி.

கண் மூடித்திறக்கும் நேரம் நிமையம் என்றும் சொல்லப் பட்டது. அது நிமிஷ (Nimisha) என்று வடமொழியில் திரிந்தது. நிமிஷ என்பதே மூலச் சொல்லெனத் தவறாகக் கருதியவர்கள், அச்சொல்லை, நிமிடம் என்று சொல்லிவைத்தனர்.

நிமிடம் என்பதை விட, நிமையம் என்பதே மூலத்தமிழ்ச் சொல்லாகும்.

கண் மூடித்திறக்கும் நேரம், கால அளவில் மிகச் சிறிய அளவாகக்கருதப்படுகின்றது.

நிமையம் என்பது காலத்தைக் குறித்தச் சொல்லாதலால், நாள்கோள் பார்த்துக் காலத்தைக் கணிப்பவன், நிமித்திகன் எனப்பட்டன்.

நிமை - நிமி - நிமித்திகம் - நிமித்திகன் என்றானது நீமம் என்ற சொல், கதிரவன், ஒளி, விண்மீன்கள் ஆகியவற்றோடும்

தொடர்புள்ளதை நோக்கும் போது, நிமித்திகன் என்பது தமிழ்ச் சொல்லே என்பது தெளிவு.

தொல் தமிழ் மன்னர்களின் உள்வட்டத்தில் நெருங்கியிருந்தோர், 1. அந்தணர் என்ற அறிவுரை கூறும் அமைச்சர்; இப்பதவியை ஆரியர்கள் பிற்காலத்தில் பறித்துக்கொண்டு, தங்களையே அந்தணர்களாக அறிவித்துக்கொண்டனர். 2. மடையர் என்ற சமையற்காரர். 3. மருத்துவர், 4. நிமித்திகர், மற்றும் 5. மன்னரின் நண்பர், எனப்பட்டனர்.

நிமித்திகர் என்போர், மன்னனுக்கு எதிர்காலம் பற்றிய செய்திகளைக் கூறும் பணிகளைச் செய்து வந்தனர். நிமித்திகர் வள்ளுவர் என்ற தமிழ் மரபைச் சார்ந்தவர்களே.

ooo

31

மாராயம்

மாராயம் என்ற சொல், வணிகர்களோடு தொடர்புடைய சொல்லாக அறியப்படுகின்றது. இது சமற்கிருதத்தினின்றும் பிராகிருத மொழியில் திரிபுபட்டு, பிராகிருதத்தினின்றும் தமிழுக்கு வந்ததாக அறிவித்துள்ளனர். செம்மைப் படுத்தப் பட்ட மொழியை சமற்கிருதம் என அறியப்பட்ட நிலையில் செம்மைப்படுத்தப்படாத கொச்சை மொழியை, அது எதுவாக இருந்தாலும் அதனை பிராகிருதம் என வடமொழியில் கூறுவர். பிராகிருதம் (Prakruta) என்ற சொல்லைப் பாகதம் என்றும் தமிழ்ப்படுத்தினர். குறி என்ற தமிழ்ச்சொல், வரிவடிவத்தை (letters)க் குறித்துப் பொதுவாகச் சொல்லப்பட்டாலும், அது மொழியையும் குறித்து அக்காலத்தில் சொல்லப்பட்டது. செம்மையான மொழி எனப்பதே, செம்மைக்குறி - சம்க்ரு (Sam - kru) எனப்பட்டது. குறி - குறிப்பு: ஒரு பொருளைப் பற்றி சொல்லப்பட்ட அல்லது எழுதப்பட்ட விளக்கம். குறிப்பு: செய்தி, பொழிப்பு (Summary), எண்ணம், எதிர்பார்ப்பு, என விரியும், வராக்குறி: பேச்சுவடிவிலும் எழுத்துவடிவிலும் வராத, கொச்சையான மொழி. வகரம் பகரமாகத்திரிந்து, வரா என்பது பிரா -ப்ரா என வடமொழியில் திரிந்தது. செம்மைக்குறி = சம்ஸ்க்ருத - செம்மை மொழி (Refined language)

வராக்குறி = பராக்ருத - வராக்குறி (Language in Vulgar tongue of any country)

பிராகிருதம் என்று சொல்லப்படும் மொழி, தமிழ் மொழியே என்றும், அது கொச்சையான திரிபுபட்ட நிலையே என்றும் அறியலாம். ஆந்திரப் பகுதியில் அரசாண்ட சாதவாகனர்

என்ற மன்னர் மரபு, பிராகிருத மொழியில் சிலகுறிப்புகளை வெளியிட்டுள்ளது. சாதவாகன என்பதற்கு, நூறு வகையான குதிரை, காளை, யானை போன்ற விலங்குகளால் பூட்டப் பெற்ற வண்டிகள் (Vehicles or a conveyance of any kind) என்பதே பொருளாகும்.

பிராகிருத மொழி யென்பது தமிழேயென்றும், அது சமற்கிருதத்துடன் கலந்து காணப்பட்டதாகவும், பிராகிருதம் எழுதப்பட்டதும் தமிழ் எழுத்துக்களாலேயே என்றும், டாக்டர் மதிவாணன் கூறுகிறார். (The Prakrit language spoken by the Satavahanas was itself a dilect of the Dravidian vernacular interladed by Indo Aryan vocabulary - Indus script, p. 50)

கொச்சைத் தமிழான பிராகிருதத்தில் சொல்லப்பட்ட மாராயம் என்ற சொல், தமிழ்ச் சொல்லே என அறியலாம். பிராகிருத மொழியில் குறிப்பிட்டுச் சொல்லப்படும் பழைய நூல்களோ இலக்கியங்களோ எவையும் காணப்படவில்லை யென்பதும் தெளிவு.

மாராயம் என்ற சொல், வணிகர்களோடு தொடர்புடைய தமிழ்ச்சொல்லாகும். செட்டி என்பது வணிகர்களுக்கு அளிக்கப் பட்ட ஒரு விருது என்பதைப்போல, மாராயம் என்பதும் ஒரு விருதே எனலாம். எட்டி என்ற சொல்லினின்றே செட்டி என்ற சொல் நீண்டதாகக் கூறுவர். எண்திசைக்கும் சென்றுவந்த வணிகர்கள், எட்டு - எட்டி என்றவாறு சொல்லப்பட்டனர் என்று கருத இடமுண்டு.

எட்டி என்ற விருதை வணிகர்கள் மட்டுமே பெற்றனர். என்பதும் அறியக்கிடக்கின்றது. வைசியர் என்று மூன்றாம் சாதியினராகக் கருதப்பட்ட எட்டியர், தமிழர் வரலாற்றில் மூன்றாம் சாதியாகக் கருதப்படவில்லை. வில்சேயர் என்ற தமிழ்ச்சொல்லே, வைசிய என்று திரிபுபட்டிருக்க வேண்டும்.

வில்சேய - விசேய - விசிய - வைசிய = வணிகன்.

வில் = விற்பது, விற்பனை என்ற வாறு விரியும்.

சேய் = தொலைவில் சென்று விற்பது. வெளிநாடுகளுக்குச் செல்வது

எட்டிப் பூப்பெற் றிருமுப் பதிற்றியாண்
டொட்டிய செல்வத் துயர்ந்தோ னாயினன்

– மணிமேகலை, 2: 115. 116.

எட்டி குமர னினிதி னியக்கு
மின்னொலி வீணைப் பண்ணொலி வெரீஇ

– பெருங்கதை, 1.40: 116 – 117

எட்டி காவிதிப் பட்டந் தாங்கி – பெருங்கதை, 2:3: 104.

எட்டி சாயல னிருந்தோன் றானது. – சிலப்பதிகாரம், 15: 163.

எட்டி காவிதி யென்பன
தேய வழக்காகிய சிறப்புப் பெயர் – நச்சினார்க்கினியர் உரை
(தொல். தொகை. சூத். 12)

எல்லா மரபுகளும் தங்களுக்கான கற்பனைக் கதைகளைக் கூறுவதைப்போன்று, செட்டிப்பெருங்குடி மக்களும் தங்கள் இனத்துக்கான பல கதைகளைக் கூறிவருகின்றனர். தொல் தமிழகத்தில், பண்ணியர் - பணியர் என்று அழைக்கப்பட்ட இவ்வணிக மரபு, ஆரிய கலப்புக்குப் பிறகு வணிகர் என்று அழைக்கப்பட்டனர். பணி - பவணி என்றானது. பணி என்பதை வடசொல்லென மயங்கிய தமிழர், பணியரை வணியராக்கினர். வைசியர் என்ற சொல், செட்டிகளுக்குப் பிற்கால ஆரியப் பெயரே என்பது தெளிவு. பணிகளுக்கு அக்காலத்தில் செல்வாக்கு மிகுந்திருந்தது. கி.மு. 3000 ஆண்டுகட்கு முன்பே தமிழ்ப் பணியர்கள், நடுத்தரைக் கடல் நாடுகளுடனும், கிழக்கே சீனம் போன்ற நாடுகளுடனும் பண்ணியம் செய்துவந்தனர் இந்த தமிழ்ப் பண்ணியரின் ஒரு பிரிவினரே போணீசியர் எனப் பட்டனர்.

நாக நாட்டிலிருந்து தாங்கள் வந்ததாகக் கூறும் செட்டிகள், நாகநாடு என்பது, நாகரிகம் சிறப்புற்றிருந்த தமிழ் நாட்டின் ஒரு பகுதியே என அறியலாம். நாகர் என்பார் தமிழரே. மணிமேகலை கூறும் நாகர்கள், புத்த சமயத்தைப் போற்றுவதற்காக நாகரிக மற்றவர்களாயிருந்தனர் என்றும், புத்த சமயத்தில் சேர்ந்தபின் நாகரிக மக்களாயினர் என்றும் விளக்கப் படுவது பொய்ச் செய்தியே. நகர் என்பது ஆற்றைக் குறித்த பழந்தமிழ்ச் சொல்லாகும். நகர்க்கரைகளில் அமைந்திருந்த

ஊர் நகர் என்றும், பிற்காலத்தில் நகரம் என்றும் சொல்லப் பட்டன. நகரில் வாழ்ந்திருந்தோரின் உயர்ந்த வாழ்க்கை முறையே நாகரிகம் எனப்பட்டது. மேலும் விளக்கங்களுக்கு, ஆசிரியரின் எபிறேயத்தின் தாய்மொழி தமிழே என்ற நூலைக் காண்க.

நாக நாட்டிலிருந்து காஞ்சி மாநகருக்கு வந்ததாகவும், சோழன் மனுநீதியின் வேண்டுகோளுக்கிணங்க காவிரிப்பூம் பட்டிணத்தில் குடியேறிதாகவும் அங்கு அவர்தம் குலப்பெண் ணொருத்திக்கு இழைக்கப்பட்ட கொடுமையைக் கருத்தில் கொண்டு, பாண்டிய நாட்டுக்கு வந்து சேர்ந்ததாகவும் கதை யொன்றுண்டு. வாழ்நாள் முழுதும் கடலிலேயே வாழ்ந்திருந்த செட்டியர், பல்வேறு கடலழிவுகளைக் கண்டு அஞ்சி, நீரே இல்லாத மேட்டு நிலத்தில் குடி யேறினர் என்ற செய்தியுமுண்டு.

பூம்புகார் நகரத்தில் வாழ்ந்திருந்ததால், அவர்கள் நகரத் தார் என்று அழைக்கப்பட்டதாகக் கூறுவர். செட்டியரின் வீடுகள் ஒவ்வொன்றும் அரண்மனைபோன்றும், கோட்டைக் கொத்தளங்களுடன் அமைக்கப்பட்டிருந்ததால், நாட்டுப்புறங் களில் குடியேறிவர்களை, நாட்டுக் கோட்டைச் செட்டிமார் என அழைத்ததாகக் கூறுவர். நகரத்திலும் நாட்டிலும் வாழ்ந் திருந்தோர், தங்களுக்கென தனிநாடு ஒன்றையும் ஏற்படுத்திக் கொண்டு, 96 ஊர்களை உள்ளடக்கி, அப்பகுதியைச் செட்டி நாடு என அழைத்ததாகவும் கூறுவர்.

கதைகள் எப்படியிருப்பினும், தமிழனின் புகழை உலக ளாவிப் பரப்பியவர்கள் இந்தச் செட்டிமார்களே என்பதும், கி.மு. 3000 ஆண்டுகட்கு முன்னரே கடலோடும் கலையை இவ்வுலகுக்குக் கற்றுத்தந்தவர்கள் செட்டியார்களே என்பதும், தமிழர் மரபுகளின், தமக்கு ஒப்பாருமிக்காருமில்லாத உயர்ந்த செல்வாக்கில் வாழ்ந்திருந்தவர்கள் செட்டிமார்களே என்பதும், மிகையானச் செய்திகள் எனக் கூறவியலாது.

அக்காலத்து மன்னர்களின் வருவாயின் பெரும் பகுதியை ஈட்டித்தந்தவர்கள் வணிகர்களே. பூம்புகார், முசிறி போன்ற துறைமுகங்கள், கிழக்கிலும் மேற்கிலும் பன்னாட்டு வணிகத்தில் சிறப்புற்றிருந்தன. தொடக்கத்தில் நகரத்தார் என்று அறியப்

பட்ட வணிகக் குழு பிற்காலத்தில் பல்வேறு குழுக்களையும் இத்தொழிலில் ஈடுபட உதவியது. இடைக்காலச் சோழர்கள் காலத்தில், மணிகிராமம், திசையாயிரத்து ஐநூற்றுவர், நானா தேசிகர், அஞ்சுவண்ணம் போன்ற வணிகக் குழுவினருடன், மேலைநாட்டுக் குழுக்களும் இணைந்து வணிகத்தில் ஈடு பட்டன. தென்கிழக்கு ஆசிய நாடுகளில், தமிழ் வணிகர்களுக்கு இடையூறுகளைத் தந்த, ஸ்ரீ விசய அரசின் மீது, இராசேந்திர சோழன் படையெடுத்துச் சென்றதை வரலாறு கூறுகிறது.

தொல்தமிழகத்தில் இவ்வணிகர்களில் தலைசிறந்து விளங் கியவர்களுக்கு, செட்டி என்ற விருது வழங்கப்பட்டது. செட்டி என்ற சொல், எட்டி என்பதின் திரிபே எனக் கூறப்பட்டாலும், இரண்டும் சேர்த்தே வழங்கப்பட்டிருக்க வாய்ப்புகளுண்டு. இவற்றுடன் மாராயம் என்ற பட்டமும் வணிகர்களுக்கு வழங்கப்பட்டதாகத் தொல்காப்பியம் கூறுகிறது. மாராயம் என்பது தமிழ்ச்சொல் அல்லவென்றும், அது வடமொழி வழியே வந்த பிராகிருதச் சொல்லே என்றும் வையாபுரிப்பிள்ளை கூறினார். மாராயம் என்பது மன்னர்களால் அளிக்கப்பட்ட பட்டம் என்ற பொருளில் அறிதலே சிறப்பானது. மாராயம் என்பது வணிகர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்ட பட்டமன்று. அதுவொரு பொதுவான சொல் என்பதே பொருத்தமானதாகும்.

மன்னன் அளித்த பட்டங்களுள் ஏனாதி என்பதும் ஒன்று, படைத்தலைவர்களுக்கு ஏனாதி என்ற பட்டம் வழங்கப்பட்ட தாக தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

சோழிக வேனாதி தன்முக நோக்கி — மணிமேகலை, 22: 205.

ஏனாதி என்ற விருதுடன் கணையாழி ஒன்றினையும் மன்னன் அணிவித்தான் என அறியலாம்.

ஏனாதி மோதிரஞ் செறிந்த சேனபதி — சீவகசிந்தாமணி, 2167.

நச்சினார்க்கினியரின் உரை, மோதிரம் பற்றிய விளக்கத்தை யளித்துள்ளது.

மாராயம் என்பது பட்டமே என்பதை, நச்சினார்க்கினி யரின் உரை மேலும் விளக்குகிறது.

மாரயம் பெற்ற நெடுமொழி யானும் — தொல். புற, சூத். 8

போர்க்கட லாற்றும் புரவித்தேர்ப் பல்படைக்குக்
கார்க்கடல் பெற்ற கரையன்றோ – போர்க்கெல்லாம்
தானாதி யாகிய தார்வேந்தன் மோதிரஞ்சே
ரேனாதிப் பட்டத் திவன்

என நச்சினார்க்கினியர் தரும் விளக்கத்தையும் காண்க.

மாராயம் என்ற தமிழ்ச் சொல், மார் என்ற முன்னொட்டுச் சொல்லைக்கொண்டது.

மார் + ஆய் = மாராய்தல், மார்பில் அணிவித்தல் அல்லது சூட்டுதல்.

மாராயப்படுவது, மாராயம் எனப்பட்டது.

பட்டமளிப்பது என்பது, மார்பின் ஆரமாகவோ, பட்டயமாகவோ அணிவிக்கப்படலாம் என்ற பொருளில், மாராயம் என்பது மார்பில் அணிவிக்கப்படும் பட்டமே என்க

மாராயம் என்ற சொல்லுக்கு மற்றொரு பொருளும் உண்டு.

மாராயம் என்பது, பெண்கள், பூப்பெய்திய நிகழ்வினைக் குறித்த சொல்லுமாகும். பூப்பெய்திய பெண்கள், மார்பில் அணியும் துணி மாராப்பு எனப்படும். பூப்பெய்தியது முதல் மார்பை மறைக்கும் துணி அணியப்படுதல் மரபாகும். அம் மரபினை யொட்டி, பூப்பெய்தியசெய்தி, நற்செய்தியாக உணரப் பட்டது. அதனால் மாராயம் என்ற சொல்லுக்கே நற்செய்தி என்ற பொருளும் வந்தது.

பூப்பெய்திய நிகழ்வை உறவினர்களுக்கு, உடைவெளுக்கும் தொழிலாளியும் அவனது மனைவியும் அறிவிப்பது வழக்கம். இந்நற்செய்தியை அறிவித்தலுக்கு மாராயர் சொல்லுதல் என்பர். மார்பில் துணியுடுத்தி மறைப்பது, பூப்பெய்துதலை உணர்த்து வதால், மார்புடன் தொடர்புடைய நிகழ்வு, மாராயம் எனப் பட்டது. அது நல்ல செய்தியாதலால், நற்செய்திக்கும் மாராயம் என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டது.

○○○

சொற்பட்டியல் (ஆங்கிலம்)

Sergi Tokarev
Muslim
British
Phoenician
Bible
Tholkappiyam
Dr. S. Ilakkuvanar
Hittite
Macedonia
Helladic
Remedello
Lake dwellers
Horgen
Almerian
Michelsberg
Bodrog Kereztur
Dune and steppe
Kuban and Terek
Pani
Yavan
Aryans
Heth
Ketha
Hatti
Yapet
Esau

Hebrew
Akkadian
Aramaic
Refined language
Vedic
Brahmanic
Hindu
India
Mohenjo - daro
Yeesua
Jesus
Prakrit
Satavahanas
Greek
Joshua
Iesus
English
Mary
Upama
Upameya
Ura
Hydra
Aladdin
Dasan
Yuda
Booth

Teacher
Rupa
Arupa
Fog
Figure
Rua
Himalaya
Minutus
Alapana
Auta
Karana
Karya
Hethu
Amruta
Lok
Venus
Libra
Ullasa
Olam
Akgna
Hump
Lakshya
Lakshana
Lunka
Kaya
Qasu
Coin
Memecylon tinetorrium
Hajji
Asafoetida

pepper
Onion
Mustard
Smith
Cain
Tubal cain
Twashta
Celestials
Amara
Babylon
Assyria
Syria
Canaan
Sidon
Byblos
Tyre
Ashkelon
Jerusalem
Gezer
Kapi
Capricorn
Cape
Gypsy
Choorna
Mal - aria
Zero
soota
Nataka
Vulgar

ooo

சொற்பட்டியல்

ஆரியர்
திராவிடர்
இராக்கதர்
அசுரர்
சூத்திரர்
சமற்கிருதம்
வர்ணாசிரமம்
தேவசாதி
ஆங்கிலேயர்
பிராமணசமயம்
பிராமணர்கள்
கடற்பயணம்
தொல்காப்பியர்
தொல்காப்பியம்
அகத்தியர்
அகத்தியம்
காசுமீரன்
ஐந்திரம்
செம்மைக் குறுமொழி
ஃபோனீசியர்
சுமேரியர்
பிரம்மா
பிராமி
“பெருமைக்குறியீடு
வையாபுரிப்பிள்ளை
சாமிநாதைய்யர்
பாவாணர்
யூதர்கள்
யாகோவா
தமிழ் வரலாறு
தமிழர் வராறு
மறிய ஆரோக்கியம்
எபிரேயம்
திலகர்
ஆர்யா
கிரேக்கம்
செர்மனி
பால்டிக்
மேலை ஆரியம்
இத்தியர்
தூன் - ஸ்டெப்பி
எஸ். ஆர். இராவ்
பணிகர்
வணிகர்
பண்ணியர்
மணிமேகலை
சாத்தனார்
பணியா
சேட்டு
செட்டி
மெசபத்தோமியா
பராசீக வளைகுடா

பாபிலோன்
விவிலியம்
நோவா
யா - பெத்
யாவன்
யவனர்
ஈத்
அபிறகாம்
ஈசா
அரபு
அக்காடியம்
செமிட்டிக்
எகிப்து
எத்தியோப்பியம்
படன்அறம்
அறமாயிக்
மாக்ஸ் முல்லர்
இராமாயணம்
மகாபாரதம்
வேதங்கள்
புராணங்கள்
வேதகாலம்
பஞ்சாப்
இரிக்கு வேதம்
ஐந்திரப் பள்ளிகள்
கண்ணுவன்
அங்கிரன்
சுநகன்
விசுவாமித்திரன்
அத்திரி
வசிட்டன்
காயவன்

பதர்யாசுவன்
சமதக்கினி
மதுச்சந்தன்
சேதா
மேதாதிதி
கோரன்
அங்கிரசன்
செவ்வியன்
கோதமன்
சிவத்தியாநாநந்த மஹர்ஷி
ரிக்வேத ஸம்ஹிதை
விரித்திரன்
இந்திரன்
குருவிக்கரம்பை வேலு
கம்பன்
நான்மறைகள்
மொகஞ்சதாரோ
இயற்சொல்
திரிசொல்
திசைச்சொல்
வடசொல்
உலட்டி
உலொட்டி
ரேவு
இங்கிலாந்து
இந்தோனேசியா
வேர்ச்சொற்கள்
கிறித்துவ சமயம்
இயேசு
ஈதல்
ஈத்
ஈசன்

ஈசுவரன்
ஈசா
ஜீசஸ்
ஏசு
மறி
மிறியம்
மரி
உவமம்
ஒள்
திருக்குறள்
ஒள்ளியோன்
ஒப்புமை
ஒவ்வு
உவட்டு
உவா
உவமை
திசை
அல்
தகழி
அலாவுதீன்
பூதம்
பூத்தல்
ஊது
ஊத்தை
எருமை
உண்மை
வாய்மை
மெய்மெய்
ஆதன்
பூதன்
ஆசிரியன்
குரு

உரு
உருவம்
அருவம்
ருவ
இமை
இம்
இம்மி
ஆலயம்
பூம்புகார்
நாட்டார்
நகரத்தார்
ஏனாதி
சிம்மாடு
அந்தம்
அம்புலி
அம்பணத்தி
அம்பட்டான்
ஆதி
அந்தகன்
காரணம்
காரியம்
அணம்
அயம்
காரகம்
அமுதம்
ஹைட்ரா
அம்மா
அமிழ்து
உலகம்
உலாவு
உலட்டி
ஞானம்

ஞாலம்
நாலம்
ஆணை
தூணி
அம்பு
இலக்கணம்
இலக்கியம்
காயம்
காயாம்பூ
காசினி
காவிரி
காயன்
அமரர்
அம்பாரம்
அம்பரம்
அமர்ணா
கபி
கவரி
கவடு
கவட்டை
சீவகசிந்தாமணி
கழகு
கழகம்
நீலம்
கப்பி
வண்ணம்
சுண்ணம்
கரகம்
கரணம்
மால்
சின்னம்

சின்னாறு
சூதர்
சளுவு
சூர்த்தர்
சூத்திறன்
நாடகம்
இயல்
இசை
குரல்
துத்தம்
கைக்கிளை
உழை
இளி
விளரி
தாரம்
கூத்து
நடனம்
நாட்டியம்
வாசப்பா
நிமித்தியன்
ஆத்திகம்
நாத்திகம்
தேவன்
நிலையம்
மாராயம்
செட்டி
எட்டி
பிராகிருதம்
பெருங்கதை
நச்சினார்க்கினியர்

ooo

நூற்பட்டியல்

*சங்க இலக்கியங்கள்

*தொல்காப்பியம்.

*தேவநேயப் பாவாணரின் நூல்கள்.

*டாக்டர் உ. வே. சாமிநாதையரின் தமிழ் இலக்கியங்களுக்கான விளக்கவுரைகள்.

*க. வெள்ளை வாரணனார், தமிழ் இலக்கிய வரலாறு, தொல்காப்பியம், அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு, *1978*.

*வீரமாமுனிவரின் சதுரகராதி, பதி. கு. இன்னாசி, தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை, *1979*.

*வின்ஸ்லோவின் தமிழ் - ஆங்கில அகர முதலி, ஆசியக் கல்விக் கழக வெளியீடு, புது தில்லி, *2001*.

*வெங்காலூர் குணா, வள்ளுவத்தின் வீழ்ச்சி, தமிழக ஆய்வரண், வெங்காலூர், *1996*.

*A. K. Bag, Science and Civilization in India, Navrang, New Delhi, *1985*.

*David Curystal, Ed., The Cambridge Encylopaedia, Cambridge University press, *1994*.

*Dr. R. Mathivanan, Indus Script Among Among Dravidian Speakers, ISIAC, Madras, *1995*.

*H. W. Fowler, Ed. Oxford Dictionary, OXford University Press, *1996*.

*Sir. John Marshall, Mohenjo - daro and Indus civilization, London, *1931*.

*Rev. Fr. Heras, The Religion of Mohenjo - daro, Journal of the University of Bombay, *1932*.

*.Andrew Humphergs, Egypt, Lonely Planet Publications, Australia, *1999*.

*.S.R. Rao, Lothal and Indus Civilizatioon, Asia Publishing House, New Delhi, *1973*.

*Bernadette Brady, Brady's Book of Fixed stars, Goodwill Publishing House, New Delhi, *1998*.

*.Cladius Ptolemy, the Almagest Great Books of the Work, Chicago, *1985*.

*Walker Barbara, The Women's Encylopaedia of Myths and Secrets, Sna Francisco, U. S., *1983*.

*H. H. Wilson, Rig veda Sanhita, Cosmo Publicaitons, New Delhi, *1987*.

*L. Spence, Myths and Legends of Babylonia and Assyria, Hale, Detroit, *1975*.

*.Justin Ben Adam, Hebrew Phrase Book, Lonely Planet Publications, Australia, *1999*.

*.Fr. Peter F. Ellis, The Men and Message of the Old Testament, Mount Saint Alphonsus Seminary, New York, *1962*.

*Fr. John Mckenzy, The Dictionary of the Bible, Published for the members of the Society of Jesus, U. S., *1960*.

*The New American Bible. (Translated from the original Hebrew versions of the Old Testament) Catholic Educational Guild, U. S.. *1962*.

*.Dr. N. Lehovary, The Dravidians and the West, New Delhi, *1963*.

*History of Tamilakam, Bhishma Publications, New Delhi, *1949*.

*Dr. S. Ilakkuvanar, Tolkappiyam, M. Neelamalar Educational Publishers, Madras, *1963*.

○○○

உலக மொழிகளில் தமிழே முதன்மொழி மூத்த மொழியென்று பல்வேறு தமிழறிஞர்களும், மேலை நாட்டு மொழியியலாரில்பலரும் கூறிவரும் நிலையில், தமிழ் முதன்மொழியன்று, எங்களது மொழியே முதன் மொழியென்று கூற, உலகின் எம்மொழியைச் சார்ந்தவர்களும் இது வரையில் முன்வரவில்லை. அப்படி முன் வருவாராயின், அதற்கானச் சான்றுகளை அளித்திட வேண்டும். அச்சான்றுகளுக்கு அடிப்படையான வரலாற்றைத் தெளிவாக்க வேண்டும்.

ம.சோ. விக்டர்

சுமேரியர்களுக்கு முந்திய உலக வரலாறு அறியப்படாத நிலையிலும், சுமேரியர்களும், பாபிலோனியர்களும், எகிப்தியர்களும் எவ்வினத்தைச் சார்ந்தவர்கள் என தெளிவாக்கப்படாத நிலையிலும், உலகின் முதற்குடியை அடையாளம் காண அறிஞர்களால் இயலவில்லை.

வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட மொழிகளாக அறியப்பட்ட செமிட்டிக் இன மொழிகளும், சுமேரியமும், அக்காடியமும், கனானியமும், எகிப்தியமும் இறந்துவிட்ட நிலையில், இன்றைக்கு எபிரேயம் என்ற மொழி மட்டுமே, பேச்சுவழக்கிலும் எழுத்து வழக்கிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. எபிரேய மொழி வல்லுநர்கள் கூட, தங்கள் மொழியே உலகின் முதன் மொழியென்று கூற முன் வரவில்லை.

கடந்த பல நூற்றாண்டுகளாக அறியப்படாத மொழியியல் ஆய்வு என்ற துறை, இருபதாம் நூற்றாண்டில் மேற் கொள்ளப்பட்டது. அது நாள் வரையிலும் தங்களது மொழி பற்றியும், அதன் பெருமைகள் பற்றியும் கூறிக் கொண்டிருந்த பல்வேறு மொழிகளைச் சார்ந்தோர், புதுப்புது ஆய்வுகள் வெளிவரத் தொடங்கியதும் அதிர்ச்சியுற்றனர்.

தமிழை ஆய்வு செய்த தேவநேயப் பாவாணர் போன்ற அறிஞர் பெருமக்கள், பன்மொழிகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, தமிழே உலகின் முதன்மொழியென்றனர். ஆனால் முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையில், தற்போது பன்மொழிகள் தொடர்பாக, ஆய்வறிஞர் திரு. ம.சோ. விக்டர் அவர்கள் எழுதிவரும் சொல் மற்றும் மொழியாய்வு நூல்கள், பலராலும் வரவேற்கப்பட்டு வருகின்றன.

இறந்துபட்ட மேலை நாட்டு மொழிகளான மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மொழிகளிலும், தமிழின் வேரும் மூலமும் ஊடுருவியுள்ளதை, நூலாசிரியர் நிறுவி வருகின்றார். குறிப்பாக, செமிட்டிக் மொழிக்குடும்பம் உள்ளிட்ட எபிரேயம் போன்ற மொழிகளில் காணப்படும் பலநூறு சொற்களின் வேர்கள் தமிழில் உள்ளதைத் தனது ஆய்வுகளால் மெய்ப்பித்து வருகின்றார். பன்மொழி ஆய்வாளர்களிடையே அறியப்படும் மயக்கம், திரு. ம.சோ. விக்டர் அவர்களின் ஆய்வுகளால் தெளிவு பெறும் எனக் கருதலாம். அந்த வகையில் வெளிவரும் நூலே, உலக மொழிகளில் தமிழின் வேர்ச்சொற்கள், என்ற நூலாகும். படித்தறிந்து கொள்ளப் பரிந்துரை செய்வதில் மகிழ்வுறுகின்றேன்.